# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

*காலேப் யோசுவா*
Cell :9444701953

*பிளாட் எண். 4, 2வது தெரு, மணலி சரவணா நகர்,*
*மாங்காடு, சென்னை - 600 122.*

## *ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிற மேய்ப்பன்.* *(யோ. 10 : 1)*

1. தேவனுடைய சித்தத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், இயேசு கிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்களுக்கு : நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும் பொருட்டு : உங்களை பரிபூரணப்படுத்துகிறதற்காகவும் (for the perfecting of saints), கிறிஸ்துவினுடைய ஊழியத்தின் பணிக்காவும் (for the work of the ministry), கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தியடைவதற்காகவும் (for the edifying of the body of Christ) நிர்பந்தமான மனுஷனும், கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனுமாகிய காலேப் யோசுவா எழுதுகிறதாவது : இங்கு நான் எழுதுகிறது என் மனவிருப்பத்தின்படி அல்ல, ஆவியானவர் வழிநடத்துதலின்படி இதை உங்களுக்கு எழுதுகிறேன். நான் இதை எழுத அவர் எனது கையில் காகிதங்களையும் ஒரு பேனாவையும் கொடுத்து, நீங்கள் நடக்க வேண்டிய நல்வழிகளை உங்களுக்கு போதிக்க, நீங்கள் உணர்த்து மனந்திரும்ப வேதவாக்கியங்களையும், இக்காலத்திற்குரிய செய்திகளையும் எழுத எண்ணங்களை என் உள்ளத்தில் வைத்து என் கரங்களை நகர்த்திக்கொண்டு செல்லுகிறார், நான் எழுதுகிறேன். அவ்வளவு தான் எனக்கு தெரியும். நான் எழுதி முடித்த பின்பு என்ன எழுதியுள்ளேன் என்று எனக்கு ஞாபகம் இருக்காது. நான் எழுதியதை ஞாபகம் வைத்து மறுமுறை எனக்கு எழுதவும் முடியாது. பிரியமானவர்களே உங்களுக்கு இரக்கமும் சமாதானமும் அன்பும் பெருகக்கடவது.

2. வஞ்சிப்பு : கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருகிற எனக்குப் பிரியமான பரிசுத்த சகோதரர்களே : சத்துரு நம்மை வஞ்சிக்கும் இந்நாட்கள் போன்று இது வரை எந்த ஒரு சபை காலத்திலும் இருந்ததில்லை. லவோதிக்கேயா சபை காலம் ஒரு கொடிதான வஞ்சிப்பின் காலம். நீ நிர்ப்பாக்கியம் உள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும். குருடனும் நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவும் இல்லை என்றும் சொல்லுகிறாய் (வெளி 3 : 17) பாருங்கள் ஒருவன் தன்னை அறிந்து உணர முடியாத, அதாவது தன் நிலைமையை குறித்து அறிய முடியாத நிலையில் இருக்கும் ஒரு வஞ்சிப்பு. பாருங்கள் இது பிசாசின் தந்திரமும், வஞ்சகமும் நிறைந்த நாட்களாகும். இதை மக்கள் புரிந்துக்கொள்வதில்லை. மக்கள் வஞ்சிக்கிற ஆவிக்கும், பிசாசின் உபதேசங்களுக்கும் செவிக்கொடுத்து, தங்களை தாங்களே மெச்சிக்கொள்கிறார்கள். ஆனால் இவர்கள் மத்தியில் எங்கு பார்த்தாலும் மாறுபாடான போதனைகள், வேற்றுமையான உபதேசங்கள். ஆதலால் விசுவாசிகள் மத்தியில் எங்கும் ஒரே குழப்பம். ஒவ்வொரு தனியார் சபைகளும் தங்கள் தங்கள் வழிகளை வகுத்துக்கொண்டு அதிலே நடக்கிறார்கள். ஏன்? இங்கு ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளனும், கொள்ளைக்காரனுமாகிய மேய்ப்பர்களுடைய வஞ்சக வலையில் மக்கள் உள்ளார்கள். பிசாசினுடைய வஞ்சகத்தோடு மட்டும் அல்ல. இது ஒருவன் தன்னைத் தானே வஞ்சித்துக்கொள்ளும் காலமுமாயிருக்கிறது. ஒருவன் தான் ஒன்றும் இல்லாதிருந்தும் தன்னை ஒரு பொருட்டாக எண்ணி தன் எண்ணங்களினால் தன்னை ஒரு ஞானியாக நினைத்துக்கொண்டு தன்னை தானே வஞ்சித்துக்கொள்கிறான். ஒருவன் தான் ஒரு அறைகுறை வேக்காடாக இருந்தும், ஒரு ஆப்பாயில் ஆம்லெட்டாக இருந்தும், தன்னை எல்லாம் அறிந்தவனாக மேன்மை பாராட்டி, தன்னை தானே வஞ்சித்துக்கொள்கிறான். முடிவில் அவன் இருக்கிற இடம் தெரியாமல் , பெயர் விலாசம் இல்லாமல் போய்விடுகிறான். இப்படிப்பட்ட அநேக மேய்ப்பர்களை நீங்கள் உங்கள் மத்தியில் கண்டீர்கள். சீர் அழிந்து போனவர்களின் பட்டியலை எழுதுவதில் என்ன பயன்?

3. பாருங்கள், இன்னும் சிலர் திருவசனத்தை கேட்கிறார்கள். அல்லேலூயா, ஸ்தோத்திரம், எனக் கோஷம் எழுப்புகிறார்கள். ஆனால் கேட்ட வசனத்தின்படி நடக்காது தங்களை தாங்களே வஞ்சித்துக் கொள்ளுகிறார்கள். தங்களுக்குள்ளே வேர் இல்லாததால், கேட்ட வசனத்தின் நிமித்தம் உபத்திரவமும், துன்பமும் உண்டான உடனே இடறலடைகிறார்கள். ஐசுவரியத்தின் மயக்கம் கேட்ட வசனத்தை நெருக்கிப்போடுகிறது. இதனால் பலனற்றுப்போகிறார்கள். வேதவாக்கியங்களை நன்கு அறிந்தும், மயிரைப் பின்னி, பொன் ஆபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்தி தங்களை புறம்பாக

அலங்கரிக்காமல் இவர்களால் இருக்க முடியவில்லை. (1பேதுரு 3 : 1-5) தேவனுடைய வசனம் தூஷிக்கப்படும்படியாக இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ள பாலிய ஸ்திரீகள் தங்கள் வீட்டில் தரித்திருக்காமல், பொதுஸ்தலங்களுக்கு சென்று பணிப்புரிந்து பொருளாசையுடையர்களாய், பணம் சம்பாதிப்பதை தங்கள் வாழ்க்கையின் இலட்சியமாக கொள்கிறார்கள். வீட்டில் ஒரு இராணியாக இருக்க முடியவில்லை. எல்லாம் பணஆசை தான். பணஆசையே எல்லாத் தீமைக்கும் வேராக இருக்கிறது (தீத் 2 : 4-5, 1தீமோ 6 : 10) அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு அநேகர் வழி விலகிப்போனார்கள். ஆக இது ஒரு பிசாசின் வஞ்சகமும், ஒருவன் தன்னை தானே ஒரு பொருட்டாக எண்ணி தன்னை வஞ்சித்துக் கொள்ளும் காலமாகவும், ஒருவன் தேவனுடைய வசனத்தைக் கேட்டு விசுவாசிக்கிறேன் எனக் கூறி, அதன்படி நடக்காது, தன் கிரியைகளினால் தான் கேட்ட வசனத்தை மறுதலித்து தங்களை தாங்களே வஞ்சித்துக் கொள்ளும் காலமாயிருக்கிறது.

4. ஆதலால் எனக்கு பிரியமானவர்களே, இந்நாட்களில் தங்களை கிறிஸ்தவர்கள் என அழைத்து கொள்பவர்கள் முற்காலங்களில் வளர்ந்த, வாழ்ந்த பரிசுத்தவான்களை காட்டிலும் மிக்க கவனமாக இருக்க வேண்டியது அவசியமாய் உள்ளது. ஏனென்றால் வஞ்சிப்பு இக்காலத்திற்குரிய செய்தியில் அல்லாதோர் தங்களை கிறிஸ்துவின் மணவாட்டிகளாகவும் நம்பச் செய்கிறது. பாருங்கள் உதாரணமாக ஜலத்தினால் மட்டும் பிறந்து ஆவியினால் பிறவாது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளராது (யோ 3:5, 2 பேது. 1:5-8) கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் நான் பரிபூரணமாக பெற்றுவிட்டேன் எனக்கூறி தங்களை, கிறிஸ்துவின் மணவாட்டி என பிரகடனம் செய்து தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்ளுகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் ஏழு தெய்வீக சுபாவங்களில் பரிபூரணப்படாத நீ அவருடைய சரீரத்தில் எப்படி பங்குப்பெறமுடியும்? யோசித்துப்பார்! சிந்தித்துப்பார்!! இது சிந்திக்கும் நேரம் ! செயல்படும் நேரம்!!.

5. இந்நாட்களில் பிசாசு எங்கும், எதிலும் தன்னால் முடிந்த வரை தன் வஞ்சகமான கண்ணியை வைத்திருக்கிறான். ஒரு மாடு அடிக்கப்படும்படி செல்வதுப்போலும், ஒரு மூடன் விலக்கிடப்பட்டு தண்டைக்கு போவதுப்போலும், ஒரு குருவி தன் பிராணனை வாங்கும் கண்ணியை அறியாமல் அதில் விழத் தீவிரிக்கிறது போலும், ஜனங்கள் அவன் பின்னே செல்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் கடிந்து கொள்ளுதலை கவனித்து நடவாமல் அதை அலட்சியம் பண்ணுகிறார்கள். பாருங்கள் இது கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும், வஞ்சிக்கப்படத்தக்கதான, கொடிதான வஞ்சிப்பின் காலமாகும் (மத் 24 : 24) ஆதலால் தான் சபைகளில் எங்குப்பார்த்தாலும் ஆட்டுத் தோலை போர்த்திய ஓநாய்களின் கூட்டம். கள்ளகபடமுள்ள வேலையாட்கள் எங்கும் பரவி இருக்கிறார்கள். ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளனும், கொள்ளைக்காரனுமாகிய மேய்ப்பர்கள் கூட்டம். இவர்களால் மாறுபாடான போதனைகள், வேற்றுமையான உபதேசங்கள். இதைக் கொண்டு ஜனங்கள் ஆயிரம் ஆயிரமாகப்பிரிந்து ஆளுக்கொரு பெயர் பலகைகளை தொங்கவிட்டுக்கொண்டு பிரிந்து இருக்கிறார்கள். ஆனாலும் பிரிந்து பிரிந்து, சின்னா பின்னமாக சிதறி கிடக்கும் ஒவ்வொரு கூட்டத்தினரும் தங்களை கிறிஸ்துவின் மணவாட்டி என அழைத்துக்கொள்ள தயங்குவது இல்லை. பெருமை பாராட்டிக்கொள்வதில் தளர்ந்து போவதும் இல்லை. ஆனால் கிறிஸ்து பிரிந்து இருக்கிறாரா? இதை சிந்தித்து பார்ப்பார் யாருமில்லை.

6. **குற்றச்சாட்டு :** சபை காலங்களில், அதன் கடைசி சபையாகிய லவோதிக்கேயா சபை தூதன் சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் மூலம் தேவன் சபைக்கு கொடுத்த செய்தியில் உள்ள விசுவாசிகளின் ஐக்கியத்தில் உள்ள பெரும்பாலான மேய்ப்பர்கள் (பாஸ்டர்கள்) ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியாக ஏறிய கள்ளனும், கொள்ளைகாரனுமாயிருக்கிற மேய்ப்பர்களாயிருக்கிறார்கள் என இந்த செய்தியின் மூலம் அவர்கள் மேல் குற்றம் சாட்டுகிறேன். பாருங்கள் சாத்தானுக்கு வேறு எங்கும் வேலை கிடையாது. ஒரு விக்கிரகாராதனைக்காரரிடம், ஒரு முஸ்லீம் இடம், ஸ்தாபன கிறிஸ்துவ மக்களிடம் அவனுக்கு வேலை கிடையாது. ஏனென்றால் அவர்கள் அவனுடைய ஆட்டுத் தொழுவத்தில் உள்ள ஆடுகளாக இருக்கிறார்கள். ஆதலால் அவனுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்ற மக்களிடத்தில் தான் வேலை. இவர்கள் மேலும் பெலப்படாமல் இவர்களை கீழேவிழத் தள்ளுகிறதே அவனுடைய பணி. ஆதலால் அவன் தீவிரமாய் அவனுடைய பணியில் ஈடுப்பட்டு வருகிறான். ஆட்டுத் தொழுவத்துக்குள் அவன் வாசல் வழியாய் நுழைய முடியாது. ஆதலால் வேறு வழியில் ஏறி தன் கூலி ஆட்களை வைத்துக் கொண்டு மக்களை ஏமாற்றுகிறான். இவர்கள் மந்தைக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் உண்டாகக் கூடிய அனைத்து பலன்களையும் தடுத்து வருகிறார்கள். சபைகளில் சத்தியம் தள்ளுபடியாகிறது.

7. நீங்கள் அறிந்து இருப்பது போல், இவர்களில் சிலர் திருடுவது இல்லை, பொய் சொல்லுவது இல்லை, தீய செயல்கள் எதுவும் புரிவது இல்லை, எளிதில் மூர்க்கம் அடைவது இல்லை, இவர்கள் அருமையானவர்கள், நல்லொழுக்கம் உடையவர்கள், இது உண்மைதான். ஆனாலும் இத்தகைய மக்களையும் இயேசு : நீங்கள்

உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள் என்கிறார் (யோ 8 : 44) ஏனென்றால் இவர்கள் கர்த்தரால் ஏற்படுத்தப்படாதவர்களாயிருப்பதால் தேவனுடைய வார்த்தையை இக்காலத்துக்குரிய செய்தியை அது உள்ளபடியே போதிக்க, நடக்க தவறிவிடுகிறார்கள். தங்கள் எண்ணங்களை வெளிப்பாடுகள் எனக்கூறி, தங்கள் கருத்துகளை தேவனுடைய வார்த்தையோடும், இக்காலத்திற்குரிய செய்திக்குள்ளும் நுழைத்து அத்துடன் வார்த்தையைக் கூட்டியும் குறைத்தும் மக்கள் விசுவாசத்தை கவிழ்த்து, குலைத்துப் போடுகிறார்கள். இதில் இந்நாட்களில் **சென்னை, சூளைமேடு, இயேசு கிறிஸ்துவின் ஜெப வீடு** இதில் தீவிரமாய் செயல்பட்டு வருகிறது என அதன் மீது குற்றம் சாட்டுகிறேன்.

8. **அழைப்பு :** தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்திற்குரிய செய்திக்கும் மாறாக போதிக்கும், உபதேசிக்கும் சபைகளோடும், அவைகளின் மேய்ப்பர்களோடும் என்னால் ஒருமித்து செல்ல முடியவில்லை. திருடர்களை காணும் போது அவர்களோடு ஒருமித்து போக முடியவில்லை. நான் அவர்கள் ஊழியங்களுக்கு விரோதமாக நிற்கிறேனேயன்றி தனிப்பட்ட ஒரு நபருக்கு விரோதமாக அல்ல. என்னை பொதுவாக எந்த சபையும் ஏற்றுக்கொள்ளவதில்லை. ஆனால் ஒவ்வொரு சபையிலும் அங்குள்ள ஏதோ சில நல்ல ஆவிக்குரிய மனிதர்கள் என்னை ஏற்றுக்கொண்டு என்னோடு ஐக்கியம் கொண்டுள்ளார்கள். நல்லது. நானோ இந்த கள்ளச்சபைகளின்பட்சமாக அல்ல, ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளர்களோடு அல்ல, கொள்ளைக்காரர்களாய் இருக்கிற மேய்ப்பர்களோடு அல்ல மாறாக இயேசுவின் பட்சம், அவருடைய சரீரமாகிய சபையின் பட்சம், அதன் பக்திவிருத்திக்காக கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட உண்மையும் உத்தமுமமான ஊழியர்களோடு சார்ந்து இருக்கவே விரும்புகிறேன். அவர்களோடு சார்ந்து இருக்கவே உங்களையும் வாருங்கள் என்று அழைக்கிறேன். நான் என் வாழ்க்கையில் என் ஊழியத்தின் பாதைகளில் அநேக காரியங்களில் தவறு செய்திருக்ககூடும். இனியும் நான் தவறு செய்யகூடும். ஆனால் நான் ஒரு மாய்மாலக்காரனாக இருக்க விரும்புவதில்லை. உங்களுடன் எப்பொழுதும் உண்மையாகவும், நேர்மையாகவும் இருக்க விரும்புகிறேன். சபைகளில் காணும் தவறுகளை கண்டிக்காமல் விடுவதில்லை. இதனால் தான் நாளுக்கு நாள் அநேக நெருக்கமான நண்பர்களை இழந்து வருகிறேன், பரவாயில்லை.

9. ஏற்கனவே என் மீது மூர்க்கவெறி கொண்டிருக்கும் மேய்ப்பர்கள் இன்னும் அதிகமாக என் மீது வெறி கொள்ள இந்த செய்தி அவர்களுக்கு சாதகமாக இருக்கும். இன்னும் சிலர் என் மீது புதிதாகவும் விரோதம் கொள்ளலாம். என்னோடு நீண்ட காலமாக பழகிய நண்பர்களை கூட வார்த்தையின் நிமித்தம் நான் விட்டு விலக வேண்டியதாயிற்று. இந்த பிரிவினைகளினால் உண்டான இருதயத்தின் நினைவுகள் மிகுதி. மனோ விசாரங்கள் மிகுதி, ஆனால் நானோ ஆவியானவரின் வழி நடத்துதலின்படி, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் பக்தி விருத்திக்காக இச்செய்தியை எழுதுகிறேன். இது நிச்சயமாக இயேசு கிறிஸ்துவின் மந்தையில் உள்ள ஆடுகளின் ஆத்துமாவுக்கு பிரயோஜமாயிருக்கும் என உறுதிக்கொண்டுள்ளேன்.

10. சிலர் என்னிடம் : நீங்கள் எழுதுகிறது சரிதான். தேவனுடைய வார்த்தையிலிருந்தும், இக்காலத்திற்குரிய செய்தியிலிருந்தும் தேவையான கருத்துகளை எழுதி சபையுயையும், அதன் மேய்ப்பர்களையும் கண்டிக்கிறீர்கள். அது நல்லது தான். ஆனால் உங்களால் இந்த மேய்ப்பர்களை திருத்த முடியாது. அவர்கள் கர்த்தரால் அவர்களுடைய கிரியைகளுக்காகவே நியமிக்கப்பட்டவர்கள். மேலும் இந்நாட்களில் ஜனங்கள் பாஸ்டர் வணக்கத்தில் மிக்க பக்திவைராக்கியமாக இருக்கிறார்கள் என்கிறார்கள். இந்த ஜனங்கள் தேவனுடைய பாதத்தில் விழுந்து அவருடைய வார்த்தைகளினால் போதனை அடையாமல் ஆட்டுத் தொழுவத்திற்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிற மேய்ப்பர்களுடைய பாதத்தில் விழுந்து அவர்களுடைய வெளிப்பாடுகளில், வார்த்தைகளினால் போதனை அடைகிறார்கள். ஆதலால் மேய்ப்பர்களை கண்டித்து எழுதுவதில் பியோஜனம் ஒன்றுமில்லை என்கிறார்கள். நீங்கள் தொடர்ந்து எழுதுவீர்களானால் அதனால் உங்கள் பிள்ளைகள் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பணத்தை வீணாக்குகிறீர்கள். மேலும் உங்கள் காலநேரம் வீண். மேலும் நீங்கள் தேவையற்ற காரியங்களில் ஈடுபடுகிறீர்கள் என எனக்கு மனமடிவு உண்டாக்க பேசுகிறார்கள். ஆனால் கள்ள கபடமுள்ள மேய்ப்பர்கள் சுட்டிக் காட்டப்பட வேண்டும், அவர்களுடைய தவறான போதனைகள் குறித்து எச்சரிக்கை பிரஸ்தாபப்படுத்தப்பட வேண்டும். ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளனும் கொள்ளைகாரனுமாயிருக்கிற மேய்ப்பர்கள் அடையாளம் காட்டப்பட்ட வேண்டும். தியானியுங்கள் எசே 34 அதி. எரே 23 : 2,1 கொரி 4 : 1-4 பாருங்கள் புறம்பே இருக்கிறவர்களை குறித்து தேவன் தீர்ப்பு செய்வார். ஆனால் உள்ளே இருக்கிறவர்களை குறித்து நான் வேதவாக்கியங்களை கொண்டு தீர்ப்பு செய்யலாம். அது நான் அல்ல. தேவனுடைய வார்த்தையே அவர்களை நியாயம் தீர்க்கிறது. யோ 12 : 48. மேலும் நான் இந்த மேய்ப்பர்களை திருத்துவதற்காக இந்த செய்தியை எழுதவில்லை. முன் நாட்களிலும் நான் எழுதியதில்லை. இந்த மேய்ப்பர்களை திருத்துவதற்கு நான் யார்? அது கர்த்தர் எனக்கு கொடுத்த ஊழியமும் இல்லை. கர்த்தர் அதற்காக எனக்கு ஒரு ஊழியத்தை கொடுக்கவும் இல்லை. ஆதலால் நிச்சயமாக நான் இதை செய்ய முடியாது. நான் செய்வது என்ன? நான் கிறிஸ்துவின் சரீரமாகிய சாபையில்உள்ள ஆடுகளுக்காகவே கவலைப்படுகிறேன். நான் கள்ள கபடமுள்ள வேலை

ஆட்களை சுட்டிகாட்டும் போது, அவர்களுடைய தவறான போதனைகளை, உபதேசங்களை சுட்டிகாட்டும்போது, ஆடுகள் இந்த சத்தத்தை கேட்டு, தங்களை சுதாரித்து கொள்ளுகின்றன. அது அவர்கள் பின் செல்வதில்லை. பாருங்கள், தவறு என்பது சுட்டிக்காட்டப்பட்டு, அதை தேவனுடைய மந்தையில் உள்ள ஆடுகள் கேட்கும் போது, அதிலிருந்து தங்களை விடுவித்து கொள்ளுகின்றன. அப்படிப்பட்ட ஆடுகளை குறித்து தான் கர்த்தர் : என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவி கொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்கு பின் செல்கிறது என்கிறார் (யோ 10 : 27) பாருங்கள் தவறான உபதேசங்களில், போதனைகளில் இருக்கும் மக்கள் தேவனுடைய வார்த்தையை கேட்டு இயேசுவின் பட்சம் திரும்புகிறார்கள். தேவனுடைய ஆட்டு மந்தையாகிய தொழுவத்துக்குள் வேறு வழியில் ஏறி, கர்த்தரால் நான் நியமிக்கப்பட்ட, ஏற்படுத்தப்பட்ட ஊழியக்காரனான மேய்ப்பன் என் உரிமை கொண்டாடும் கள்ளனும் கொள்ளைகாரனுமாயிருக்கிற மேய்ப்பர்களை நான் அடையாளம் கண்டுக்கொண்டு, அவர்களை சுட்டிக்காட்டி அவர்களை விட்டு வெளியே வாருங்கள் என உங்களை அழைக்கிறேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கு ஊழியம் செய்யும், தங்கள் பெயர் பிரஸ்தாபத்துக்கு ஊழியம் கொண்டுள்ள, சொத்து சுகங்களை சேர்ப்பதிலே கண்ணோட்டாமா உள்ள கள்ளனும் கொள்ளைகாரனுமாயிருக்கிற மேய்ப்பர்களை விட்டு வெளியே வாருங்கள் என உங்களை அழைக்கிறேன். நான் எப்பொழுதும் என் கடமையின் பாதையில் உண்மை உள்ளவனாக இருக்க விரும்புகிறேன்.

11. **கிறிஸ்துவின் சரீரமாகிய சபை :** கிறிஸ்துவின் பெயரில் நம் மத்தியல் காணப்படும் தென்னிந்திய திருச்சபை, தென்னிந்திய சுவிஷேச திருச்சபை, அசெம்பளி ஆப் காட், தி பெந்தெகொஸ்தே சபை போன்ற அநேக உலக பிரகாரமான ஸ்தாபன சபைகள் உண்டு. இவைகளில் சிலவற்றில் அவயவமாவதற்கு ஒருவர் ஏதோ ஒரு கிறிஸ்துவ குடும்பத்தில் பிறந்திருந்தால் போதும். இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம் எனக்கூறுபவர்கள் மத்தியல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றால் போதும். இன்றும் இயேசு நாமம் என்று அழைக்கப்படும் சபையில் இயேசு நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றால் போதும். இன்னும் சில சபைகளில் எடுத்துக்காட்டாக தென்னிந்திய திருச்சபையில் குழந்தைகளுக்கு தலையில் தண்ணீர் தெளித்தால் போதும். இப்படியாக ஸ்தாபன சபை அவரவர்கள் தீர்மானித்தப்படி மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து தங்கள் ஆதிக்கத்தின் கீழ் உள்ள சபைகளில் ஒன்றில் சேர்த்துக்கொள்கிறார்கள். தங்களை கிறிஸ்தவர்கள் என அறிக்கையும் பண்ணிக்கொள்கிறார்கள்.

12. ஆனால் **கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒருவர் அவயவமாக :** முதலில் ஒருவன் கிறிஸ்து தன் பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், உயிர்த்தெழுந்தார் என விசுவாசிக்க வேண்டும். பின் தன் பாவங்களுக்காக (இதுவரை செய்த பாவங்களுக்காக, இனி செய்யப்போகும் பாவங்களுக்காக அல்ல) மனம் திரும்ப வேண்டும். பின் தன் பாவமன்னிப்புக்காக தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறவேண்டும். அதன்பின் பரிசுத்த ஆவியை பெறவேண்டும். ஜலத்தினால் பிறப்பது சகோதரர்கள் மத்தியில் ஐக்கியத்தை கொண்டு வருகிறது. ஜலத்தினால் பிறப்பதின் மூலம் நீங்கள் செய்த பாவங்கள் மனிக்கப்பட்டது. ஆனால் ஞானஸ்நானத்திற்கு பிறகும் நீங்கள் பாவம் செய்ய வாய்ப்பு உண்டு. இதற்கும் பழைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. ஜனத்தினால் பிறந்த பிறகு நீங்கள் ஆவியினால் பிறந்து, தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ள வேண்டும் (எபே 4 : 23, 24) பரிசுத்த ஆவியை பெற்று, ஆதி 1 : 21 ன் படி தேவனுடைய சாயிலில் புது சிருஷ்டியாக நீங்கள் சிருஷ்டிக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவின் ஏழு தெய்வீக சுபாவங்கள், விசுவாசம், வல்லமை, ஞானம், தன்னடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகத்தில் ஒன்றன் பின் ஒன்றாக பரிபூரணப்பட்டு ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியை நீங்கள் அடையும் போது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவயவமாகிறீர்கள். நீங்கள் ஐந்து வகை ஊழியங்களை கொண்டு வழிநடத்தப்பட்டு (அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, சுவிசேஷகன், மேய்ப்பன், போதகன்) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தில் கிரமமாக ஒன்றன் பின் ஒன்றாக முழுவளர்ச்சியை அடையும்போது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் நீங்கள் அவயவங்களாகி, கர்த்தருடைய வருகையில் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட ஆயத்தமாகிறீர்கள். மேலும் சற்றுக் கவனியுங்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவயவங்களாக முதலில் நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும். அதாவது நீங்கள் ஜலத்தினாலும், ஆவியினாலும் மறுபடியும் பிறக்க வேண்டும் (யோ 3 : 5). ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் மட்டும் பிறந்தால் போதாது.

13. ஜலத்தினால் பிறப்பது உங்களை விசுவாசிகளின் ஐக்கியத்தில் ஒரு பேர் பலகையில் கீழ் கூட்டிச்சேர்க்கிறது. இப்பொழுது நீங்கள் நான் எல்பெத்தேல் சபை, இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு, கல்வாரி சபை, சென்னை சபை போன்ற பேர் பலகைகளின் கீழ் தனியார் கம்பெனிகளில் சேர்கிறீர்கள். இங்கு விசுவாசிகள், அவிசுவாசிகள், பாவனை விசுவாசிகள், பேர் கிறிஸ்தவர்கள் போன்ற பல குரூப்பை சேர்ந்த மக்கள் உண்டு. ஆதலால் இங்கு பலவிதமாக கொள்ளைகள் உண்டு. ஒருவர் இனி எங்களுக்கு ஞானஸ்நானம் தேவையில்லை என்று சொல்லுகிறார்கள். அடுத்தவர் அதை மறுக்கிறார். ஒருவர் பெண்கள் தங்கள் தலையை

தங்கள் சேலை முந்தானையால் முக்காடிட்டு கொள்ள வேண்டும் என்கிறார், அடுத்தநபா போடுவது தவறு என்கிறார். ஒருவர் அரசாங்க அல்லது தனியார் நிறுவனங்களில் வேலை செய்கிறவர் மேய்ப்பன் பணிக்கு தகுதியற்றவர் என்கிறார். அடுத்தநபர் அதில் தவறு ஒன்றுமில்லை, மேய்ப்பன் படித்து பட்டம் பெற்றவனாக இருந்தால் தான் வேதவாக்கியங்களையும் இக்காலத்திற்குரிய செய்திகளையும் நன்கு கற்று சபைக்கு போதிக்க முடியும் என்கிறார். ஒருவர் கர்த்தருக்குரிய தசமபாகத்தை கொண்டு சபைக்கு கட்டிடம் கட்டலாம் என்கிறார். அடுத்த நபர் அதுகூடாது, கர்த்தருக்குரிய தசமபாகம் ஐந்து வகையான ஊழியங்களை செய்கிறவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்படவேண்டும் என்கிறார். இப்படியாக பற்பல போதனைகள், உபதேசங்கள், கொள்கைகள் இவர்கள் மத்தியில் காணப்படுகிறது. இதனால் இவர்கள் மத்தியில் அடிக்கடி பிரச்சனைகளும் குழப்பங்களும் ஏற்பட்டு பெயர் பலகைகளின் எண்ணிக்கைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. கம்பெனி முதலாளிகள் (மேய்ப்பர்கள்) எண்ணிக்கையில் கூடிக்கொண்டே செல்கின்றா். இங்கு பல திட்டங்களை தீட்டி வசூல் வேட்டையும் நடைபெறும். இங்கு மேய்ப்பர்களின் ஆதிக்கமே மேலோங்கி நிற்கும். ஆதலால் பாஸ்டர் வணக்கம் இங்கு உண்டு. இந்த சபைகளில் எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாய் இருக்கிற பெண்பிள்ளைகளை ஆதாயம் பண்ணிக்கொள்கிறார்கள். ஆதலால் அவர்கள் தங்கள் புருஷர்களிடம் : பார் என்னுடைய மேய்ப்பன், என்னுடைய ஆவிக்குரிய புருஷன். அவர்தான் முதலாவது. நீ என் சரீரத்திற்குரிய புருஷன். ஆதலால் ஒரு மனைவி தன் புருஷனைப் பார்த்து நீ எனக்கு இரண்டாவது எனக்கூறும் அளவிற்கு அந்த மேய்ப்பர்களால் கற்றுக்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த சபைகளில் அடியாட்கள் உண்டு. இந்த அடியாட்கள் தான் இந்த சபைக்கு காவல்துறை. மேலும் இந்த சபைகளில் தரித்திரர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் தனித்தனி மரியாதை உண்டு. மரியாதைகள் யாவும் அந்த நபருடைய பொருளாதார நிலையை பொருத்திருக்கும். இங்கு விசுவாசிகளுக்கு ஏற்ப போதனைகளும் இருக்கும். மக்களை பிரியப்படுத்துவதற்கு ஏற்ப பிரசங்கள் இருக்கும். செக்ஸ் துணுக்குகளும் இடை இடையே இருக்கும். இது வாலிப ஆண், பெண் பிள்ளைகளை சபை கூடுதலுக்கு கவர்ச்சிப்பதற்க்காகவே. சில சபைகளில் காலேப் யோசுவாவோடு ஐக்கியம் வைத்திருக்கிறவர்கள் இந்த சபைக்கு வரக்கூடாது என்ற கண்டிப்பும் உண்டு. இப்படியாக நான் எழுதிக்கொண்டே போகலாம்.

14. முடிவு : ஒருவனை இவர்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும், பூமியையும், சுற்றித் திரிகிறார்கள். கடைசியில் மேய்ப்பனும் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கமாட்டான். அவனை சார்ந்திருக்கிறவர்களும் பிரவேசிக்கமாட்டார்கள். ஒருவன் ஆவியில் மறுப்பிறப்பு அடைய வேண்டும். கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவன் அல்ல. யோ. 3 : 5, ரோ 8 : 9 பாருங்கள் Marvel not that I said unto thee, you Must be born again (Jn 3 : 7) Must என்றார். அதற்கு absolutely you have to do என அர்த்தம். அதாவது நீங்கள் கண்டிப்பாக மறுபடியும் பிறக்க வேண்டும் என அர்த்தம். மறுப்பிறப்பு என்பது உங்கள் ஆத்துமாவில் ஒரு மாற்றம். இது ஒரு அனுபவம். பாருங்கள் உங்களில் தங்கியுள்ள ஆவியின் தன்மை தான் உங்கள் ஆத்மா. கிறிஸ்துவின் ஆவி உங்களில் தங்கியிருக்குமானால் நீங்கள் கிறிஸ்துவின் தன்மைகளை உடையவர்களாக ஒரு மாற்றம் அடைகிறீர்கள். இந்த உலகத்தின் ஆவி உங்களில் தங்கியிருக்குமானால் இந்த உலகத்தின் தன்மை உங்களில் காணப்படும். இந்த பூமியில் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் உண்டான மாம்ச இச்சையினால் பிறந்த நீங்கள் (மாம்ச இச்சை தேவனால் உண்டானது அல்ல) அதற்கு மரித்து, அதாவது இந்த உலகத்துக்கு மரித்து, தேவனுடைய ஆவியினால் மறுபடியும் பிறக்க வேண்டும். இந்த உலகத்துக்கு ஒருவன் மரிக்கும் போது அவன் ஆத்துமாவில் ஒரு மாற்றம். இப்பொழுது அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஒரு புது சிருஷ்டி. அவன் தேவனுடைய சாயலாய் சிருஷ்டிக்கப்படுகிறான். (எபே 4 : 24) பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின (2கொரி 5 : 17) ஒரு காலவரம்புக்கு உட்பட்ட ஜீவனை பெற்று கிறிஸ்துவினுடைய தன்மைகள், ஜீவியம் அவனில் வளர்கிறது. (1பேதுரு 1 : 23) இப்பொழுது அவன் தேவனால் பிறந்தவன் (யோ 1:13) இப்பொழுது அவன் பாவம் செய்ய முடியாது. (1யோ3:9) ஏனென்றால் கிறிஸ்துவின் ஜீவன் அவனில். இவ்வாறாக மறுப்பிறப்பு அடைந்து இயேசு கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தில் பரிபூரணப்பட்டவர்களின் சரீரம் தான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை. இது நல்ல மேய்ச்சலை மேய்கிற மந்தை. இது அந்நியனை விட்டு ஓடிப்போகும். இது தேவனுடைய வார்த்தைக்கும் இக்காலத்திற்குரிய செய்திக்கும் விரோதமான, மாறுபாடான உபதேசங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளாது. பழைய ஏற்பாடு காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய மந்தை (சங் 79 : 13, 95 : 7) புதிய ஏற்பாட்டில் யூதராயினும் கிரேக்கராயினும் அடிமைகளாயினும், சுயதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவியினாலே தாகம் தீர்க்கப்பட்டவர்கள்தான் தேவனுடைய மந்தை. 1கொரி 12 : 13 இது ஒரு காணக்கூடாத சரீரம் (Mystical Body) இது கிறிஸ்து பிறந்து 331/2 ஆண்டில் பாலஸ்தீனாவில் உள்ள எருசலேமில் பெந்தெகொஸ்தே நாள் அன்று 3120 (120+3000) பேரைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது (அப் 2 : 1,1:15, 2 : 38, 41,47) இந்த சபை இன்று வரை நீடித்து வருகிறது. இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்தில் வரும் போது இது எடுத்துக்கொள்ளப்படும். ஏழாம் சபைக்காலம் முடிந்து விட்டது என்கிறார்கள். அப்படியானால் தாங்கள் கிறிஸ்துவின் மணவாட்டி என்று கூறிக்கொண்டு திரியும் இவர்களுக்கு இங்கு என்ன வேலை? ஒருவேளை இவர்கள் கைவிடப்பட்ட புத்தியில்லாத கன்னிகைகளாக இருப்பார்களோ?

15. அ) சில சபைகளில் கள்ள கபடமுள்ள வேலையாட்கள, ஆட்டுத்தொழுவத்திற்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளர்கள் மக்களை தவறான போதனைகளினால ஏமாற்றுவதை பார்க்கிறேன். இவர்கள் மேன்மை பாராட்டுகிற காரியங்களில் சாத்தானும் மேன்மை பாராட்டுவதை காண்கிறேன். கிறிஸ்துவின் மணவாட்டி என தங்களை அழைத்துக்கொண்டு இவர்கள் மேன்மை பாராட்டுகின்ற காரியங்களில் சாத்தானும் மேன்மை பாராட்டும் போது So called மணவாட்டியின் மேன்மைதான் என்ன? இவர்கள் தங்களை கிறிஸ்துவின் மணவாட்டி என்று கூறிக்கொண்டு நாங்கள் ஒரே தேவன் உண்டு என்று விசுவாசிக்கிறோம். (எபே 4 : 6, மாற் 12 : 29) நாங்கள் திரித்துவத்தை விசுவாசிப்பது இல்லை. இயேசு மட்டுமே (Only Jesus) என்ற போதனையை ஏற்றுக்கொள்வது எனக் கூறி மேன்மை பாராட்டுகிறார்கள். அது நல்லது தான். ஆனால் இவர்கள விசுவாசிப்பதை பிசாசும் விசுவாசித்து நடுங்குகிறானே? (யாக் 2:19) அப்படியானால் இந்த so called மணவாட்டியின் மேன்மை தான் என்ன?

ஆ) இவர்கள் மனம் திரும்பி தங்கள் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுவிட்டோம், பெரிய சாதனை ஒன்றை செய்துவிட்டோம் என்று கூறி மேன்மை பாராட்டுகிறார்கள். ஆனால் ஞானஸ்நானத்திற்கு பின்பு இவர்களுடைய வாழ்க்கை முந்திய வாழ்க்கையை விட மிக மோசமாக இருக்கிறது. பழைய சுபாவங்கள் இவர்களை விட்டு நீங்கியதாக தெரியவில்லை. இவர்கள் ஞானஸ்நானம் பெற்றதை நான் குறைகூறவில்லை. இவர்கள் செய்தது சரி தான். ஆனால் கவனியுங்கள், நீங்கள் இதை அப் 8வது அதியில் தியானிக்கலாம். இங்கு சீமோன் என்று பெயர்கொண்ட மாயவித்தைக்காரன் இருந்தான். தன்னை ஒருபெரிய மனிதனாக காட்டிக்கொண்டான். ஜனங்களை பிரமிக்க பண்ணிக்கொண்டிருந்தான். இவன் தேவனுடைய பெரிதான சக்தி என சிறியோர், பெரியோர் எண்ணி அவனுக்கு செவிக்கொடுத்து வந்தார்கள். மதித்து வந்தார்கள். பிலிப்பு என்ற சுவிசேஷகன் தேவனுடைய ராஜ்யத்திற்கும், இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்திற்கும் ஏற்றவைகளை குறித்து பிரசங்கிப்பதை கேட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றான். பேதுரு,'யோவான் இங்கு வந்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் மேல் கைகளை வைத்து ஜெபம் பண்ண அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றார்கள். இதை பார்த்துக் கொண்டிருந்த சீமோன், பேதுருவிடம் வந்து அந்த வரத்தை பணத்தை லஞ்சமாக கொடுத்து பெற முயற்சித்தான். ஏனென்றால் அவன் இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையாக இல்லை. அவன் கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருந்தான். இங்கு நம்மிடையில் ஞானஸ்நானம் பெற்றவர்களின் நிலையும் அதுதானே? இந்த சீமோன் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தான். ஆனால் சரியான மனம் திரும்புதல் அவன் வாழ்க்கையில் இல்லை. அதே நிலைதானே நம் மத்தியில் காணப்படுகிறது. அப்படியானால் அவனை விட நீங்கள் மேன்மை பாராட்ட என்ன இருக்கிறது? நாங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுவிட்டோம். இதோ மத்திய ஆகாயத்திற்கு பறக்க தயாராக இருக்கிறோம் என்கிறீர்கள். உங்களை நீங்களே ஏமாற்றி கொண்டு வருகிறீர்கள். மாயவித்தைகாரனிடத்தில் ஞானஸ்நானத்திற்கு பிறகும் காணப்பட்ட அதே சுபாவம் தான் உங்களிடமும் காணப்படுகிறது. ஆதலால் நீங்கள் மேன்மை பாராட்டும் ஞானஸ்நானத்திற்கடுத்த காரியத்தில் அவனும் மேன்மை பாராட்டுவதால், உங்கள் மேன்மை பாராட்டுதலில் விசேஷம் ஒன்றும் இல்லையே.

இ) நீங்கள் நாங்கள் சபை கூடுதலை விட்டு விடாது பிரதி ஞாயிறு காலை தவறாது சென்று வருகிறோம் என்கிறீர்கள் (எபி 10:25). நல்லது தான். ஆனால் உங்களைப் போன்று அவிசுவாசிகளும், பாவனை விசுவாசிகளும், பேர் கிறிஸ்தவர்களும் பிரதி ஞாயிறு காலை ஒழுங்காக சபை கூடுதலுக்கு சென்று வருகிறார்களே? நீங்கள் சபைக்கூடுதலின் நேரத்தில் மட்டும் அல்லேலூயா, ஸ்தோத்திரம் எனக்கூறி பரவசப்படுகிறீர்கள். சபைக்கூடுதலை விட்டு வெளியே 'வந்த பின் உங்கள் வாழ்க்கை ஒரு கேள்விகுறியாக அல்லவா இருக்கிறது? அதே போன்று பாருங்கள் ஒரு கூட்டம் ஜனங்கள் தேவனுடைய பிள்ளைகள் போன்று சபைகூடும் இடத்தில் பிரசங்க பீடத்திற்கு முன்பு வந்து உட்கார்ந்திருக்கிறார்கள். தேவனுடைய வார்த்தையை கேட்கிறார்கள். ஆனால் அதன்படி செய்கிறது இல்லை. தங்கள் வாயினால் இன்பமாக பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் இருதயத்தில் வஞ்சனை, சூது, பொருளாசை. நீங்களும் அதே நிலையில் தான் காணப்படுகிறீர்கள். அப்படியானால் சபை கூடுதலில் பங்கு கொள்ளும் அந்த ஜனங்களும் உங்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்ன? நீங்களும் அவர்கள் போலவே இருப்பதால் உங்கள் மேன்மையில் என்ன நியாயம் இருக்கிறது?

ஈ) நீங்கள் கர்த்தருக்குரிய தசமபாகத்தையும், சபைக்கடுத்த காணிக்கைகளையும்ஒழுங்காக கொடுத்து வருகிறோம் என மேன்மை பாராட்டுகிறீர்கள் (ஆதி 14 : 20) இதுவும் நல்லது தான். ஆனால் இதை அந்த பரிசேயனும் செய்கிறானே (லூக் 18:12). பாருங்கள், நீங்கள் செய்கிறதை அந்த பரிசேயனும் செய்கிறபடியால் உங்கள் மேன்மை என்ன? நீங்களே நிதானித்துப் பாருங்கள்.

உ) நீங்கள் கர்த்தர் என்னோடு அனுதினமும் இடைப்படுகிறார், பேசுகிறார், நடக்கிறார், சாப்பிடுகிறார், என பலவாறு உங்களை புகழ்ந்து மேன்மைப் படுத்திப்பேசலாம். ஆனால் பிலேயாம் ஒரு கள்ளத்தீர்க்கதரிசி. இஸ்ரவேல் ஜனங்களை விபச்சாரத்துக்குள்ளும், பாவத்திற்குள்ளும் வழிநடத்தினான். தேவன் அவனோடு இடைப்பட்டார், பேசினார் (2பேதுரு 2:15, 16, யூதா 11, வெளி 2 : 14) அப்படியானால் பிலேயாமைவிட உங்கள் மேன்மை என்ன? தேவன் அவனோடு இடைப்பட்டது போல உங்களோடும் இடைப்படுகிறார் என்று தானே

கூறமுடியும். பாருங்கள, யூதாஸ், கேட்டின் மகன் (யோ 12 : 16) திருடன் (யோ 12 : 16) ஆனாலும் அவன் ஒரு அப்போஸ்தலன், தேவன் அவனையும் ஒரு ஊழியத்திற்கு தேர்ந்தெடுத்தாரே? அவனோடும் இடைப்பட்டாரே? அப்படித்தான் உங்களிடத்திலும் இடைப்படுகிறார் என்று கூறலாம் அல்லவா?

ஊ) நீங்கள் உங்களை கர்த்தர் ஆவிக்குரிய ஆசீர்வதங்களினால் ஆசீர்வதித்திருக்கிறார் என கூறலாம். நான் ஜெபிக்க பிசாசுகள் ஓடுகின்றன. வியாதிகள் சுகமாகின்றன, நொண்டிகள் நடக்கிறார்கள் என கூறலாம். அதோ அக்கினி ஸ்தம்பம், இதோ மேகஸ்தம்பம் எனக்கூறி மேன்மை பாரட்டலாம். இதுவும் நல்லது தான். ஆனால் அப். யோவான் கர்த்தரிடம் நம்மை பின்பற்றாத ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே பிசாசுகளை துரத்துகிறதை கண்டோம், வியாதியஸ்தர்களை குணமாக்குகிறதை கண்டோம் என்றனர் (மாற் 9:38) இவர்களை குறித்து கர்த்தர் : நான் உங்களை அறியேன் என்றார். அக்கிரம செய்கைக்காரர்களே என்னை விட்டு அகன்று போங்கள் எனவும் கூறினார்.( மத் 7:22,23) பாருங்கள் நீங்கள் செய்கின்ற காரியத்தை கர்த்தரை சார்ந்திராதவனும் செய்கிறான். அப்படியானால் உங்கள் மேன்மை தான் என்ன?

எ) இதோ நான் பரிசுத்த வேதாகமத்தை ஐந்து முறை படிக்கிறேன். மேலும் தீர்க்கதரிசியின் செய்திகள் 1200 க்கு மேற்பட்டதை படித்து தியானித்து இருக்கிறேன் எனக்கூறலாம். பாருங்கள் இங்கே இது எழுதியிருக்கிறது, அங்கே அது எழுதியிருக்கிறது எனக்கூறி மேன்மை பாராட்டலாம். ஆனால் அதே வேளையிலே பிசாசும் **என்பதாக எழுதியிருக்கிறதே** என்கிறானே லூக் 4:11. நீங்கள் வேதவாக்கியங்களையும், தீர்க்கதரிசியின் செய்திகளையும் அறிந்திருப்பது போன்று அவனும் அறிந்திருக்கிறானே, ஆதலால் கிறிஸ்துவுக்குள் எனக்கு அருமையானவர்களே நீங்கள் ஒரே தேவன், ஞானஸ்நானம், தசமபாகம், சபைக்கூடுதல், தேவனுடைய வார்த்தை, இக்காலத்திற்குரிய செய்தி குறித்து அறிந்திருக்கிற அறிவில் மேன்மை பாராட்டுதலின் ஒன்றும் இல்லை. நீங்கள் மேன்மை பாராட்டும் காரியத்தில் சாத்தானும் தன்னை குறித்து மேன்மை பாராட்டுகிறான். ஆதலால் இப்படிப்பட்ட காரியங்களில் நீங்கள் மேன்மை பாராட்டி பாராட்டி உங்கள் ஆத்துமாவை இழந்து விடாதீர்கள். அப்படியானால் நீங்கள் செய்ய வேண்டியது என்ன? நீங்கள் ஜலத்தினாலும், ஆவியினாலும் மறுப்பிறப்பு அடைந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஏழு தெய்வீக சுபாவங்களில் பரிபூரணப்படவேண்டும். அதுதான் முக்கியம். அது தான் உங்கள் மேன்மை, மணவாளனின் சுபாவம் மணவாட்டியிடம் காணப்படவேண்டும், அதுவே உங்களை கிறிஸ்துவின் மணவாட்டிக்கு தகுதிப்படுத்துகிறது. ஆதலால் இதோ இப்பொழுதே மத்திய ஆகாயத்துக்கு பறக்க ஆயத்தமாய் இருக்கிறோம் என கூறிக்கூறி உங்களை வஞ்சிக்கும் உங்கள் மேய்ப்பனின் குரலை குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். உங்கள் பந்தயப்பொருளை இழந்து போகாதீர்கள்.

16. **ஐந்துவகை ஊழியங்கள் :** பெந்தெகொஸ்தே நாளில் ஆரம்பமான கிறிஸ்துவின் சரீரமாகிய சபை எடுத்துக்கொள்ளப்படும் வரை கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதை தமக்கு முன் நிறுத்தி கொள்வதற்காக கர்த்தர் ஐந்து வகை ஊழியங்களை ஏற்படுத்தினார். இந்த ஐந்து வகை ஊழியத்தில் ஒரு ஊழியத்தில் கர்த்தர் ஒருவனை ஏற்படுத்தினால் ஏடுபடுத்தியதுதான். அவன் அந்த ஊழியத்தின் தொடக்கம் முதல் முடிவு வரை அதே பணியில் தான் இருப்பான். இந்த ஐந்து வகை ஊழியங்களில் உயர்வு தாழ்வு எதுவும் கிடையாது. கர்த்தர் ஒருவனை சுவிசேஷகனாக ஏற்படுத்தினால் அவன் தன் ஊழியத்தில் முடிவு பரியந்தம் சுவிசேஷகனாகவே இருப்பான். அவ்வாறாகவே இதர நான்கு வகை ஊழியங்களும். கர்த்தர் ஒருவனை மேய்ப்பனாக ஏற்படுத்திய பின் அவனுக்கு பணி உயர்வு கொடுத்து அவனை சுவிசேஷகனாக ஏற்படுத்துவதில்லை. பாருங்கள் கர்த்தர் அவனை அழைத்த பணிக்கே, அவனை அவன் தாயின் கர்ப்பத்தில் உருவாகும் முன்பே தகுதிப்படுத்துகிறார். அவன் அந்த குறிப்பிட்ட பணிக்கு என்றே நியமிக்கப்பட்டவன், ஏற்படுத்தப்பட்டவன். நம் மத்தியில் சிலர் தங்களை சிலகாலம் மேய்ப்பன் என்கிறார்கள், பின் சுவிசேஷகன் என்கிறார்கள். அதை தொடர்ந்து அப்போஸ்தலன் என்கிறார்கள். இவர்களை கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபை பக்தி விருத்தியடைய எந்தவிதமான பணிக்கும் ஏற்படுத்தவில்லை. இவர்கள் மாய்மாலக்காரர்கள். இவர்கள் ஆட்டுத் தொழுவத்திற்குள் வேறுவழியாய் ஏறிய கள்ளர்கள். சிலர் தங்களை இன்டர்நேஷனல் பிரசங்கியார், தலைமை போதகர், சபை ஸ்தாபகர் என்றெல்லாம் அழைத்துக்கொள்கிறார்கள். இது வேதவாக்கியங்களில் எங்கும் இல்லாத ஒரு பணி/ உத்தியோகம். ஆதலால் இவ்வாறாக தன்னை அழைத்துக் கொள்ளும் ஒருவன் பிசாசினுடைய பணிக்கு அடுத்தவனாக இருக்கிறான்.

17. **இந்த ஐந்து வகை ஊழியங்கள் குறித்து பற்பல போதனைகள் உண்டு.**

அ) சிலர் ஐந்து வகை ஊழியங்கள் இந்நாட்களில் நம் மத்தியல் காணப்படுகிறது. இது கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபை எடுத்துக்கொள்ளப்படும் வரை இருக்கும் என விசுவாசிக்கிறார்கள். இந்த விசுவாசத்தில் நானும் ஒருவன்.

ஆ) ட்ரினிட்டாட் பெத்தேல் தேவசபை பாஸ்டர் மற்றும் அவரது இந்திய ஜாலராக்கள் இந்த ஐந்து வகை ஊழியங்கள் இன்னும் தொடங்கவில்லை. இது ஒரு முழு பெலத்துடன் இனி வரப்போகிற ஒன்றாக இருக்கிறது எனக் கூறி வேதவாக்கியங்களை புரட்டுகிறார்கள்.

இ) சென்னை, வளசரவாக்கம் சபையின் பாஸ்டர் போன்றவர்கள் ஏழாம் சபைக்கால தூதனாகிய சகோ.

வில்லியம் மாரியன் பிரன்காம் ஊழியத்தோடு இந்த ஐந்து வகை ஊழியங்களில் நான்கு வகை ஊழியங்கள் முடிந்துவிட்டது. இப்பொழுது பாஸ்டர் / மேய்ப்பன் ஊழியம் மட்டுமே உண்டு. ஆதலால் நான் மட்டுமே உங்களுக்கு போதும் எனக் கூறி மக்களை மோசம் போக்குகிறார். இவரது சபையில் அவர்தான் All in all, No மூப்பர்கள், No டீக்கன்கள். Yes பாஸ்டர் வணக்கம் மட்டும் உண்டு.

ஈ) சிலர் கிறிஸ்துவின் பன்னிரெண்டு அப்போஸ்தலர் காலத்தோடு ஐந்து வகை ஊழியங்கள் முடிந்துவிட்டது. இப்பொழுது ஐந்து வகை ஊழியங்கள் நம் மத்தியில் கிடையாது என தங்களுக்கு கேடு வர வேதவாக்கியங்களை புரட்டுகிறார்கள்.

18. இவ்வாறாக அநேக போதனைகள் உண்டு. உதாரணத்திற்காக/எடுத்துக்காட்டாக சிலவற்றை எழுதியுள்ளேன். இப்பொழுது கவனியுங்கள். இந்த ஐந்து வகை ஊழியங்கள் யாவும் ஒரு கோத்திரத்திலிருந்து தந்தை, மகன், மச்சான், மருமகன் இவ்வாறாக பரம்பரையாக வருவது கிடையாது. இவர்களை கர்த்தர் தெரிந்துகொண்டதுமில்லை. மாறாகவே அவர்களே தங்களை தாங்களே ஏற்படுத்திக்கொள்கிறார்கள். பாவத்தில் விழுந்த அவரது மகன் ஆதாமையும் தனது மருமகள் ஏவாளையும் அவர்களுடைய சந்ததியாரையும் மீட்க தேவன் தன்னுடைய இரட்சிப்பின் கிட்டத்தை நிறைவேற்ற தம்முடைய சரீரமாகிய சபையை மீட்க மாமிசத்தில் வெளிப்பட்டார். அதற்காக அவரே நமது மத்தியில் ஐந்து வகை ஊழியங்களையும் செய்தார்.

அ) அப்போஸ்தலர் : இயேசு ஒரு அப்போஸ்தலனுடைய பணியை செய்தார் (எபி 3 : 1)

ஆ) தீர்க்கதரிசி : நசரேயனாகிய இயேசு தேவனுக்கு முன்பாகவும், ஜனங்கள் எல்லாருக்கும் முன்பாகவும் செய்கையிலும், வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாக இருந்தார் (லூக் 24:19, யோ 4 :19)

இ) சுவிசேஷகன் : இயேசு கலிலேயாவிலே வந்து தேவனுடைய இராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசங்கித்து காலம் நிறைவேறிற்று, தேவனுடைய இராஜ்யம் சமீபமாயிற்று : மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார் (மாற் 1:14,15) தாம் வாழ்ந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்து அவர் தம்முடைய வழக்கத்தின் படியே ஓய்வு நாளில் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து, வாசிக்க எழுந்து நின்றார். அப்பொழுது எசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் அவருக்கு கொடுக்கப்பட்டது. அவர் புத்தகத்தை விரித்தபோது கர்த்தருடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார் : தரித்திரருக்கும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பன்னினார் என்று எழுதி இருக்கிற இடத்தை அவர் கண்டு, வாசித்து, சுருட்டி புத்தகத்தை பணிவிடைகாரனிடத்தில் கொடுத்து உட்கார்ந்தார் (லூக். 4 : 17-20) பாருங்கள் இயேசு கிறிஸ்து இங்கு ஒரு சுவிசேஷனுடைய பணியை செய்தார்.

ஈ) மேய்ப்பன் : இயேசு, நானே நல்ல மேய்ப்பன் : நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனை கொடுக்கிறான் என்றார் (யோ 10:11) இவர் ஆடுகளுடைய பெரியமேய்ப்பன் (எபி 11:20) இவர் மேய்ப்பர்களுக்கு பிரதான மேய்ப்பன் (1பேது 5 : 4) பாருங்கள் இயேசு ஒரு பாஸ்டர் பணியை செய்தார்.

உ) போதகன் : கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு போதகராக இருக்கிறார் (மத் 23 : 8) யூதர்களுக்கு அதிகாரியாகிய நிக்கொதேமு எனப்பட்ட பரிசேயன் இராக்காலத்தில் இயேசுவினிடத்திலே வந்து ரபி, நீர் தேவனிடத்தில் இருந்து வந்த போதகர் என்றான் (யோ 3 : 2) ஏனென்றால் அவர் போதகன் பணியை செய்தார்.

ஊ) டீக்கன் : மேலும் இயேசு சபையில் ஒரு டீக்கனுடைய பணியையும் செய்தார். இயேசு தேவலாயத்தில் பிரவேசித்து ஆலயத்தில் விற்கிறவர்களையும்,கொள்ளுகிறவர்களையும் துரத்திவிட்டு காசுகாரர்களுடைய பலகைகளையும் புறா விற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்து ஒருவனும் தேவாலயத்தின் வழியாக யாதொரு பண்டத்தையும் கொண்டு போகவிடாமல் என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு எனப்படும் என்று எழுதி இருக்கவில்லையா? நீங்களோ அதை கள்ளர் குகை ஆக்கினீர்கள் என்று கூறி தேவாலயத்தில் ஒரு டீக்கனுடைய பணியை செய்து சபையின் ஒழுங்குமுறைகளை நிலைநாட்டினார் (மாற் 11 : 15-17).

எ) தர்மகர்த்தா : சபையில் ஒரு தர்மகர்த்தா பணியையும் இயேசு செயலாற்றினார். இயேசு கப்பர்நகூமில் வந்தபோது, வரிப்பணம் வாங்குகிறவர்கள் பேதுருவினிடத்தில் வந்து : உங்கள் போதகர் வரிப்பணம் செலுத்துகிறது இல்லையா என்று கேட்டார்கள். இயேசு பேதுருவினிடத்தில் நீ கடலுக்கு போய் தூண்டில் போடு. முதலாவது அகப்படும் மீனை பிடித்து அதன் வாயை திறந்துப்பார். ஒரு வெள்ளிப்பணத்தை காண்பாய். அதை எடுத்து எனக்காகவும், உனக்காகவும் வரிப்பணமாக கொடு என்றார் (மத் 17:24-27) இவ்வாறாக இயேசு வரவு செலவு கவனிக்கும் ஒரு தர்மகர்த்தா பணியையும் நிறைவேற்றினார். இப்பொழுது ஏழுசபை காலங்களிலும் தம்முடைய சரீரமாகிய சபையில் பரிசுத்த ஆவியை ஊற்றி அதில் ஐந்து வகை ஊழியங்களை வைத்து தம்முடைய சரீரமாகிய சபையை எடுத்துக்கொள்ளப்படுதலில் பெற்றுக்கொள்ளவரும் போது அது கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் மகிமையுள்ள சபையாக தமக்கு முன்நிற்க செய்கிறார். அவருக்கு அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்ட ஒரு சபை தேவை. அவருக்கு தம்முடைய ஆவியால் நிரப்பப்பட்ட சபை தேவை, அவருக்கு அவருடைய சத்தத்திற்கு செவிக்கொடுக்கும் ஒரு மந்தை தேவை. அவருக்கு அவருடைய ஏழு தெய்வீக சுபாவங்களிலும் பங்கு கொண்ட ஒரு சபை தேவை. அவருக்கு ஒரு கறைதிரையற்ற ஒரு சபை தேவை. இப்படிப்பட்ட ஒரு சபையை ஆயத்தப்படுத்த, தாம் செய்த ஐந்து வகை ஊழியங்களை மீண்டும் சபையில் வைத்து, தம்முடைய சரீரமாகிய சபையை ஒரு கறைதிரையற்றதாக தகுதிப்படுத்துகிறார்.

**இந்த ஐந்து வகை ஊழியங்களில் உள்ளவர்களின் தகுதிகள் :**

19. இந்த ஊழியங்களின் தகுதிகள் தேவனால் நியமிக்கப்படுகிறது. இவர்கள் தங்களில் தாங்கள் தகுதியற்றவர்கள் (2கொரி 2:14-17) தேவன் இவர்களை வேதாகமக் கல்லூரிகளுக்கு அனுப்பி, போதனைகளை கொடுத்து தம்முடைய சபையை பக்திவிருத்தி அடைய செய்ய தகுதிப்படுத்துவதில்லை. பாருங்கள் இவர்களை எந்த ஒரு ஸ்தாபனமோ, சபையோ, தனிப்பட்ட நபரோ நியமிக்க முடியாது. ஸ்தாபன சபைகளில் ஊழியம் செய்பவர்களுக்கும், இந்த ஐந்து வகை ஊழியங்களில் உள்ளவர்க்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. ஸ்தாபன சபைகளில் பணிபுரிபவர்கள் கள்ளச்சபையில் பணிப்புரிகிறார்கள். அது உலகத்திற்கு அடுத்த சபை. ஆதலால் அங்கு அனைத்து காரியங்களும் உலகத்திற்கு அடுத்ததாகவே இருக்கும். பாருங்கள் இவர்கள் நீண்ட வெள்ளை அங்கிகளை தரித்துக்கொண்டு (உதாரணம் : தென்னிந்தியத் திருச்சபை, இந்திய சுவிசேஷ திருச்சபை போதகர்கள்) திரியவும், சந்தை வெளியில் வந்தனங்களை அடையவும் ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களில் உட்காரவும், விருந்துகளில் முதன்மையான இடங்களில் இருக்கவும் (மாற் 12 : 38,39) ஐயா, ஐயா என்று அழைக்கப்பட விரும்பும் ஸ்தாபன சபை ஊழியர்களை குறித்தே இங்கு கூறுகிறது. ஆதலால் இவர்கள் அதிக ஆக்கினை அடைவார்கள் எனவும் வேதவாக்கியம் கூறுகிறது. ஆதலால் இவர்கள் எல்லாரும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைய கர்த்தரால் நியமிக்கப்பட்ட ஊழியர்கள் அல்ல. முடிவாக ஐந்து வகை ஊழியங்களில் ஊழியர்களை நியமிப்பது முற்றிலுமாக தேவனுடைய அதிகாரமாய் இருக்கிறது (சங் 78 : 71 : எரே 3 : 15)

20. கர்த்தர் சிலரை அப்போஸ்தலர்களாகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகர்களாகவும், சிலரை மேய்ப்பர்களாகவும், போதகர்களாகவும் ஏற்படுத்தினார் (எபே 4 : 13) இங்கு சிலரை மேய்ப்பர்களாகவும், போதகர்களாகவும் ஏற்படுத்தினார் என உள்ளது. இதர மூன்று ஊழியங்கள் குறித்து சிலரை, சிலரை, சிலரை என உள்ளது ஆனால் இங்கு மட்டும் சிலரை மேய்ப்பர்களாகவும், போதகர்களாகவும் என உள்ளது. ஆதலால் இவை இரண்டும் ஒரே ஊழியத்தை குறிக்கிறது. மேய்ப்பனும், போதகரும் ஒருவரே என்கிறார்கள். இது தவறு. பாருங்கள் மேய்பனுடைய பணிவேறு, ஒரு போதகனுடைய பணி வேறு. எபி 5 : 12 ஐ தியானிக்கும்போது, இந்த போதனை (teaching) ஒரு தனி ஊழியம். 1 கொரி 12 : 28-29 ஐ தியானிக்கும் போது போதகர் (teacher) என்ற ஒரு உத்தியோகம் சபையில் இருக்கிறது என்பதை காட்டுகிறது. இதிலிருந்து பாஸ்டர் ஊழியம் / மேய்ப்பன் ஊழியம் போதகன் ஊழியத்திலிருந்து வேறுபட்டது என தெரிகிறது. மேற்கண்ட ஊழியங்கள் அனைத்தும் தனித்தன்மை வாய்ந்தது. ஒன்றை மற்றொன்றுடன் கலக்க முடியாது, கூடாது, அப்போஸ்தலனுடைய பணி வேறு, தீர்க்கதரிசியினுடைய பணி வேறு, இரண்டையும் ஒன்றோடு ஒன்றாக கலக்க முடியாது. அதே போன்று மேய்ப்பனுடைய பணி வேறு, போதகனுடைய பணி வேறு, இரண்டையும் ஒன்றாக இணைக்கமுடியாது. இயேசுவும் தனித்தனியாக மேய்ப்பனுடைய பணியையும்,போதகனுடைய பணியையும் செய்ததாக கூறப்படுகிறது. ஆதலால் மேய்ப்பதும், போதிப்பதும் ஒரே தன்மை வாய்ந்த ஊழியம் என்பது தவறு. இதற்கு போதுமான ஆதாரங்கள் வேதவாக்கியங்களில் கிடையாது.

21. இந்த ஐந்து வகை ஊழியங்களும் முற்றிலுமாக கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்திஅடைவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஊழியங்களாகும். இந்த பணியை செய்பவர்கள் வேறு எந்த பணியையும் செய்யக்கூடாது. இவர்கள் பிரத்திமாக இந்த பணிகளுக்கென்றே பிரித்தெடுக்கப்பட்டவர்கள். இந்த ஊழியங்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு, கொடுக்கப்பட்ட ஐந்து வகையான பரிசுகளாகும். இந்த பணிகள் ஸ்தாபன சபைளின் பக்திவிருக்திக்காகவோ அல்லது ஏல்பெத் ஜெபவீடு, கல்வாரி ஜெபவீடு, இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு போன்று பெயர்பலகையினால் அழைக்கப்படும் தனியார் கம்பெனிகளின் தொழில் அபிவிருத்திக்காகவோ அல்ல. மாறாக, இயேசு கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்தி விருத்தி அடைய அதாவது ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்து மறுபிறப்பு அடைந்தவர்களின் பக்தி விருத்திக்காக. இவர்கள் கிறிஸ்துவை அறிவில் வளர்ந்து கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்கு உட்படும் பிரவேசத்தை பரிபூரணமாக பெறுவதற்கு வழிநடத்தப்பட ஏற்படுத்தப்பட்டுள்ள ஊழியங்கள்.

22. கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைய இந்த ஐந்து வகை ஊழியங்களை ஏற்படுத்தி அவரே அந்த ஊழியங்களை போஷித்து காப்பாற்றுகிறார் (எபே 5:29) கர்த்தர் தமக்குரிய தசமபாகத்தை இந்த ஐந்து ஊழியங்களுக்கும் சம்பளமாக பகிர்ந்துகொடுத்து தம்முடைய சரீரமாகிய சபையை முற்றிலும் இலவசமாக போஷித்து காப்பாற்றுகிறார். பாருங்கள் கர்த்தர் இந்த ஐந்து வகை ஊழியங்களையும் போஷிக்கும் முழுபொறுப்பையும் ஏற்றுக்கொண்டு தமக்குரிய தசமபாகத்தை கொண்டு அவர்களை போஷிக்கிறார். சில பொருளாசைகாரர்கள், விக்கிரகாரதனைக்காரர்கள் நினைப்பதை போன்று கர்த்தர் தமக்குரிய தசமபாகத்தை மேய்ப்பர்களுக்கு மாத்திரம் கொடுத்து அவர்களை மாத்திரம் போஷித்து காப்பாற்றி இதர ஊழியர்களை பட்டினியால் சாகடித்து கொல்லுகிறவர் அல்ல. இன்றைய பண்டகசாலை ஒரு லோக்கல் சபையாக இருக்கிறது. மக்கள் கர்த்தருக்குரிய தசமபாகத்தை இந்த லோக்கல் சபைகளுக்குகொண்டுவருகின்றனர். இதனால் சபை பாஸ்டர்கள் இதை முற்றிலுமாக அபகரித்துக் கொள்கிறார்கள். தங்களுடையதல்லாததை தங்களுக்காக

சேர்த்துக்கொள்கிறார்கள். தங்கள் வீட்டுக்கு பொல்லாத ஆதாயத்தை தேடுகிறார்கள். இதர நான்கு வகை ஊழியங்களை கொண்டு அவர்களை சபையில் உபயோகித்து அவர்களுக்கு தசமபாகத்தை பகிர்ந்து கொடுப்பது இல்லை. ஒவ்வொரு புருஷனும் தன் சரீரமாகிய தன் மனைவியை போஷித்து காப்பாற்றவேண்டும். வேதவசனமானது தூஷிக்கபடாதபடிக்கு பாலியஸ்திரீகள் தங்கள் வீட்டில் தரித்திருக்கிறவர்களாக இருக்க வேண்டும். (எபே 5:29 தீத் 2 : 4,5) அவ்வாறாகவே கிறிஸ்துவும் தம்முடைய சரீரகமாகிய சபையை இந்த ஐந்து வகை ஊழியங்களை கொண்டு இலவசமாக காப்பாற்றுகிறார். இந்த ஐந்து வகை ஊழியங்களுக்கு சம்பளமாக தமக்குரிய தசமபாகத்தை கொடுக்கிறார். கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்தி விருத்தி அடைய இந்த ஐந்து வகை ஊழியங்களும் தேவை. மேய்ப்பனைக் கொண்டு மாத்திரம் சபை பக்திவிருத்தி அடையாது. சபை ஐந்து வகை ஊழியங்களை கொண்டு கண்டிப்பாக போஷிக்கப்படவேண்டும்.

23. இந்த ஐந்து வகை ஊழியத்தில் உள்ளவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் வேறு வழியாய் நுழைந்த கள்ளர்களின் தவறான உபதேசங்களை, மாறுபாடன போதனைகளை கண்டனம் செய்து சபையை தேவனுடைய வார்த்தைக்கு திருப்புகிறார்கள். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு ஆயத்தப்படுத்துகிறார்கள். ஒரு பாஸ்டர் ஒரு சுவிசேஷகனின் வேலையை செய்யக்கூடாது. ஒருவன் தன்னை பாஸ்டராக அழைத்துக்கொண்டு அதன்பின் இதர நான்கு ஊழியங்களிலும் தலையிடக்கூடாது. தான் ஒரு இன்டர்நேஷனல் பிரசங்கி, மேய்ப்பன், அப்போஸ்தலன் என கர்த்தரால் ஏற்படத்தப்படாத ஒருவன் (மும்பை பாஸ்டரை போன்றவர்கள்) தன்னை அழைத்துக்கொள்ள முடியுமேயன்றி கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவன் அல்ல.

24. இந்த ஐந்து வகை ஊழியங்களின் சிறப்பு, பொறுப்பு, உயர்வு, தாழ்வு போன்ற காரியங்களை நீங்கள் 2 கொரி 3-5 அதிகளில் நன்கு தியானிக்கலாம். ஆனாலும் இங்கு ஒரு சில உதாரணங்களை மட்டும் எடுத்துக்காட்டாக எழுதுகிறேன்.

முதலாவது : எங்களால் ஒன்று ஆகும் என்பதை போல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதி உள்ளவர்கள் அல்ல. எங்கள் தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது என்கிறார்கள். 2 கொரி 3:5 பாருங்கள் ஐந்து வகை ஊழியங்களில் உள்ளவர்களின் தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது. அவர்கள் தங்களுக்கென ஒரு தகுதியை உருவாக்கி கொள்ள முடியாது. இவர்களுடைய தகுதி பல ஆயிரங்கள் இருக்கை கொண்ட சபைக்கு மேய்ப்பனாக இருப்பதலினால் அல்ல. பாருங்கள் இவர்கள் தகுதி இவர்கள் ஒரு பெரிய பங்களாவில் வசித்து வருவதால் அல்ல. இவர்கள் தகுதி இவர்கள் பங்களாவின் முகப்பில் பல குளிர்சாதன கார்கள் நிற்பதினால் அல்ல. இவர்கள் தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது. இவர்கள் தங்களில் தாங்கள் ஒன்றும் இல்லை. இவர்கள் ஒரு காலிகுடமாக இருக்கிறார்கள். இவர்களுக்கு கொடுத்த ஊழியத்தை, அந்த காலிகுடத்தை நிரப்புகிறவர் தேவன். இவர்களால் அந்த குடத்தை நிரப்ப முடியாது.

இரண்டாவதாக : இவர்கள் வெட்கமான அந்தரங்க காரியங்கைள வெறுத்து, தந்திரமாய் நடப்பது இல்லை. தேவனுடைய வார்த்தையை புரட்டுவதில்லை. அந்தந்த காலத்துற்குரிய செய்தியோடு ஒன்றை கூட்டாமலும், குறைக்காமலும் சத்தியத்தை சத்தியமாக எடுத்துக்கூறி தேவனுக்கு முன்பாக மாத்திரம் அல்ல. எல்லா மனுஷருடைய மனசாட்சிக்கும் தங்களை உத்தமர் என்றே விளங்க பண்ணுகிறவர்கள் (2கொரி 4 : 2) பாருங்கள் சத்தியத்தை எடுத்துக் கூறினால் ஜனங்கள் சபைக்கு ஒழுங்காக வருவதில்லை. கடிந்து கொள்ளுதலை அலட்சியம் பண்ணுகிறார்கள். ஆதலால் தான் அவர்கள் மனம் போன போக்கில் நான் விட்டுவிட்டேன். ஆதலால் தான் ஜனங்கள் ஏதே ஒரு சிலர் என் முன்பாக காணப்படுகிறார்கள் என்று கூறும் மேய்ப்பர்கள், கள்ளகபடமுள்ள வேலையாட்கள். சத்தியத்தை கூறுவதினால் சபையே காலியாகிவிட்டாலும் வாசல் வழியாய் நுழைந்தவர்கள் கவலை கொள்ளமாட்டார்கள். சாரமன்ற சாந்தை பூசமாட்டார்கள். ஆவியோடும், கருத்தோடும் சபை கூடுதலில் பாடி கர்த்தரை ஸ்தோத்தரித்து வந்த ஜனங்களை புறம்பாக்கி, ஒரு நவீன பாடல் குழுவைபிரியப்படுத்துவதற்கு அவர்கள் சபை ஆராதனையில் பாட வைத்து மற்றவர்கள் வாயை அடைத்து முடிவில் எல்லாவற்றையும் இழந்த சீர்கெட்ட குமாரனைபோன்ற சபை மேய்பர்கள் அல்ல. அவர்கள் உண்மையான மேய்ப்பனுடைய சபையில் ஜனங்கள் ஆவியோடும் கருத்தோடும் பாடுவார்கள்.விண்ணப்பம் பண்ணுவார்கள். அங்கு சகலமும் பக்திவிருத்திக்கு ஏதுவாக ஒழுங்கும் கிரமமுமாக செயல்படும். சபையில் மூப்பர்கள், டீக்கன்கள் போன்ற பதவிகள் காணப்படும் . வளசரவாக்கம் பாஸ்டரை போன்று தானே all in all என்ற போதனை கிடையாது.

மூன்றாவதாக : இவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய ஜீவன் அவர்களுடைய சரீரத்தில் விளங்கும்படி இயேசுவின் மரணத்தை எப்போதும் தங்கள் சரீரத்தில் சுமந்து செல்கிறார்கள் 2கொரி 4 : 10 பாருங்கள் இவர்கள் தங்கள் பாடுகள், நிந்தைகள் நெருக்கங்கள், மரணம் இவைகளின் வாயிலாக மற்றவருக்கு வாழ்வு உண்டாக்குகிறார்கள். விசுவாசிகளின் இழப்பில் தங்களுக்கு வாழ்வு அமைத்து கொள்பவர்கள் அல்ல. விசுவாசிகளை, தங்கள் சுகபோக வாழ்வுக்காக கொள்ளையிடுபவர்கள் அல்ல.

நான்காவதாக : நாங்கள் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்பு கூறுகிறோமோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்பு கூறப்பட்டிருந்தாலும் மிகவும் சந்தோஷமாய் நாங்கள் உங்கள் ஆத்துமாவுக்காக செலவு

பண்ணவும், செலவு பண்ணப்படவும் விரும்புகிறோம் என்கிறார்கள் (2கொரி 12 : 15) பாருங்கள் கடந்த 33 ஆண்டுகளாக நான் அவ்வப்போது உங்களுக்கு ஆவிக்குரிய மன்னாவை **இயேசுவே வாரும்** இதழ் மூலமாக கொடுத்து வருகிறேன். இதனால் பல ஆயிரம் பேர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர்ச்சி அடைந்து வருகிறார்கள். இதற்காக ஆகும் செலவுகள் என் குடும்பத்தின் ஒரு செலவாக கருதப்படுகிறது. இது என்ன? நாங்கள் கிறிஸ்துவின் நிமித்தம் உங்கள் மீது கொண்டுள்ள அன்பு தவிர வேறுஎதுவும் கிடையாது. மேலும் கிறிஸ்து எனக்கு கொடுத்த உக்கிராணப் பொறுப்பை உணர்ந்து, ஆவியானவரின் வழிநடத்துதலின்படி தேவன் எற்ற தேவைகளை ஏற்ற வேளையில் சந்திக்கிற வண்ணமாக இந்த ஊழியத்தை நிறைவேற்றி வருகிறேன்.

25. என் ஊழியத்தின் பாதையில் இதுவரை கர்த்தருக்குரிய தசமபாகம் இது எனக்கூறி என்னிடம் ஒரு சகோதரன் 3/4 முறை ரூ. 300/400 கொடுத்தார். அடுத்து ஒருவர் தசமபாகமாக ரூ. 13,000/- கொடுத்தார். நான் அதைக்கொண்டு ரூ. 20,000/- க்கும் மேல் செலவு செய்து **கிறிஸ்துவ விவாகம் மற்றும் விவாகரத்து** என்ற செய்தியை வெளியிட்டேன். இந்த பணத்தில் பொறாமை கொண்ட அந்த சகோதரரின் சகோதரன் இதை அவருடைய வஞ்சனையினால் தடை செய்தார். முடிவில் தடை செய்த சகோதரனும் அவரைச் சார்ந்தவர்களும் அவமாய்ப் போனார்கள். வெளிநாட்டு சகோதரன் சயஸ் நான் மும்பையில் இருந்த நாட்களில் எனது இல்லத்தில் சில வேளைகளில் தங்கிருந்து உண்டு. அவர்தன் சொந்த நாட்டுக்குச் சென்றபோது எனக்கு ஒரு சவரக்கத்தி (shaving razor) இலவசமாக, அன்பளிப்பாகக் கொடுத்துச் சென்றார். சில ஆண்டுகள் கழித்து திடீரென ஒரு நாள் அவரிடம் இருந்து எனக்கு 300 டாலர்கள் (சுமார் ரூ. 9,000) வந்தது. இதை என் தசமபாகம் என எழுதியிருந்தார். அவருக்கு நன்றி கூறி ஒரு தபால் போட்டேன். அதற்குப் பதிலாக சகோ. சயஸ் கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தார் என பதில் வந்தது. அவர் தன் மரண நேரத்தில் என்னை நினைவு கூர்ந்து தன் தசமபாகத்தில், தசமபாகத்தை எனக்கு அனுப்பியிருக்கின்றார். பலர் எனக்கு என் ஊழியத்தின் பாதையில் செல்லும்போது காணிக்கைகளை கொடுத்தது உண்டு, சிலர் என் பணத்தேவை நேரங்களில் இலவசமாக பணஉதவி செய்தது உண்டு. இதில் சகோ. யோவேல் மூடி பரமானந்தம் அவர்களை மறக்க முடியாது. நான் கேட்க, அவரிடமிருந்து No என்ற பதில் என்றுமே அவர் வாயிலிருந்து புறப்பட்டதில்லை. இந்நாட்களில் அவருக்கு என்னிடம் ஒரு மனப்பாடு கிடையாது. ஆக தசமபாகம் எனக்கூறி எனக்கு கொடுத்தவர்கள் இவர்களே. கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே தசமபாகம் விஷயத்திலும், நான் திரும்ப செலுத்துவதாக பெற்ற கடன் விஷயத்திலும், தேவனுக்கு முன்பாக மாத்திரம் அல்ல. மனுஷர்களுக்கு முன்பாகவும் யோக்கியமாக நடந்து கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது நான் முதிர் வயதும், நரைமயிர் உள்ளவனுமானேன். கர்த்தர் என் ஆத்துமாவை எல்லா இக்கட்டுகளுக்கும் நீங்கலாக்கி மீட்டு உள்ளார். ஆதலால் நான் உங்களிடத்தில் யாரிடமாவது கடன் பட்டு இருந்தால், பெற்ற கடனை சூழ்நிலைகளின் நிமித்தம் கொடுக்க தவறிவிட்டு இருந்தாலும், யாருடைய பொருளையாவது அறிந்தோ அறியாமலோ நான் அபகரித்து இருந்தாலும் தயவு செய்து எனக்கு தெரியப்படுத்துங்கள். நான் உங்களுக்கு அதை திருப்பிக்கொடுப்பேன். நான் அறிய உங்களில் ஒருவருக்கும் அநியாயம் செய்யவில்லை. ஒருவரையும் கெடுக்கவில்லை. ஒருவரையும் வஞ்சிக்கவில்லை என்ற மிகுந்த மன தைரியத்தோடே எழுதுகிறேன். எனக்கு உண்டான உபத்திரங்கள் / பிரச்சனைகள் எல்லாவற்றிலும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன். சாமுவேலை போன்று நான் எல்லா விஷயத்திலும் உங்களிடம் உத்தமாக இருக்க விரும்புகிறேன். மேலும் நான் எதிலும் தவறியிருந்தாலும் வேதவாக்கியங்களை கொண்டு எனக்கு அதை எழுதுங்கள்.நான் திருத்திக்கொள்கிறேன். நானும் தவறுதலுக்குரியவனே.

**இப்பொழுது கவனியுங்கள் இந்த ஐந்து வகை ஊழியங்கள் யாருக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது?**

26. அப். பவுல் எபேசு சபையில் கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாக இருக்கிற பரிசுத்தவான்களுக்கு கீழ்கண்டவாறு எழுதுகிறான். மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும், ஒருமைபட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க, பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் பூரணப்படும் பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காவும் கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், கர்த்தர் சிலரை அப்போஸ்தலர்களாகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகர்களாவும், சிலரை மேய்ப்பர்களாகவும், போதகர்களாகவும், ஏற்படுத்தினார் என எழுதுகிறான். (எபே 4:11) இதை ஆங்கிலத்தில் கீழ்க்கண்டவாறு வாசிக்கிறோம். And he gave some, apostles and some, prophets ; and some, evangelists ; and some, pastors and teachers for the perfecting of the saints for the work of the ministry for the edifying of the body of Christ, till we all come in the unity of the faith, and of the knowledge of the Son of God, unto a perfect man, unto the measure of the stature of the fullness of Christ. தமிழில் தீர்க்கதரிசிகளை தவிர இதர பணிகளை ஒருமையில் கூறப்பட்டுள்ளது தவறு. அனைத்து வரங்களும் பன்மையிலே காணப்படவேண்டும்.

27. இங்கு நன்கு கவனியுங்கள். கர்த்தர் இந்த ஐந்து வகை ஊழியங்களை கிறிஸ்து இயேசுவுக்குள்

விசுவாசிகளாய் இருக்கிற பரிசுத்தவான்களுக்கு கொடுத்திருக்கிறார். பாருங்கள் இந்த ஐந்து வகை ஊழியங்கள் அவிசுவாசிகள் மத்தியில், பாவனை விசுவாசிகள் மத்தியில், பேர்கிறிஸ்தவர்கள் மத்தியில் அல்ல. மாறாக இது கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் மத்தியில், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் செம்மறி ஆடுகள் மாத்திரமே உண்டு. இங்கு வெள்ளாடுகளுக்கு இடமில்லை. ஆதலால் இந்த ஐந்து வகை ஊழியத்தில் உள்ளவர்கள் செம்மறி ஆடுகளை வழிநடத்துவதற்கு மாத்திரமே ஏற்படுத்தப்பட்டவர்கள் (மத் 25 : 31-46) இந்த எங்கள் சபை, எங்கள் பாஸ்டர் என சபைக்ளை குறித்தும் பாஸ்டர்களை குறித்தும் மேன்மை பாராட்டும் பெயர் கிறிஸ்துவ மக்களுக்குள் இல்லை. ஏனென்றால் இவர்கள் அரசியலில் கட்சியையும், தலைவர்களையும் குறித்து மேன்மை பாராட்டும் தொண்டர்களுக்கு ஒப்பாக இருக்கிறார்கள். தொண்டர்களை வைத்து அரசியலில் தலைவர்கள் பிழைப்பு நடத்துவதை போன்று இங்கு பெயர் கிறிஸ்துவ மக்களை வைத்து இந்த பாஸ்டர்கள் தங்கள் குடும்பத்தை நிர்வகிக்கிறார்கள். குருவைப் போல சிஷர்களும் காணப்படுகிறார்கள். உங்கள் அரசியலையும், அதன் தலைவர்களையும் ; உங்களது சபையோடும், அதன் பாஸ்டர்களோடும் ஒப்பிட்டுப்பார்க்கலாம். அவர்களுக்குள் வித்தியாசமே இருக்காது. ஒரே கிரியைகள் காணப்படும்

28. மேலும் இங்கு நீங்கள் நன்கு கவனிப்பீர்களானால் இந்த ஊழியங்களை கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபையில் அதாவது ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறந்த பரிசுத்தவான்களை கொண்ட காணக்கூடாத அந்த சபையில் குறிப்பிட்ட காரணத்திற்காக, குறிப்பிட்ட காலம் வரை ஏற்படுத்தி இருப்பதை காண்கிறோம்.

29. இந்த ஊழியங்களின் அழைப்பு ஒருவனுடைய விருப்பு வெறுப்புக்கு உட்படுத்தப்பட்டது அல்ல. கர்த்தரே இந்த ஊழியங்களை ஏற்படுத்துகின்றார். இந்த ஊழிய அழைப்புக்காக நீங்கள் ஜெபம் பண்ண தேவையில்லை, முடியாது. ஒருவன் தன் தாயின் கர்ப்பத்திலிருந்து வெளிப்படும் போதே, இந்த ஊழியங்களில் ஒன்றின் அழைப்பை உடையவனாக பிறக்கிறான். பாருங்கள் கர்த்தர் எரேமியாவை குறித்து, நான் உன்னை நீ உன் தாயின் வயிற்றில் உருவாகும் முன்னே ஜாதிகளுக்கு தீர்க்கதரிசியாக கட்டளையிட்டேன் என்கிறார் (எரே 1 : 3)

30. ஆக இந்த ஐந்து வகை ஊழியமானது தேவனால் முன் அறிந்து, முன் குறித்து, அழைக்கப்பட்ட, நியமிக்கப்பட்ட, ஏற்படுத்தப்பட்ட ஊழியங்கள். ஒவ்வொரு ஊழியமும் அதன் அதன் அழைப்பில் தனிதன்மை வாய்ந்தது. இவைகளில் ஒன்றில்லாமல் மற்றவைகளை கொண்டு சபை பூரணமாக முடியாது. பாருங்கள் தேவனுடைய சரீரமாகிய சபை ஒரு மேய்ப்பனை கொண்டு மாத்திரம் பரிபூரணப்பட முடியாது. மேய்ப்பன் தான் all in all என்ற மனப்போக்கு, எண்ணம் தவறு. இந்த ஐந்து வகையான ஊழியங்களின் உபதேசங்களைக் கொண்டு, போதனைகளைக்கொண்டு, ஆகாரத்தைக் கொண்டு சபை பரிபூரணப்பட வேண்டும். ஒன்று இருந்து இதர நான்கு இல்லாவிட்டாலும் சபை பரிபூரணப்படாது. பேர் கிறிஸ்துவ மக்களை கொண்ட ஸ்தாப சபைகள் மற்றும் தனியார் சபைகளில் அவர்களுடைய அருட்திருக்களையும், பாஸ்டர்களையும், கூலிக்கு மாரடிக்கும் கூலியாட்களைக் கொண்டும் சபை பரிபூரணப்படலாம், ஆனால் அது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் நடக்காது. இங்கு ஐந்து வகை உணவுகளும் தேவைப்படுகிறது.

31. மேலும் கவனியுங்கள் இந்த ஐந்து வகை ஊழியங்கள் ஒரு லோக்கல் சபைக்கடுத்தது இல்லை. ஒரு லோக்கல் சபையில் இந்த ஐந்து வகை ஊழியங்கள் காணப்படவேண்டும் எந்த தேவையும் இல்லை. இந்த ஊழியங்கள் உலகம் முழுவதும் வியாபித்திருக்கிற கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் (Mystical body) உள்ளது. ஆனால் லோக்கல் சபை ஒரு மேய்ப்பனை தலையாக கொண்டு செயல்படும். அதே மேய்ப்பன் ஒரு மந்தைக்குரியவன் மட்டுமே. ஆங்காங்கு 4/5 மந்தைகளை தன் திறமையில் உருவாக்கிக்கொண்டு தன்னை தலைமை மேய்ப்பன் என் கூறிக்கொண்டு, இதர இடங்களை கிளைச்சபைகள் என கூறிக்கொண்டு அங்கு தனக்கு கீழே மேய்ப்பர்களை நியமித்துக்கொண்டு ஊழியம் செய்ய முடியாது, கூடாது. இங்கு கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஒருமேய்ப்பன் ஒரு சபைக்கு மட்டுமே ஊழியன். ஆனால் இந்த ஊழியங்கள் அனைத்தும் உலகம் முழுவதும் பரவியிருக்கும் அனைத்து சபைகளுக்கும் பொதுவானது. இவர்கள் ஆங்காங்கு சபைகளுக்கு தங்கள் ஆகாரத்தை கொண்டு செல்வார்கள். இவர்கள் ஒரே சபையில் மாத்திரம் நிலைத்திருக்க மாட்டார்கள். இவர்கள் All Rounders. கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு மேய்ப்பன் ஒரு சபையில் தலைவனாக இருப்பானாகில் அவன் இதர நான்கு வகை ஊழியங்களையும் அடையாளம் கண்டுக்கொண்டு, அவர்களுடைய ஆகாரத்தையும் கொண்டு தன் கீழுள்ள சபையை போஷிப்பான். அவன் தேவனால் ஏற்படுத்தப்படாவிட்டால். இதர ஊழியங்களை அனுமதிக்க மாட்டான், கண்டு கொள்ளமாட்டான். அவன் ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளன்.

32. **கர்த்தர் மேற்கூறிய ஐந்து வகை ஊழியங்களையும் எதற்காக ஏற்படுத்தினார்?**

அ) முதலாவதாக கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாய் இருக்கிற பரிசுத்தவான்கள் சீர்பொருத்தும் பொருட்டு. இது For perfecting of Saints என ஆங்கிலத்தில் கூறப்பட்டிருப்பதால் பரிசுத்தவான்கள்

பூரணப்படும் பொருட்டு என இருக்க வேண்டும். ஆங்கிலத்தில் Perfecting என்ற வார்த்தை உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு பரிபூரணப்படும் பொருட்டு என பொருள்படும். பாருங்கள் இந்த ஊழியங்கள் ஒரு விக்கிரகாராதனை, ஒரு அவிசுவாசியை, ஒரு பாவனை விசுவாசியை இயேசு கிறிஸ்துவிடனித்தில் வழி நடத்த அல்ல. மலைவாழ் மக்களை, நரிக்குறவர் எனப்படும் மக்களை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்த அல்ல. மாறாக இந்த ஊழியங்கள் கிறிஸ்துவுக்குள்ளான பரிசுத்தவான்களை பரிபூரணப்படுத்த. அவர்கள் ஏன் பரிபூரணப்படவேண்டும்? பரலோகத்தில் உள்ள நம்முடைய பிதா பூரண சற்குணராய் இருக்கிறது போல நாமும் அதாவது மணவாட்டியும் பூரண சற்குணராய் இருக்கவேண்டும் (மத் 5 : 48) பாருங்கள் மனைவியானவள் தன் புருஷனுடைய சுபாவத்தை உடையவளாய் இருக்க வேண்டும். அப்பொழுது அவர்களுடைய இல்லற வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். சில குடும்பங்களில் நான் பெண்களிடம் கேள்விப்பட்டது : ஐயா திருமணத்திற்கு முன் நான் சினிமா பார்ப்பது உண்டு. இப்பொழுது நான் பார்ப்பதில்லை. ஏனென்றால் என் கணவன் சினிமா பார்ப்பதில்லை. அவரை போல நானும் இருக்க விரும்புகிறேன். சில பெண்கள் ஐயா நான் எனது இல்லத்தில் தேநீர் அடிக்கடி குடித்து பழகியவள். ஆனால் என் திருமணத்திற்கு பின் அந்த பழக்த்தை முற்றிலுமாக நிறுத்திவிட்டேன். ஏனென்றால் என்னுடைய கணவர் டீ, காபி குடிக்கும் பழக்கம் உள்ளவர் அல்ல. நான் என் கணவர் பழக்கத்தோடு என்னையும் இணைத்துக்கொண்டேன். ஆம் ஒரு புத்தியுள்ள ஸ்திரீ தன்னை, தன் கணவனுடைய சுபாவத்துடன் இணைத்து கொள்ள விரும்புகிறாள். அதே போன்று கிறிஸ்துவின் மணவாட்டி கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்துடன் பூரணப்பட்டவர்களாக இருக்க வேண்டும் (2 பேதுரு 1 : 1-8) இயேசு கிறிஸ்துவின் மணவாட்டியை, இயேசு கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்துகுள் வழிநடத்த, அவர் பூரணசற்குணராய் இருப்பது போல இவளையும் பூரணசற்குணராக்குவதற்கு வழிநடத்துவதே இந்த ஐந்து வகை ஊழியங்களின் பணியாகும். ஆனாலும் ஒருவன் பரிபூரணப்படுவது அவனுக்கும் தேவனுக்கும் இடையில் உள்ள ஒன்று. ஒருவனை பரிபூரணப்படுத்த தேவனால் மாத்திரமே கூடும். ஒருவன் தன்னைத்தானே கிறிஸ்துவின் தெய்வீக சுபாவங்களில் பரிபூரணப்படுத்திக்கொள்ளமுடியாது.

ஆ) ஐந்து வகை ஊழியங்களின் மற்றொரு பணி கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் வேலைக்காக ஆகும். இதை ஆங்கிலத்தில் for the work of the ministry என வாசிக்கிறோம். அதாவது ஊழியத்தின் வேலைக்காக. ஊழியத்தின் வேலைக்காக என்றால் என்ன? அதாவது கிறிஸ்து இயேசுவினுடைய சுவிசேஷ ஊழியத்திற்காக for the ministry of Jesus Christ. சபை காலங்களில் கிறிஸ்துவின் ஊழியத்தை அவருடைய மணவாட்டி செய்கிறாள். இயேசு கிறிஸ்து செய்த அதே ஐந்துவகை ஊழியங்களை செய்து கிறிஸ்து தம்முடைய மணவாட்டியை பெற்றுக்கொள்ள வரும்போது கிறிஸ்துவின் சரீரமாகிய சபை கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் அதை மகிமையுள்ள சபையாக அவருக்கு முன் நிறுத்துகிறது.

இ) மூன்றாவதாக கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைவதற்காக. இதை ஆங்கிலத்தில் For the edifying of the body of Christ என வாசிக்கிறோம். அதாவது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை கட்டுவதற்காக For the building it up. அதாவது சபை கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர்ந்து ஒரு கட்டிடமாக எழும்ப. அதாவது விசுவாசத்தோடு வல்லமையும், வல்லமையோடு ஞானத்தையும், ஞானத்தோடே தன்னடக்கத்தையும், தன்னடக்கத்தோடே பொறுமையும், பொறுமையோடு தேவ பக்தியையும், தேவபக்தியோடு சகோதர சிநேகத்தையும் கூட்டி, ஒரு கூர்நுனி கோபுரமாக எழும்ப, தலைக்கல்லாகிய அன்பு அதன்மீது அமர, அது முழுமை பெறுகிறது (2பேது 1 : 5-8) சபை எடுத்துக்கொள்ளப்படுகிறது. சில கபடமுள்ள வேலையாட்கள் தலைகல் வந்தாகிவிட்டது என கூறுகின்றனர். அப்படியானால் சபை பூரணப்பட்டிருக்கவேண்டும். எடுத்துக்கொள்ளப்படுதல் நடைபெற்றிருக்க வேண்டும். ஆதலால் அப்படிப்பட்டதான உபதேசத்தில் மதிமயங்கிவிடாதீர்கள்.

33. **இந்த ஐந்து வகை ஊழியங்கள் எதுவரை?** அந்த ஐந்து வகை ஊழியங்களை பற்றி பற்பல கருத்துகள் உள்ளன என்பதை தொடக்கத்தில் பார்த்தோம். இங்கு இந்த ஊழியங்களின் காலக்கட்டங்கள் எதுவரை என்று பார்ப்போம்.

அ) கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாக இருக்கிற பரிசுத்தவான்கள் தேவகுமாரனைப்பற்றும் **விசுவாசத்தில்** ஒரு மனப்பட்டவர்களாக காணப்படும் வரை (எபே 4 : 11)

ஆ) இயேசு கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாக இருக்கிற பரிசுத்தவான்கள் தேவகுமாரனைப் பற்றும் **அறிவில்** ஒரு மனப்பட்டவர்களாக காணப்படும் வரை (எபே 4 : 11)

இ) இயேசு கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாக இருக்கிற பரிசுத்தவான்கள் கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்கு தக்க **பூரண புருஷராகும் வரை** (2பேது 1 : 5-8)

ஈ) கிறிஸ்துவின் சரீரமாகிய சபை **எடுத்துக்கொள்ளப்படும் வரை** (1 தெச 4 : 17)

34. **கிறிஸ்துவுக்குள்ளான இந்த பரிசுத்தவான்கள் யார்?** முதலாவது இவர்கள் வெளி 18:4 ன் படி ஸ்தாபன சபையை விட்டு வெளியே வந்தவர்கள். இவர்கள் வெளியே அழைக்கப்பட்டு. தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்று மறுபடியும் பிறந்து உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினால்

நிரப்பப்பட்டு, பரிசுத்தவான்களாய் ஒன்றுகூடி உன்னதங்களில் உடகார்ந்திருக்கிறார்கள். இவர்கள் இந்த பூமியில் வாழ்ந்தாலும் இவர்களுடைய ஆவி இவர்களை உன்னதத்தின் / பரலோகத்தின் சூழ்நிலைக்கு கொண்டு வந்துள்ளது. இவர்கள் தங்கள் ஆத்துமாவில் உன்னதத்தை சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். இதை தான் அப். பவுல் எபேசியருக்கு எழுதும் போது. தேவன் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும், நம்மை ஆசீர்வதித்து இருக்கிறார் என்கிறான் (எபே 1 : 3) பாருங்கள் இவர்கள் குடியிருப்பு இப்பூமி அல்ல. மாறாக பரலோகம் (பிலி 3:20) இவர்கள் பங்கு ஜீவன் உள்ளோர் தேசத்தில். மாறாக இந்த பூமியில் இல்லை. (சங் 142 : 5) இவர்கள் இம்மையில் தங்கள் பங்கை பெற்ற உலக மக்கள் அல்ல. (சங் 17 : 14) நீங்க்ள் கிறிஸ்துவுக்குள் இருக்கும்போது அவருடைய சரீரத்திற்குள் இருக்கிறீர்கள். இது ஒரு காணக்கூடாத சரீரம். ஐந்து வகை ஊழியங்கள் வெளியே அழைக்கப்பட்ட இந்த காணக்கூடாத கூட்டத்தினர் மத்தியில் தான். காணக்கூடாத தேவனுடைய ராஜ்யம் இந்த பூமியில் பரிசுத்தவான்கள் இருதயத்தில் உள்ளது. இதுதான் கிறிஸ்துவின் காணக்கூடாத சரீரம். பரிசுத்த ஆவி. Potentially the kingdom of God is in the earth, now in the heart of His saints, that is the mystical body, the Holy Spirit.

35. இந்த பரிசுத்தவான்கள் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாக தாகம் தீர்க்கப்பட்டவர்கள் (1 கொரி 12:13) The saints are united together as one body in Christ by the baptism of the Holy Spirit. இந்த காணக்கூடாத சபைக்கு தலை கிறிஸ்து (எபே 5:23). இது கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்துக்கும், எலும்புக்கும் உரியவர்களாய் இருக்கிறார்கள் (எபே 5:30) இது கற்புள்ள கன்னிகையாக கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புவிக்க நியமிக்கப்பட்டுள்ளது (2கொரி11 : 2) இது கர்த்தருடைய வருகையில் மேகங்களின் மேல் அவரோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு எப்பொழதும் அவருடனே கூட இருக்கும் (1 தெச 4 : 17) பாருங்கள் இந்த சரீரத்தை தகுதிப்படுத்தி, ஆயத்தப்படுத்துவதுதான் ஐந்து வகை ஊழியங்களின் பணி. இது தேவன் தம் சுய இரத்தத்தினாலே சம்பாதித்த சபை (அப் 20:28) இரத்தத்தில் ஜீவன் (லேவி 17:11) ஆம் தேவன் தன்னுடைய ஜீவனை கொடுத்து சம்பாதித்த சபை இதுதான். இது அவருடைய மாமிசத்துக்கும், எலும்புக்கும் உரியதாய் உள்ளது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அவயவமாக இல்லாதவர்கள் தாங்கள் சார்ந்திருக்கும் சபை பாஸ்டரின் மாமிசத்திற்கும், எலும்புக்கும் உரியவர்களாய் இருக்கிறார்கள்.

36. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பரலோகத்தில் பேர் எழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபை (எபி 12 : 23) இவர்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டவர்கள். இன்று தங்களை கிறிஸ்துவின் மணவாட்டி என்று அழைத்துக்கொள்பவர்கள் மத்தியில் ஒரே நம்பிக்கை காணப்படுகிறதா? இல்லை. அவர்கள் பிரிந்திருக்கிறார்கள். ஆனாலும் தங்களை கிறிஸ்துவின் மணவாட்டி என்று அழைத்துக்கொண்டு தங்களை தாங்களே, வஞ்சித்துக்கொண்டு இருக்கிறார்கள். கிறிஸ்துவின் மணவாட்டி கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயும் இருக்கிறார்கள். இவர்கள் ஒரே ஆவியினால் ஒரே சரீரத்துள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்கள். ஆதலால் கிறிஸ்துவின் மணவாட்டி என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் தான் கிறிஸ்துவின் சரீரம், சரீரமாகிய சபை. கர்த்தர் ஆதாமின் விலா எலும்பில் ஒன்றை எடுத்து அதை மனுஷியாக உருவாக்கி, அதை அவனிடத்தில் கொண்டு வந்தார். அவன், இவள் என் எலும்பில் எலும்பும் என் மாம்சத்தில் மாம்சமுமாயிருக்கிறாள் என்றான் (ஆதி 2:21-23) அவர்கள் ஒரே மாம்சம் (ஆதி 2 : 24) அவ்வண்ணமாகவே தேவன் கல்வாரியில் இயேசு கிறிஸ்துவின் விலாவிலிருந்து அவருடைய மணவாட்டியை வெளியே எடுத்தார் (யோ 19:34) அவள் அவருடைய எலும்புக்கும் மாமிசத்துக்கும் உரியவளாய் இருக்கிறாள். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது எல்லாவற்றையும் எல்லாவற்றிலும் நிரப்புகிறவருடைய நிரைவாகிய சரீரமாகிய சபையாகும் (எபே 1 : 23).

37. சபை என்றால் அதற்கென்று உபதேசங்கள் இருக்கும். சபையானது மனுஷர்களுடைய கோட்பாடுமீது அல்ல. அதனுடைய பாஸ்டர்களின் உபதேசங்கள் மீது அல்ல. அவர்கள் பெற்ற வெளிப்பாடுமீது அல்ல. மாறாக கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டு இருக்க வேண்டும். அதற்கு இயேசு தாமே மூலைக்கல்லாக இருக்கிறார். அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாய் எழும்புகிறது (எபே 2 : 20, 21) Now to be a church We got to have doctrines. உபதேசங்கள் இல்லாமல் எல்லாருக்கும் எல்லாமுமானேன் என கூறி அனைத்து மக்களையும் கவர்ச்சி செய்து தேவனை ஆராதிக்கும் ஒரு மனுஷன் தேவனுடைய சபையின் மேய்ப்பன் அல்ல, மாறாக அவன் ஒரு ஹோட்டல் நடத்துபவன். அங்கு ஜனங்கள் வருவார்கள், போவார்கள், ஜனங்கள் வந்தால் வரவு, வராவிட்டால் நஷ்டம். சபை மூடப்படும்.

38. **உள்ளூர் சபைகள் (Local Church) என்பது என்ன?** இது தான் உங்கள் மத்தியிலுள்ள ஏல்பெத்தேல், கல்வாரிசபை, மணவாட்டி கூடாரம், இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு, சென்னை சபை போன்றவைகள். இது

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளின் ஐக்கியம், ஒருவன் ஜலத்தினால் பிறப்பது அவனை உடன் விசுவாசிகளோடு ஐக்கியத்தில் சேர்க்கிறது. இது விசுவாசிகள் என்று தங்களை அறிக்கையிடும் கூட்டத்தினரைக் கொண்ட ஒரு காணக்கூடிய சரீரம். ஆனால் உங்கள் மேய்ப்பர்கள் இது தான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை, இது தான் மணவாட்டி சபை எனக்கூறி உங்களை மோசம் போக்குகிறார்கள். இவர்கள் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் நுழைந்த கள்ளர்கள், கொள்ளைக்காரர்கள், ஆதலால் இவர்கள் குருடர்களாக இருந்து, குருடர்களுக்கு வழிகாட்டுகிறார்கள். முடிவில் இருவரும் குழியிலே விழுவார்கள். இந்த சபையில் விசுவாசிகள், அவிசுவாசிகள், பாவனை விசுவாசிகள் உண்டு.ஒரு அரசியல்வாதி தன் சாமர்த்தியத்தினால் ஒரு கூட்டம் ஜனங்களை தனக்கு ஆதாயப்படுத்தி அரசியலில் நல்ல சம்பாத்தியம் பண்ணி தன்னை ஒரு பெரிய செல்வந்தனாக்கி கொள்கிறான். அவ்வண்ணமாகவே இந்த லோக்கல் சபை பாஸ்டர்களின் அநேகர் ஊழியத்தின் பேரில் தங்களுக்கு சொத்து சுகங்களை சேகரித்து சுகபோகமாக வாழ்கிறார்கள். அரசியலில் ஏமாளிகள் தொண்டர்கள். அதுபோலவே சபைகளில் ஏமாளிகள் பேர் விசுவாசிகள். கிறிஸ்துவின் மணவாட்டி ஏமாளி அல்ல. அவள் தன்னை இவர்களிடமிருந்து வேறுபடுத்தி கொள்கிறாள்.

39. **அப்படியானால் கிறிஸ்துவின் மணவாட்டி எங்கு இருக்கிறாள்?** அவள் இந்த கூட்டத்தில்தான் இருக்கிறாள். விசுவாசி என்று அழைக்கப்படுபவள் இவள் தான். இந்த கூட்டத்தில் ஒரு உண்மையும் உத்தமுமான ஒரு விசுவாசி, கிறிஸ்துவின் மணவாட்டி இருப்பாளாகில் அதன் பாஸ்டர் தேவனுடைய மனுஷனாகவே இருப்பார். இந்த சபை மேய்ப்பன் ஒரு கள்ளக்கபடமுள்ள வேலையாளராக இருப்பாராகில் அங்கு மணவாட்டி காணப்படமாட்டாள். அவளுக்கு அங்கு இடமே இல்லை. அந்த கூட்டம் முற்றிலுமாக அவிசுவாசிகளையும், பாவனை விசுவாசிகளையும் கொண்டதாகவே இருக்கும். உண்மையான விசுவாசி கிறிஸ்துவின் மணவாட்டி. அவள் ஒரு கள்ளகபடமுள்ள வேலையாள் கீழ் நிச்சயமாக இருக்கவே மாட்டாள். நிச்சயமாக இவள் தன்னை வேறுபிரித்து கொள்வாள். தேவன் ஒரு முழுசபையுடன் இடைப்படாமல் தனிப்பட்ட நபர்களிடமே இடைப்படுகிறார். ஆம் சகோதரனே, சகோதரியே நீ கிறிஸ்துவின் மணவாட்டியாக இருப்பாயாகில் தேவன் உன்னோடு மட்டுமே இடைப்படுபவராக இருக்கிறார். நீ சார்ந்திருக்கும் முழு சபையோடு அல்ல.

## மேய்ப்பன் :

40. என் மந்தையும் என் மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நீங்கள் மனுஷர் (எசே 34:31) பாருங்கள் ஜனங்கள் தேவனுடைய மேய்ச்சலின் ஆடுகள் (2சாமு 24:17, சங் 74:1) ஆதலால் தேவனுடைய சபை மந்தை என உருவகமாக கருதப்படுகிறது. (யோ 10:16, அப் 20:28, 1பேது 5:2) தேவனுடைய சபையாகிய மந்தையை மேய்க்கும் பொறுப்பு மேய்ப்பனுடையது (அப் 20:28, யோ 21 : 16) வேதாகமத்தில் முதல் மேய்ப்பன் ஆபேல்.(ஆதி 4 : 2) யாபால் மந்தையை மேய்க்கும் மேய்ப்பவர்களுக்கு தகப்பனானான் (ஆதி 4 : 20) தேவனுடைய சபையாகிய மந்தையை மேய்க்கும் பணிக்கு ஒருவனை நியமிப்பவர் கர்த்தர். (எபே 4:11) (யோ 21 : 15) பழைய ஏற்பாட்டிலும் இந்த முறைதான் பின்பற்றப்பட்டது. பாருங்கள் உங்களுக்கு என் இருதயத்துக்கு ஏற்ற மேய்ப்பர்களைக் கொடுப்பேன். அவர்கள் உங்களை அறிவோடும், புத்தியோடும் மேய்ப்பார்கள் (எரே 3:15) அவர்கள் கர்த்தருடைய பலத்தோடும் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய நாமத்தின் மகத்துவத்தோடும் தங்கள் மந்தையை மேய்ப்பார்கள். அவைகளை மேய்க்கத்தக்கவர்களையும் அவர்கள் மேல் ஏற்படுத்துவேன். இனி அவர்கள் பயப்படுவதில்லை, கலங்குவதில்லை, காணாமற்போவதுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 23 : 4) ஆனால் இந்நாட்களில் பலர் தங்களை தாங்களே மேய்ப்பன் என அழைத்துக்கொண்டு, தேவசித்தத்துக்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளர்கள், கொள்ளைக்காரர்கள், பலகனி வழியாக திருடனைபோல உள்ளே நுழைந்தவர்கள்.

41. இந்நாட்களில் எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண்கள், தேவவசனம் தூஷிக்கப்படும்படியாக வீடுவீடாய் திரிவதோடு மட்டுமல்லாது சபைகளிலும், பொதுஸ்தலங்களிலும் பிரசங்கம் பண்ணி வருகிறார்கள். அதன் மூலம் தங்கள் தலையாகிய புருஷர்கள் / ஆண்கள் மீது அதிகாரம் செலுத்தி வருகிறார்கள். எப்படியெனில் இராஜாவின் வார்த்தை எங்கேயோ அங்கே அதிகாரம் உண்டு (பிர 8 :4) கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்போது அங்கு அதிகாரம் செலுத்த வேண்டியதாயிருக்கிறது. இன்னும் இவர்களது அக்கிரமகிரியைகள் பெருகி வருகிறது. இந்நாட்களில் பெண்கள் மேய்ப்பன் பணியையும் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இவர்களுக்கு நீதியுள்ள ஆக்கினை நெருங்கிக் கொண்டு இருக்கிறது வேதவாக்கியங்களில் எங்கேயாவது ஒரு பெண் மேய்ப்பனை நீங்கள் கண்டது உண்டா? தீமோத்தேயு, தீத்து இருவருக்கும் பவுல் எழுதும்பொழுது அங்கு ஆண்களுக்கு அடுத்த மேய்ப்பனுக்குரிய தகுதிகளை எழுதுகிறானேயன்றி பெண்களுக்கடுத்த மேய்ப்பனுக்குரிய தகுதிகள் அங்கு

கூறப்படவில்லை. ஏனென்றால் பெண்கள் சபைக்கு ஊழியக்காரியாக இருக்கலாம் (ரோ 16 : 1) ஆனால் மேய்ப்பனாக இருக்க முடியாது. பெண்களை மேய்ப்பனாக கொண்ட சபைக்கும், தேவனுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை. மாறாக அந்த சபை பிசாசின் ஆதிக்கத்தில் இயங்கி வரும் ஒன்றாகும். ஆதலால்



வேதாகமக் கல்லூரிகளில் படித்து, பட்டங்கள் பல பெற்று, நீளமான வெள்ளை அங்கிகளைத் தரித்துக்கொண்டு ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களில் அமர்ந்து, சந்தைகளில் வந்தனங்களைப் பெற்று மேய்ப்பர்கள், உதவி மேய்ப்பர்கள்என்ற பெயரில் உலாவி வரும் வெள்ளை அடிக்கப்பட்ட கல்லரைகளுக்கு ஒப்பாக, வேதவசனம் தூஷிக்கப்படும் படியாக, வேதவாக்கியங்களில் எங்கும் அதாரம் இல்லாது, எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராத இப்படிப்பட்ட வெள்ளை அங்கிகளை குறித்து என்ன சொல்லுவது? இந்த வெட்கக்கேட்டை பார்த்து எனக்கு சகிக்க முடியவில்லையே? உங்களுக்கு?

பெண்களை மேய்ப்பனாகொண்ட சபை உங்களை நித்திய ஜீவனுக்குள் வழி நடத்த முடியாது. யெசபேலைப் போன்ற இந்த பெண் மேய்ப்பர்கள் உங்களை வஞ்சிக்கும்படி அவர்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். அவர்களுக்கு தங்கள் வேசிமார்க்கத்தை விட்டு மனந்திரும்பவிருப்பமில்லை, மனமில்லை. ஆதலால் ஜீவபுஸ்தகத்திலிருந்து இவர்களுடைய நாமங்கள் கிறுக்கிப்போடப்படும். அவர்களுடைய நாமம் மட்டுமல்ல இவர்களை மேய்ப்பர்களாக நியமித்தவர்கள் நாமங்களும் கிறுக்கிப்போடப்படும். ஸ்தாபன சபைகள் யாவும் அந்த மகாவேசியின் (கத்தோலிக்க திருச்சபை) குமாரத்திகள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

42. பெண் பிரசங்கிகளை குறித்து இருவர் எழுதியுள்ள போதனைகளை உ ங்களுக்கு கீழே தருகிறேன். எனக்கு அவைகளோடு ஆவியில் ஒரு மனப்பாடு உண்டு. அவர்களுக்கு என் நன்றி

**பெண்களின் நிலையைப்பற்றி வேதாகமம் கூறுவது யாது?**

அ) ஒரு பெண்ணின்ஆத்துமா, ஒரு ஆணின் ஆத்துமாவை விட குறைவான மதிப்பு உடையதா? இல்லை. ஏனெனில் கிறிஸ்து இயேசுவின் மீது வைத்த விசுவாசத்தின் வழியாய் நீங்கள் அனைவரும் கடவுளின் மக்களாய் இருக்கிறீர்கள். எவ்வாறெனில் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நீங்கள் எல்லாரும் கிறிஸ்துவை அணிந்து கொண்டீர்கள். இனி யூதன் என்றும், கிரேக்கன் என்றும் இல்லை : அடிமை என்றும் சுயாதீனன் என்றும் இல்லை : ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை : கிறிஸ்து இயேசுவுக்குள் நீங்கள் அனைவரும் ஒன்றே என்று கலாத்தியருக்கு எழுதிய நிருபத்திலும், (கலா 3 : 26-28) பிலிப்பியருக்கு எழுதும் போது எயோதியாள் மற்றும் சிந்திக்கேயாள் என்ற இரு சகோதரிகளுடைய பெயர்கள் ஜீவபுஸ்தகத்தில் எழுதியிருக்கிறது என்றும் பவுல் கூறுகிறார் (பிலி 4 : 2-3).

ஆ) பின் எந்த அர்த்தத்தில் பெண்கள் பலவீன பாண்டங்கள் என்று வேதாகம் கூறுகிறது? (1பேது 3 : 7) நிச்சயமாக ஆவிக்குரிய விஷயங்களில் அல்ல. அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையை சுதந்தரித்து கொள்ளுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதை கவனியுங்கள். சொல்லப்போனால் திருவசனத்துக்கு கீழ்படிவதிலும், சத்தியத்தின்படி நடப்பதிலும் பெண்களே சிறந்த முன் மாதிரிகள் (1 பேதுரு 3 : 1-2) தீமோத்தேயுவின் தாயாரும் பாட்டியும் (2 தீமோ 1 : 5) லாசருவின் சகோதரிகள் மார்த்தாள், மரியாள், ஆஸ்தியால் ஊழியம் செய்த கூசாவின் மனைவி யோவன்னாள் (லூக் 8 : 2,3) இப்படி எத்தனையோ பேர் பலவீனமான பாண்டம் என்று பேதுரு குறிப்பிடுவது சரீர பலவீனத்தைதான் ஆவிக்குரிய பலவீனத்தை அல்ல.

இ) கணவன் மனவைிக்கு தலையாயிருக்கிறான் (எபே 5 : 23) ஆகவே மனைவி கணவனுக்கு கீழ்படிந்திருப்பது அவசியமாகிறது (எபே 5 : 22) கொலோ 3 : 18, 19 வசனப்பகுதியும் இதையே கூறுகிறது. அப்படியானால் பரிசுத்த ஆவியானவர் பெண்களை இரண்டாம் தர பிரஜை என்கிறாரா? அப்படி இல்லை. கீழ்படியுங்கள் என்று இக்கட்டத்தில் பெண்களுக்கு சொல்லப்பட்டிருப்பது தேவனுடைய சிருஷ்டிப்பின்படி நியாயமானதே. தேவனுடைய திட்டத்தில் ஒவ்வொரு வரும் எதாவது ஒரு கட்டத்தில் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று அறியலாம். சபையானது கிறிஸ்துவுக்குள் கீழடங்கியிருக்கிறது (எபே 5:24) ஆண்களுக்கும் "சகோதரரே, இப்படிப்பட்டவர்களும் (பரிசுத்தவான்களுக்கு உழியம் செய்யும் படிக்கு தங்களை ஒப்புவித்தவர்களுக்கு) உடன் வேலையாட்களாய்ப் பிரயாசப்படுகிற மற்ற யாவருக்கும் நீங்கள் கீழடங்கியிருக்கவேண்டும். (1கொரி 16:16) இளைஞர்களுக்கும் இக்கட்டளை உண்டு" இளைஞரே மூப்பருக்கு அடங்கியிருங்கள். நீங்கள் எல்லாரும் ஒருவருக்கொருவர் அடங்கியிருந்து மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்" (1பேதுரு 5:5) மேலும் தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் அடங்கியிருங்கள் (எபே 5:21) என்ற கட்டளைகளில் ஆண், பெண் சிறுவர், மனைவி, கணவன், அதிகாரி, வேலைக்காரர் முதலான சகலரும்

அடங்கியிருக்கினறனர் என்று அறிவோமாக, ஏன்? நமது ஆண்டவராகிய இயேசு பிதாவாகிய தேவனுக்கு கீழ்படிந்திருந்தாரே. (பிலி 2 : 8 எபி 5 : 8) ஆகவே சகோதரிகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இச்சிறப்புக் கட்டளையை தங்கள் மீது ஆண்வர்க்கத்தால் திணிக்கப்பட்ட அடிமை சாசனம் என்று முறுமுறுக்காமல் கர்த்தரால் அவருடைய பிரஜைகளுக்குக் கொடுக்கப்பட்ட பல்வேறு கட்டளைகளைப்போன்று இது மனைவிமார்களுக்கு கொடுக்கப்பட்ட சிறப்புக்கட்டளை என்று அறிந்து மனமுவந்து ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஈ) இக்கட்டளையைக் கணவன்மார்கள் தங்கள் மனைவிமார்களைக் கொடுமைப்படுத்துவதற்கு தேவன் அனுமதியளித்திருக்கிறார் என்று எண்ணி மனைவிகளை அடிமைகளாக நடத்தலாமா? கூடவே கூடாது. கணவனுக்கு அடங்கி நடக்கவேண்டும் என்பது மனைவிமார்களுக்கு எப்படிச்சிறப்புக் கட்டளையோ, அதற்கு எவ்விதத்திலும் குறைவில்லாத ஒரு சிறப்புக் கட்டளை ஆண்களுக்கு உண்டு. உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள். கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்து அதற்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்ததைப் போல புருஷர்களும், மனைவிகளில் அன்பு கூற வேண்டும் (எபே 5 : 25-28) தங்கள் மனைவிகளைச் சொந்த சரீரங்களாகப் பாவித்து, தங்களைப் போஷித்து காப்பாற்றுகிறது போல் அவர்களையும் நேசித்துப் போஷித்துக் காப்பாற்ற வேண்டும் (எபே 5 : 29) கணவனின் இந்த தெய்வீக அன்பும் " மனைவி கணவனிடத்தில் அடங்கிருத்தலும், சந்திக்கும் போது, அது மோட்சமே பூமிக்கு இறங்கி வந்ததற்கு ஒப்பாகும்.

உ) ஒரு ஸ்திரீ ஆண்களும், பெண்களும் கலந்துள்ள சபைக்கூட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தலாமா? சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கடவர்கள். பேசும்படி அவர்களுக்கு உத்தரவில்லை. அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். அவர்கள் ஒரு காரியத்தை கற்றுக்கொள்ள விரும்பினால் வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாிக்கக்கடவர்கள். ஸ்திரீகள் சபையில் பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே என்றும் (1கொரி 14:34, 35) ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து அமைதலோடு கற்றுக்கொள்ளக் கடவள். உபதேசம் பண்ணவும் புருஷன் மேல் அதிகாரம் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை. அவள் அமைதலாயிருக்க வேண்டும் ( 1 தீமோ 2 : 11, 12) என்றும் வேதம் கூறுகிறது. அப்படியிருக்க அவள் தலைமை ஏற்பது என்பது எப்படி நியாயமாகும்?.

ஊ) ஒரு ஸ்திரீ சபையில் எப்படிப்பட்ட பங்கு வகிக்கலாம் என்று வேத ஆதாரத்தோடு கூறுவீர்களா? பொதுவான ஆராதனைக் கூட்டங்களில் கலந்துக்கொள்ள தடையேதுமில்லை. எல்லா அம்சங்களிலும் கலந்து கொள்ளலாம். ஆனால் வழிநடத்த முடியாது. பின்பற்றலாம், உதாரணமாக பாட்டுப்பாடலாம் (கொலோ 3 : 16) தங்கள் விசுவாசத்தை அறிக்கையிடலாம். ஒரு கேள்வி கேட்கலாம், பதிலும் கூறலாம் (அப் 5 : 8)

எ) அப்படியானால் ஒரு ஸ்திரீக்கு போதிக்கும் வாய்ப்பே இல்லையா? ஏன் இல்லை? முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்கு போதிக்க வேதம் அனுமதியளிக்கிறது (தீத்து 2 : 3-5) வீட்டிலும், பெண்கள் மட்டுமே அடங்கியுள்ள கூட்டத்திலும் போதிக்கலாம். கணவன் ஒருவருக்கு போதிக்கும் போது உடனிருந்து ஒத்தாசை செய்யலாம். (அப் 18 : 26) ஆண்களோடு சேர்ந்து அவர்களின் ஊழியத்தில் உதவியாக இருக்கலாம் (பிலி 4 : 3) மேடையிலேறி பிரசங்கம் பண்ணுவது தான் ஊழியம் என்று அநேகர் தவறாக நினைத்துக்கொண்டு தேவனுடைய திட்டத்தை பழித்துக்கூறி மீறி வருகிறார்கள். அது அபாயகரமான போக்கு. இப்படி நினைத்துக்கொண்டு ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி பெபேயாளை (ரோ 16 : 1) சுட்டிக்காட்டுவார்கள். ஊழியம் என்றால் தொண்டு அல்லது சேவை என்று பொருள். அது எந்தத்திருப்பணியையும், சபைகூடும் இடத்தை சுத்தம் செய்வதையும் குறிக்கும். தேவசித்தத்துக்கு எதிர்த்து நின்ற கோராகுவின் நிலையை அடைய வேண்டாம். தேவன் தாய்குலத்தை வெறுக்கவில்லை. தவறாக எண்ணிக்கொண்டு மயங்காதீர்கள். உற்சாகமாக உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஸ்தானத்தில் திருப்தியடையுங்கள்.

## 43. பெண் பிரசங்கிகள் :

அ) நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்நாட்கள் சீர்கெட்ட "நோவாவின் நாட்கள்" தேவகுமாரர்கள் மனுஷகுமாரத்திகளை சௌந்தரியமுள்ளவர்களென்று காணும் நாட்கள் (மத் 24:37-39, ஆதி 6 : 2). மனிதர்கள் சத்தியத்துக்கு இணங்காதவர்களாகவும், இச்சையடக்கமில்லாதவர்களாவும், துணிகரமுள்ளவர்களாகவும் இருக்கும் நாட்கள் (2 தீமோ 3 : 1-9) தேவபக்தியை ஆதாயத்தொழிலென்று கண்டு மாறுபாடான தர்க்கங்களை உண்டாக்கிப் பெண்களைப் பிரசங்கிகளாய் ஏற்குங்காலம் (1 தீமோ 6 : 5) திரைப்பட நடிகைகளைப் பிரசங்கிகளாய் ஏற்று ஒரு மேடையில் அவர்களைப் பிரசங்கம் செய்ய வைத்து மறுமேடையிலே அவர்கள் நடித்த திரைப்படங்களை திரையிடும் நாட்கள். வஞ்சிக்கிற ஆவிகள் விசுவாச துரோகஞ்செய்யும் நாட்கள். "அவன் (ஆதாம்) உன்னை ஆண்டுக்கொள்வான்" (ஆதி 3:16) என்ற தேவகட்டளையை மீறி, ஆணுடன் பெண் சம உரிமையைத் தேடி, திருச்சபைகளிலே ஸ்திரீகள் பாஸ்டர்களாகவும், மூப்பர்களாகவும், பிரசங்கிகளாகவும், இடம் பிடித்து அடுக்கு மொழிப்பேசும் நாவலர்களாயிருக்கும் நாட்கள். "பெண் பிரசங்கிகளை ஏன் அனுமதிக்க கூடாது? என்று கேட்டு வைராக்கியத்தினால் வரிசையாகப் பலப்பெண்களை மேடைமேலேற்றி பிரசங்கம் செய்யவைக்கும் நாட்கள்.

ஆ) ஆனால் பெண் பிரசங்கிகளை வேதம் அனுமதிக்கிறதா? வேதம் கூறுகிறதை சற்று கவனியுங்கள்: "சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிக்கக்கடவர்கள் : பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை.

அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தை கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக் கடவர்கள். ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாய் இருக்குமே (1கொரி 14 : 34 ,35) சபைகளில் பேச அதிகாரமில்லாதவர்கள் பொது கூட்டங்களில் பிரசங்க மேடையின் மேல் நின்று பேசலாமா? அப்படிப் பேசுகிறதும் பேச அனுமதிப்பதும் யோக்கியமான ஒரு காரியமாய் இருக்குமா? நமக்குத் தேவன் மீது அன்பு இருக்குமானால் அந்த அன்பு "அயோக்கியமானதைச் செய்யாது" ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள். உபதேசம் பண்ணவும் புருஷன் மேல் அதிகாரம் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை. அவள் அமைதலாயிருக்க வேண்டும் (1 தீமோ 2 : 11, 12) ஏன் என்பதை அறிய தொடர்ந்து 13, 14 மற்றும் 15 வசனங்கள் வரை வாசித்து புரிந்துக் கொள்ளுங்கள்.

இ) திருச்சபைகளில் ஊழியக்காரிகள் உண்டு. அவர்கள் தங்கள் சபை பாஸ்டரின் கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள். அவர்களுடைய ஊழியம் பணி விடைசெய்வதும், ஸ்திரீகள் நடுவில் ஊழியஞ்செய்வதும், ஜெபம் செய்வதுமாகும். செசரியா பட்டணத்திலிருந்த சுவிசேஷகனான பிலிப்புவின் நான்கு குமாரத்திகள் தீர்க்கதரிசன வரத்தை பெற்றிருந்தனர். அப் 21 : 8,9. அவர்கள் சுவிசேஷிகளாக (பிரசங்கிகளாக) இருக்கவில்லை. அவர்கள் சபைக் கூடுதலிலோ பொதுக்கூட்டத்திலோ உபதேசம் பண்ணவுமில்லை. அயோக்கியமானதைச் செய்ய வேதத்தில் ஆதாரமில்லை. இதையும் அதையும் சுட்டிக்காட்டி முள்ளில் உதைக்கிறது கடினமானக் காரியமாகும். திருவசனத்திற்குக் கீழ்ப்படியுங்கள், தேவனுடைய ராஜ்யம் சமீபித்து இருக்கிறது. கர்த்தருடைய நாள் பயங்கரமாக நியாயந்தீர்க்க வருகிறது ( மத் 24 : 7,8,14,21) (யோவேல் 2 : 1-11)

44. ஒரு காலத்தில் என் மகனை / மகளை வேதாகமப் பள்ளிக்கு அனுப்பபோகிறேன் என்று யாராவது கூறினால், அவர்களை சபையைவிட்டு விரட்டுவார்கள். ஆனால் இப்பொழுதோ அது ஒரு பெரிய செயலாக எண்ணப்படுகிறது. என் மகன் / மகள் வேதாகமப் பள்ளியில் படித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று பெருமையாக பேசுகிறார்கள். அது என்ன? அவர்கள் தங்களுக்கு தாங்கே குழியை வெட்டிக் கொள்கிறார்கள். (7-ம் சபைக்கால தூதனின் விமர்சனம்) ஊழியக்காரனுக்கு, ஊழியக்காரிக்கு அல்ல, தேவையான ஞானம் எங்கிருந்து வருகிறது? அது பரத்தில் இருந்து வருகிறது, வேதாகம கல்லூரிகளில் இருந்து அல்ல. வேதவாக்கியங்களை அறிந்து கொள்ள கர்த்தர் ஒருவனுடைய மனதை திறக்க வேண்டும் (லூக் 24 : 25) பாருங்கள் நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்து இருக்கிறது. ஒருவரும் உங்களுக்கு போதிக்க வேண்டியது இல்லை. அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்கு போதிக்கிறது. அது சத்தியமாய் இருக்கிறது. பொய் அல்ல, அது உங்களுக்கு போதித்தபடியே அவரில் நிலைத்து இருப்பீர்களாக (1யோ 2:27) என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து, நான் உங்களுக்கு சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் (யோ 14:26) சத்திய ஆவியாகிய அவர் வரும் போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் (யோ 16 : 13) பாருங்கள் தேவனுடைய சரீரமாகிய சபையை, தேவனால் ஏற்றப்படுத்தப்பட்ட ஊழியகாரர்களை, அவர்கள் கர்த்தரிடத்தில் இருந்து பெற்ற அபிஷேகமானது / பரிசுத்த ஆவி அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தும். அவர்களுக்கு மனுஷர்கள் தங்கள் லௌகிக ஞானத்தைக் கொண்டு போதிக்கும் வேதாகம கல்லூரி படிப்பு மிக்க அத்தியாவசியமாக இருக்கிறது. ஏனென்றால் ஸ்தாபன சபைகள் யாவும் சாத்தனால் வழி நடத்தப்பட்டு வருகிறது. அது அவனுடைய ஆளுகைக்குள் இருந்து, அவனுடைய ஊழியக்காரர்களைக் கொண்டு இயக்கப்பட்டு இயங்கி வருகிறது.

45. மேய்ப்பன் என்பவன் ஆடுகளை மேய்க்கும், ஆட்டு மந்தைகளை காக்கும் ஒரு மனிதன். மேய்ப்பன் ஆடுகளை வழிநடத்தி பாதுகாத்து போஷிக்க கடமைப்பட்டுள்ளான். மந்தைக்கு நல்ல மேய்ச்சலை கண்டு அடைந்து அவைகளை போஷிக்க வேண்டும். இவர்கள் உங்கள் அத்துமாவுக்கு மேய்ப்பர்கள். (1 பேது 2 : 25) மேய்ப்பன் என்ற சொல் ஆடுகளை மேய்க்கும் ஒரு மேய்ப்பனைப் போல், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை அதாவது ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுப்பிறப்பு அடைந்த தேவசாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொண்ட பரிசுத்தவான்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவில் பரிபூரணப்படும் வரை அவர்களை வார்த்தையைக் கொண்டு இக்காலத்திற்குரிய செய்தியை கொண்டு, மேய்ப்பன் அல்லாத இதர நான்கு வகை ஊழியங்களை கொண்டு போஷித்து வழிநடத்தி பாதுகாத்து பராமரிக்க வேண்டும்.

46. பாஸ்டர் என்ற சொல் புதிய ஏற்பாட்டில் ஒரே ஒரு முறை தான் காணப்படுகிறது ( எபே 4 : 13) பாஸ்டர் என்ற சொல் மேய்ப்பனையே குறிக்கிறது. கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார் (சங் 23:1) இயேசுவை மேய்ப்பனாக கொண்ட சபை பாக்கியமுள்ளது. ஏனென்றால் அவர் மந்தைக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தார் (யோ 10:10) இவர் ஒரு மேய்ப்பனைப் போல தமது மந்தையை மேய்ப்பார் ஆட்டுக்குட்டிகளை தமது புயத்தினால் சேர்ந்து தமது மடியிலே சுமந்து கரவலாடுகளை மெதுவாய் நடத்துகிறார் (ஏசா 40 : 11) ஒரு நல்ல மேய்ப்பன் தன் மந்தையில் பலவீனமாய் உள்ளவைகளை பலப்படுத்துகிறான். நசல் கொண்டவைகளை குணமாக்குகிறான். எலும்பு முறிந்தவைகளை காயம் கட்டுகிறான். துறத்துண்டவைகளை

திரும்ப கொண்டு வருகிறான். பாருங்கள் ஒரு மேய்ப்பனுக்கு தன் ஆடுகளை குறித்த பொறுப்புணர்ச்சி தேவை, நூறு ஆடுகளில் ஒன்று காணாமற்போனல் அதை எப்டியும் தேடிக் கண்டுபிடிக்கிறவனாக இருக்க வேண்டும். வசதி உள்ள பார்ட்டி ஒழுங்காக நல்லதொரு பெரிய தொகையை தசமபாகமாக, காணிக்கையாக கொடுக்கிற குடும்பம் ஒரு நாள் சபைக்கு வராவிட்டால் வீடு தேடி ஓடுவதும் அதே நேரத்தில் ஒரு தரித்திரன் வராவிட்டால் அவன் வீடு மேய்ப்பன் சிந்தனையில் இல்லாமற்போதும் தான் இந்நாட்களில் காட்சி. தியானிங்கள் (மத் 18:12 லூக் 15 : 6) தசமபாகம் காணிக்கைகளுக்காக கெர்ச்சிக்கிற சிங்கங்களை போல இரையை கவ்வுகிறவனாக, ஆத்துமாக்களை பட்சிக்கிறவனாக இருக்க கூடாது. அநியாயமாக பொருளை தன் இல்லத்துக்கு சம்பாதிக்கிறவனாக இருக்க கூடாது. ஒரு நல்ல உண்மையும் உத்தமுமான பொறுப்புள்ள மேய்ப்பன் காணாமற் போனவைகளை தேடிக் கண்டு பிடிக்கிறான் (எசே 34:4) இதுவே ஒரு நல்ல மேய்ப்பனுடைய அடையாளம்.

47. நீங்கள் உங்கள் மேய்ப்பர்களை குறித்து பெருமையாக பேசுகிறீர்கள். நல்லது. ஆனால் அவர்களிடம்மேற்கண்ட குணாதிசயங்கள் காணப்படுகிறதா? ஆடுகளை ஜீவதண்ணீர் உள்ள ஊற்றுகள் அண்டைக்கு வழி நடத்துகிறாரா? (வெளி 7 : 13) இயேசு ஆடுகளுக்காக தன் ஜீவனையும் கொடுத்தார். (யோ 10:15) இயேசு மந்தைக்கு பிரதான மேய்ப்பன் (1பேதுரு 5 : 4) இவரே பெரிய மேய்ப்பனும் கூட (எபி 10:20) இவர் உங்கள் ஆத்துமாவுக்கு மேய்ப்பனும் கண்காணியுமானவர் (1 பேதுரு 2:25) சபையானது இவரது மந்தை (யோ 10:1-16) பொதுவாக மந்தைக்கு மேய்ச்சலை தரும் பொறுப்பு மேய்ப்பனுடையது. மேய்ப்பன் ஒவ்வொரு ஆடுகளின் நிலைமையை நன்கு அறிந்தவனாக இருக்க வேண்டும். தன் பொறுப்பிலுள்ள மந்தையின் மேல் மிக்க கவனமுள்ளவனாக இருக்க வேண்டும் (நீதி 27:23) பிறருடைய மந்தைக்கு இவர் அடிக்கடி விசிட் செய்ய வேண்டிய தேவையில்லை. 100 / 200 பேர் உள்ள மந்தையில் உள்ள ஆடுகளில் அதிகமானவர்களின் பெயர்கள் பாஸ்டருக்கு தெரிவதில்லை. அவருக்கு யாருடைய பாக்கெட் கனமாக தெரிகிறதோ அவருடைய பெயரே ஞாபகத்திலுள்ளது.

48. மேய்ப்பன் கிறிஸ்துவை ஏற்று கொண்டவர்களுக்கு அவர்கள் அன்றாட வாழ்க்கையில் நடக்க வேண்டிய முறையை பற்றிய உபதேசங்களை கொடுக்க வேண்டும். மேய்ப்பன் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் ஊன்ற கட்டப்படுவதற்கு ஏற்ற போதனைகளை கொடுக்க வேண்டும். (எபே 5:22, கொலோ 3 : 18-4:2,1 பேது 2:17 : 3 :11) மேய்ப்பன் தன் அதிகாரவரம்புக்குள் இருக்கும் உள்ளூர் சபையில் உள்ள விசுவாசிகளையும் பரிசுத்தவான்களையும் கண்காணிக்கவும் அவர்களுக்கு நற்பயிற்சி அளிக்கவும், அவர்களை சத்திய மார்க்கத்தின் பாதையில் வழிநடத்தவும், அவர்கள் மீது அன்பு செலுத்தவும் கடமைப்பட்டவர்கள் (அப் 20 : 28) பரிசுத்தவான்கள் ஆவிக்குரிய முழுவளர்ச்சியடைய அவர்களுக்கு தகுதியான ஆகாரங்களை கொடுத்து இதர நான்கு வகை ஊழியங்களினால் உண்டாகும் உபதேசங்கள / போதனைகளை கொடுத்து அவர்களுடைய வளர்ச்சியில் கவனமுடையவர்களாய் இருக்க வேண்டும்.

49. பொதுவாக மேய்ப்பர்கள் மந்தையை பாதுகாக்க வேண்டும். மந்தைக்கு இரட்சிப்பின் மேய்ச்சலை கொடுக்க வேண்டும். ஐந்து வகை ஊழியத்தில் உள்ள மேய்ப்பர்கள் கர்த்தரால் அவருடைய சரீரமாகிய சபையை பக்திருத்தி அடைய செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டவர்கள். இவர்கள் தேவனுடைய சபை, சத்தியத்துக்கு தூணும் ஆதாரமுமாயிருக்க அதை இதர நான்கு வகை ஊழியங்களை கொண்டு ஊன்றகட்ட செய்கிற பணியை கொண்டவர்கள். ஆடுகள் மேய்க்கும் ஒரு மேய்ப்பன் ஆட்டு குட்டிகளை (இளம் விசுவாசிகள்) தனது புயத்தினால் சேர்த்து தன் மடியிலே சுமந்து கரவல் ஆடுகளை மெதுவாய் நடத்துவது போன்று ஒரு மேய்ப்பன் தன் மந்தையை மேய்க்க வேண்டும் . (ஏசா 40:11)

50. ஐந்து வகை ஊழியங்களில் மேய்ப்பன் பணியை மிக்க கடினமானது. தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தையை பேணிக்காக்க வேண்டியதுள்ளது. ஒரு குடும்பத்தலைவன் தன் குடும்ப பாரத்தை தன் தோளில் மேல் சுமக்க வேண்டியவனாக இருக்கிறான். அது போன்றே ஒரு மேய்ப்பனும் மந்தையில் ஒவ்வொரு ஆடுகளின் மீதும் கவனம் செலுத்த வேண்டியவனாய் இருக்கிறான். உதாரணமாக எனக்கு ஐந்து பிள்கைள், நான் குடும்ப தலைவன் பொறுப்பிலிருந்து ஒவ்வொரு பிள்ளைகளின் தேவைகளை அறிந்து அவைகளை ஏற்ற வேளையில் சந்திக்க வேண்டியவனாயிருக்கிறேன். குடும்ப தேவைகளின் முழு பொறுப்பு என்மீது இருக்கிறது. அது போல் மந்தையில் உள்ள ஒவ்வொரு ஆடுகளின் முழு பொறுப்பும் மேய்ப்பன் மீது உள்ளது. ஆதலால் தான் ஐந்து வகை ஊழியங்களில் மிகக் கடினமான பணியை மேய்ப்பன் உடையவனாக இருக்கிறான். ஆனால் நவீன மேய்ப்பனோ ஒரு தொழிலாக மேய்ப்பன் பணியை செய்கிறான்.

51. இதர நான்கு வகை ஊழியர்கள் சபைக்கு வருவார்கள். தங்கள் தங்கள் பணியை முடித்துக்கொண்டு சென்று விடுவார்கள். சில காரியங்களை குறித்து சபையை கண்டித்து உணர்த்துவார்கள், ஆகாரத்தை மந்தைக்கு கொடுப்பார்கள். பின் சென்று விடுவார்கள். ஆனால் அந்த ஆகாரத்தை கொண்டு மந்தையை மீண்டும் போஷிக்க வேண்டியது மேய்ப்பனுடைய கடமையாகும். கடினமான உபதேசங்களினால் ஆடுகள் ஒன்று அங்கும் இங்குமாக ஓடும். அவைகளை தட்டி அரவணைத்து கொள்ள வேண்டியது மேய்ப்பனுடைய

கடமையாகும். மேய்ப்பன் தன் பணியில் தவறினால் ஆடுகள் மந்தையை விட்டு ஓடிவிடும். இதனால் தான் மேய்ப்பனின் பணி மிக மிக கடினமானதாகும். இந்த பணிக்கு பொதுவாக துணிச்சல் தேவை. (1 சாமு 17 : 34-36) மந்தையை கள்ள கபடமுள்ள வேலையாட்களிடமிருந்து, கள்ளர்களிடமிருந்து தப்புவிக்க வேண்டும். ஆட்டுத் தோலை போர்த்திய ஓநாய்களிடமிருந்து தப்புவிக்க வேண்டும். மாறுபாடான உபதேசங்களிலிருந்து காத்துக்கொள்ள வேண்டும். ஆமோஸ் 3:12 குறித்ததான பொறுப்புணர்ச்சி தேவை. மத் 18 : 12,13 லூக் 15 : 4-6 மேய்ப்பனுக்கு அன்பும் பொறுமையும் தேவை. ஏசா 40 : 11 மேய்ப்பனுக்கு மந்தையின் மேல் கவனம் தேவை. நீதி 27 : 23 மேய்ப்பன் மந்தைக்கு மாதிரியாக இருக்க வேண்டும். தன்னலம் இருக்க கூடாது. நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக ஜீவனைக் கொடுக்கிறான். அப்போஸ்தலர்கள் விசுவாசிகளுக்காக தங்கள் ஜீவனையும் கொடுக்க மனதாய் இருந்தார்கள் (1 தெச 2 : 8) மந்தையின் நலத்தை பேணுகிறவனாக இருக்க வேண்டும்.(1 பேதுரு 5 : 2,3)

52. ஒவ்வொரு லோக்கல் சபையும் தனி சுயாதினம் கொண்டது. பாஸ்டரே அதற்கு தலை. அதே நேரத்தில் பாஸ்டர் ஆவியினால் வழிநடத்தப்பட வேண்டும் (Local churches are sovereign the pastor is the head as long as he led by the Holy Ghost) பாஸ்டர் மந்தையின் மேய்ச்சல் எங்கு இருக்கிறது? என்பதை நன்கு அறிந்தவனாக இருக்க வேண்டும். ஆடுகளுக்கு ஏற்ற ஆதாரத்தை ஏற்ற வேளையில் கொடுக்க வேண்டும். கலப்படமுள்ள ஆகாரத்தை கொடுக்கக் கூடாது.

53. மேய்ப்பனுக்கென்று பிரத்தியோகமான தகுதிகள் எதுவும் கொடுக்கப்படாவிட்டாலும் மேய்ப்பனுக்கு ஒரு கண்காணிக்குரிய தகுதிகள் பொருந்தும். அதன்படி ஒரு மேய்ப்பன் கீழ்கண்ட தகுதிகளை 1 தீமோ 3 அதி படி மற்றும் தீத் 1 : 5-9படி உடையவனாக இருக்க வேண்டும். கீழ்கண்ட தகுதிகளின்படி இல்லாத ஒருவனை நீங்கள் மேய்ப்பனாக கொண்டிருப்பீர்களானால் முதலாவது அவன் கர்த்தரால் தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைய ஏற்படுத்தப்பட்ட மேய்ப்பன் அல்ல. மாறாக அவன் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளனும், கொள்ளைக்காரனுமாய் இருக்கிறான். ஆம் இவன் பலகனிவழியாய் திருடனை போல் நுழைந்தவன். நேர் வழியை விட்டு குறுக்கு வழியை கையாண்டவன்.

1) ஒரு மேய்ப்பன் சபை மூப்பரைப்போன்று வயதில் முதிர்வுடையவராக இருக்க வேண்டும். திருமணம் ஆகாத, மீசை முளைக்காத வாலிபர்கள் நமது சபைகளில் பாஸ்டராக, மூப்பராக இருப்பது ஒரு வெட்க கேடு. அவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல. ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளர்கள்.

2) மேய்ப்பன் குற்றம் சாட்டப்படாதவனாக இருக்க வேண்டும். அவன் மீது எந்தவிதமான குற்றச்சாட்டும் இருக்ககூடாது. உங்கள் சபை பாஸ்டர்களை பார்த்தால் அனைவரும் ஏதாவது ஒரு வகையில் குற்றச்சாட்டுகளை கொண்டவர்களாகவே காண்கிறேன். பாருங்கள் ஒருவன் மீது அவர் இரு எஜமான்களுக்கும் ஊழியம் செய்கிறாரே என்ற குற்றச்சாட்டு, மற்றொருவன் மீது ஐந்து வகையான ஊழியங்களுக்குரிய தசமபாகத்தை தானே எடுத்துக்கொள்கிறாரே என்ற குற்றச்சாட்டு. இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் பாஸ்டர்கள் மீது இருக்ககூடாது. இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை கொண்டவர்கள் ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளர்கள்.

3) ஒரே மனைவியை உடையவனாக இருக்க வேண்டும். ஸ்டெப்னி அதாவது சின்ன குடும்பம் எதுவும் வைத்திருக்கக்கூடாது. ஸ்டெப்னி வைத்திருப்பவன் ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளன்.

4) ஜாக்கிரதையுள்ளவனாக இருக்க வேண்டும். அதாவது அனைத்துக்காரியங்களையும் செய்வதில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். எந்த காரியத்திலும் அஜாக்கிரதையாக இருந்து இழப்பு ஏற்படும் நிலையில் இருக்ககூடாது, உபதேசங்களை, போதனைகளை கொண்டுவருவதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். மந்தையின் ஆடுகளை தன் அஜாக்கிரதையினால் இழக்கிறவனாக இருக்கக்கூடாது. தவறான உபதேசங்களை, போதனைகளை, அஜாக்கிரதையாய் சபைக்குள் கொண்டு வருகிறவன் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளன்.

5) தெளிந்த புத்தியுள்ளவனாக இருக்க வேண்டும். ஒரு காரியத்தில் தெளிவான கருத்தைக் கொண்டவனாக எதையும் நன்கு நிதானித்து பற்றிக்கொள்கிறவனாக இருக்க வேண்டும். சபையில் இன்று ஒரு உபதேசம் , பின் நாளை மற்றொரு உபதேசம், பின் நாளை நின்று இன்னுமொரு உபதேசம் என அனுதினமும் புது புது உபதேசங்களைக்கொண்டு வருபவனாக இருக்ககூடாது. எந்த ஒரு உபதேசத்திலும், போதனைகளிலும் தெளிவு இல்லாதவன் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளன்.

6) யோக்கியதை உள்ளவனாக இருக்க வேண்டும். ஒரு காரியத்தில் பிறரை கடிந்து கொள்ளும் போது, தான் அந்த காரியத்தில் யோக்கிதை உள்ளவனாக இருக்க வேண்டும். சபையாருக்கு கர்த்தருக்குரிய தசமபாகத்தை திருடாதீர்கள் என்று உபதேசிக்கும் போது இவர் கர்த்தருக்குரிய தசமபாகத்தில் இதர நான்கு பங்குகளை திருடுகிறவனாக இருக்கக்கூடாது. திருடுகிறவன் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறுவழியாய் ஏறிய கள்ளன், மற்றும் கொள்ளைக்காரன்.

7) போதக சமர்த்தனாக இருக்க வேண்டும். கர்த்தருடைய வருகை வந்து விட்டதா? இல்லையா என்று

கேட்டால் வரவில்லை என்று ஆணித்தனமாக அடித்து பேசுகிறவனாக இருக்க வேண்டும். மாறாக ஒருமுறை வந்து விட்டது எனவும் பின் வரவில்லை எனவும் பச்சோந்தி வேஷம் போடக்கூடாது. பச்சோந்தி வேஷம் போடுகிறவன் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளன். இருஎஜமான்களுக்கும் ஊழியம் செய்யக்கூடாது என்ற உபதேசத்தை ஏற்றுக்கொண்டு பின் தன் சபையில் இருஎஜமான்களுக்கு ஊழியம் செய்யும் ஒருவனுக்கும் பிரசங்கபீடத்தை கொடுத்து அவரை பிரியப்படுத்த நினைக்கும் ஒருவனாக இருக்க கூடாது. அவனுடைய ஊழியத்தை ஏற்றுக்கொள்ளவும் கூடாது. பச்சோந்தி வேஷம் போடுகிறவன் ஆட்டுத்தொழுவத்திற்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளன்.

8) மதுபான பிரியனாக இருக்க கூடாது. மதுபானப்பிரியன் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறுவழியாய் ஏறிய கள்ளன்.

9) அடிக்கிறவனாக இருக்க கூடாது. அதாவது அடிபிடி சண்டைகளில் ஈடுபடுகிறவனாக இருக்ககூடாது. மாறாக சாந்தம் உடையவனாக, தீமையை சகிக்கிறவனாக, நஷ்டத்தை சகிக்கிறவனாக இருக்க வேண்டும். எனது சபையில் மூன்று வகை விசுவாசிகள் உண்டு. அதில் ஏதாவது ஒரு அவிசுவாசி, பாவனை விசுவாசி காலேப் யோசுவாவை தாக்கினால் அதற்கு நான் பொறுப்பல்ல எனக்கூறி கலவரத்தை விளைவிக்க தன் ஜனத்தை தூண்டும் ஒரு கலவரவாளியாக இருக்க கூடாது. காலேப் யோசுவாவை பல்லாவரம் பகுதிகளில் அனுமதிக்க கூடாது, பொன்னேரி பகுதிகளில் அனுமதிக்ககூடாது எனக்கூறி தன் சுய மக்களை கலவரத்திற்கு தூண்டுபவனாக இருக்ககூடாது. உன்னை உயிரோடு இங்கிருந்து அனுப்பமாட்டேன் என மிரட்டிய கோலார் தங்கவயல், ராபர்ட்சன்பேட் பாஸ்ட்ர் போன்றும் இருக்க கூடாது. இவர்கள் அனைரும் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறுவழியாய் ஏற்றி கள்ளர்கள். இவர்களுடைய கனி இவர்கள் யார் என்பதை காண்பிக்கிறது.

10) இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனாக இருக்க கூடாது. அதற்காக தேவனுடைய வார்த்தையை தனக்குப்பினாக எறிந்துப்போடுகிறவனாக இருக்ககூடாது. கர்த்தருக்குரிய தசமபாகத்தை ஐந்து வகை ஊழயங்களுக்கும் பகிர்ந்து கொடுக்காது தன் தொப்பையிலே போட்டு, இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனாக இருக்ககூடாது. தசமபாகம் காணிக்கைக்காக சபை ஊழியம் செய்கிற மேய்ப்பனாக இருக்க கூடாது. நீங்கள் கொடுக்கும் காணிக்கை போதுமானதாக அல்ல. ஆதலால் சபை ஊழியத்திற்கு நான் வரமாட்டேன் எனக்கூறும் மேய்ப்பனை போன்று இருக்க கூடாது. தன் வீட்டுக்கு பொல்லாத ஆதாயத்தை தேடுகிறவனுக்கு ஐயோ ஆபகூக் 2:9. தன்னுடையதல்லாதை தனக்காக சேர்த்து கொள்கிறவனுக்கு ஐயோ ஆபகூக் 2:6. மந்தையிலுள்ள ஆடுகள் மேய்ப்பன் வாய்க்கு அல்வா ஆகாரமாய் இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளர்களும் கொள்ளைக்காரர்களுமே.

11) வீடு நிறைய ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தி புத்தகங்களை அடுக்கி வைத்து, தன்னை ஐந்து வகை ஊழியத்தில் பாஸ்டாக அழைத்துக்கொண்டு நான் முஸ்லீம்களுக்கும், இந்துகளுக்கும் சவால் விட்டு வருகிறேன் என்பது தன் ஸ்தானத்தை அறியாத ஒருவன் தன் மனோ ராஜ்யத்தில் தேவ சித்தத்துக்கு புறம்பாக செய்யும் ஊழியம் ஆகும். அந்த பணிக்கு கர்த்தர் ஸ்தாபன ஊழியர்களை வைத்திருக்கிறார். ஆதலால் இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை பக்திவிருத்தி அடையச்செய்ய முடியாது. இவர்கள் ஆட்டுத்தொழுவத்துக்கள் வேறுவழியாய் ஏறிய கள்ளர்களே.

12) நான் ஏழாம் சபைக்காலத்தூதனுடைய செய்தியில் ஒரு பாஸ்டர் எனக்கூறி கொண்டு கிறிஸ்தவ ஸ்தாபன சபைகளுக்கு சென்று அவர்களுக்கு ஏற்றார்போல் பிரசங்கித்து தன் வயிற்றை நிரப்புகிறவனும் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறுவழியாய் ஏறிய கள்ளனே.

13) பொறுமையுள்ளவனாக இருக்க வேண்டும். ஆயர்களுடைய பொறுமை, மேய்ப்பர்களிடம் காணப்பட வேண்டும். இயேசுவை தலையில் குட்டினார்கள், வாரியலினால் அடித்தார்கள், அவர் பொறுமையாகவே இருந்தார். அவர் யாரையும் சபிக்கவில்லை. பிதாவே இவர்களுக்கு மன்னியும் என்றுதான் கூறினார். அது அவருடைய பொறுமை. அது அவருடைய தெய்வீக சுபாவங்களில் ஒன்று. அந்த பொறுமை மேய்ப்பனிடம் காணப்பட வேண்டும். இல்லையெனில் அவன் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளன்.

14) சண்டை பண்ணாதவனாக இருக்க வேண்டும். சபை விசுவாசிகளோடு, தான் வசிக்கும் பக்கத்து விட்டுக்காரரோடு எந்த ஒரு காரியத்திலும் சண்டை பண்ணுகிறவனாக இருக்க கூடாது. அமைதியாக சாமர்த்தியமாக பொறுமையாக அனைத்தையும் சகிக்கிறவனாக இருக்க வேண்டும். சகிக்காதவன் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறுவழியாய் ஏறிய கள்ளன்.

15) பணஆசை இல்லாதவனாக இருக்கவேண்டும். தசமபாகம் காணிக்கைக்காக சத்தியத்தை சத்தியமாக எடுத்துச் செல்லாது விசுவாசிகளுக்கு ஏற்றவாறு உபதேசம் பண்ணி வார்த்தையை புறம்பே எறிந்துப் போடுகிறவனாக இருக்ககூடாது. ஏதோ வெளிநாட்டிலிருந்து ஒரு ஊழியக்காரனைப்பற்றிக் கொண்டு அவரிடமிருந்து பணம் பெற்று அவருடைய உபதேசங்களை சபைக்குள் நுழைக்கிறவனாக இருக்ககூடாது. கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும்போது ஊழியத்தில் இக்கால்த்திற்குரிய செய்தியை ஏற்றுக்கொள்ளாத மக்களோடு கைகோர்த்து ஊழியம் செய்கிறவனாக இருக்ககூடாது. தவறை கண்டிக்கிறவனாக இருக்க வேண்டும். பணத்திற்காக மாறுபாடான உபதேசங்களை கொண்டு வந்து ஆகாதவர்களுடன் கைகோர்த்து ஊழியம் செய்கிறவனாக இருக்க கூடாது. இப்படிப்பட்டவர்கள் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறுவழியாய் ஏறிய கள்ளர்களே.

16) ஒரு மேய்ப்பன் மனைவி மற்றும் பிள்ளைகளை கொண்ட ஒரு குடும்பஸ்தனாக இருக்க வேண்டும். குழந்தைகள் பாக்கியம் இல்லாதவன் மேய்ப்பன் பணிக்கு தகுதியற்றவன். தன் சொந்த குடும்பத்தை நன்றாக நடத்துகிறவனாக இருக்க வேண்டும். குடும்ப தலைவனாக இருந்து குடும்ப பொறுப்பை தன் மீது ஏற்று, தன் மனைவி சம்பாதிக்கும் சம்பாத்தியத்தில் குடும்பம் நடத்துகிறவனாக இருக்க கூடாது. மனைவி வேலைக்கு செல்ல இவன் வீட்டில் சமையல் செய்கிறவனாக இருக்க கூடாது. தான் சபை நடத்த தன் மனைவி மற்றொரு சபைக்கு போகும் அளவுக்கு யோக்கியதையற்றவனாக இருக்க கூடாது. தன் குடும்பத்தை தானே போஷித்து காப்பாற்றுகிறவனாக இருக்க வேண்டும். அவன் மனைவி வீட்டில் தரித்திருக்கிறவளாக இருக்க வேண்டும். மாதத்தில் 20 நாட்கள் வெளியூர் பயணம் எதற்கு? பணம் வசூல் வேட்டைக்காக. 10 நாட்கள் மட்டுமே விட்டில் நிலைத்திருக்கிறவனாக இருக்க கூடாது. தன் குடும்பத்தை விட்டு பிரிந்து வாழ்கிறவனாகவும் இருக்க கூடாது. தன் பிள்ளைகளை எப்பொழுதும் நல்லொழுக்கம் உள்ளவர்களாக, கீழ்படிய பண்ணுகிறவர்களாக வேண்டும். குற்றம் சாட்டப்படாதவனும் ஒரே மனைவியை உடைய புருஷனும் துன்மார்க்கரென்றும் அடங்காதவர்கள் என்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனாக இருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்த குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? பாருங்கள் பாஸ்டர்சபை நடத்துகிறார் அவர் பிள்ளைகள் சபைக்கு வெளியே உலாவிக்கொண்டு தங்கள் நண்பர்களுடன் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். தன் பெண் பிள்ளைகள் சபைக்கு வரும்போது கை, காது கழுத்தில் ஒன்றுமில்லை. ஆனால் பணிக்கு செல்லும் போது கை காது கழுத்துகளின் ஆபரணங்களுடன் காணப்படுகின்றனர். இது என்ன? ஒரு மாய்மால ஜீவியம். பிள்ளைகள் சாராயம் குடிக்கிறார்கள், சிகரெட் புகைக்கிறார்கள், ஆனால் தகப்பனோ பெரிய சபையில் பிரசங்கம் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறுவழியாய் ஏறிய கள்ளர்களே.

17) இறுமாப்படைந்து பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு நூதன சீஷனாக இருக்ககூடாது. இது என்ன? பெருமை, ஆணவம், திமிறு. பாருங்கள் பிசாசு என்று கூறப்பட்டுள்ள லூசிபர் தேவனுக்கு அடுத்த ஸ்தானத்தில் இருந்தான். பெருமை அகங்காரம் ஆணவம் அவன் உள்ளத்தில் குடிகொண்டது. உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றான். வானத்திலிருந்து தள்ளப்பட்டான். இன்றும் நம்முடைய பாஸ்டர்களில் பலர் தம்முடைய சபையில் உள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கையை கொண்டு தங்களை மேன்மைப்படுத்திக்கொள்கிறார்கள். விசுவாசிகளோடு பாஸ்டர்கள் சமமாக உட்கார்ந்து கொண்டு பேசமுடியவில்லையே. பாஸ்டர் ஆசனத்தில் அமர்ந்திருக்க, விசுவாசிகள் முன் கை கட்டி நின்று பேச வேண்டியதிருக்கிறதே. என் சொல் கேள் இல்லாவிட்டால் சபைக்கு வராதே என்கிறார்கள். விசுவாசி கையைபிடித்து இழுத்து வெளியே தள்ளி இனி சபைக்கு வராதே என்கிறார்கள் இதெல்லாம் என்ன? லூசிபரிடம் காணப்பட்ட அதே மேட்டிமை. இவர்களுடைய ஆத்துமா இவர்களுக்குள் செம்மையானதல்ல. சபையில் 300 பேர் இருக்கிறார்கள், அதில் ஒன்றுபோனால் என்ன? போனால் போகட்டும் போடா என்ற ஆணவம் தானே, இப்படிப்பட்டவர்கள் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறுவழியாய் ஏறிய கள்ளர்களே.

18) புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவர்களாக இருக்கவேண்டும். நற்சாட்சி பெறவேண்டுமாகில் வேதவாக்கியங்களின்படி தன்னை காத்து கொள்கிறவனாக இருக்க வேண்டும். தன்னுடைய நற்கிரியைகளில் நற்சாட்சி பெற்றவனாக இருக்க வேண்டும். இது குறித்து நீங்கள் மேலும் தீத் 1:6,9 வசனங்களை தியானிக்கலாம். தன் இஷ்டப்படியே செய்கிறவனாக இருக்க கூடாது. நான் பாஸ்டர், சபைக்கு நான் தான் தலை. ஆதலால் நான் யாரிடமும் எதுவும் கேட்டு செய்ய வேண்டிய தேவையில்லை என எல்லா காரியத்தையும் தன் இஷ்டப்படியே செய்கிறவனாக இருக்க கூடாது. ஒரு சபையில் பாஸ்டருக்கும் இதர மூப்பர்கள், விசுவாசிகள் போன்றவர்களுக்குள் மனஸ்தாபம் ஏன்? சபை பாஸ்டர் தன் இஷ்டம் போல் சபை பணத்தை செலவு செய்கிறார். யாரிடமும் எதுவும் கேட்பதில்லை. மூப்பர்களளை கலந்து ஆலோசிப்பது இல்லை. தன் இஷ்டம் போலவே WBGNS க்கு செய்தி புத்தகம் போட பல ஆயிரங்கள் கொடுக்கிறார். சபையில் உள்ள விசுவாசிகளில் முகமுகமாக அறியாத ஒருவர் திருமணத்திற்கு பல ஆயிரங்கள் தன்னுடைய இஷ்டம் போலவே கொடுக்கிறார். இது குறித்து சபையில் ஆலோசனை கேட்டாரா? தன் மனம் போல் நடந்து கொண்டார். பாருங்கள் தன் மனஇஷ்டப்படியே சபை நடத்துகிறார். பொதுவாக உங்கள் பாஸ்டர்கள் அனைவரிடத்திலும் இந்த மிருக குணம் உண்டு. பணங்களை கையாளுதலில் தன் மனம் போன போக்கில் செயல்படுகிறார்கள். சபையில் பணவரவு செலவுகளை கையாளுவது ஒரு பாஸ்டருடைய பணி அல்ல. சபையின் முன்பு வரவு செலவு கணக்குகளை வைப்பதில்லை. உங்கள் பாஸ்டர் ஒரு கொள்ளைக்காரனாகவே இருக்கிறார்.

19) மேய்ப்பன் முற்கோபமனிதனாக இருக்க கூடாது. பாருங்கள் அவர் சகோ. பிரன்காம் தான் வெளிப்படுத்தின விசேஷத்தில் கிறிஸ்துவின் தூதன் என்கிறார். நான் மறுத்தேன் உடனே உனக்கும் எனக்கும் இனி உறவு வேண்டாம், நீ இனிமேல் என் வீட்டிற்கு வராதே இது என்ன? முற்கோபம். நல்லோர் மேல் பிரியமுள்ளவனாக இருக்க வேண்டும், அதாவது நல்லோரை நேசிக்க வேண்டும். இதோ இவர் என் தவறுகளை எடுத்து கூறுகிறாரே என்று நிதானித்து பார்த்து தன் தவறுகளை திருத்தி கொள்ளும் மனப்பக்குவம் வேண்டும்.

20) அவர் நீதிமானாக இருக்க வேண்டும். நீதிமான் யார்? கர்த்தருடைய சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும், குற்றமற்றவனாய் நடத்து தேவனுக்கும் முன்பாக நீதியுள்ளவனாக காணப்படும் ஒருவன் நீதிமான் லூக் 1 : 6. ஆபிரகாம் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக

எண்ணப்பட்டது (ரோ 4:3) விசுவாசம் கீழ்படிதலை கொண்டுவருகிறது.

21) பரிசுத்தவானாக இருக்க வேண்டும். பரிசுத்தவான் யார்? ஸ்தாபன சபைகளை விட்டு வெளியே அழைக்கப்பட்டு, இவ்வுலகத்தை விட்டு வெளியே அழைக்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்று தேவனுடைய ஆசீர்வாதத்தினால் நிரப்பப்பட்ட ஒருவன் பரிசுத்தவான். பரிசுத்தமான ஜீவியம் செய்யும் ஒருவன் பரிசுத்தவான்.

22) இச்சையடக்கம் உள்ளவனாக இருக்க வேண்டும். அதாவது கண்களின் இச்சைகள் மாமிசத்தின் இச்சைகள் ஜீவனத்தின் பெருமைகளிலிருந்து தம்பி தன்னை காத்துக்கொள்கிறவனாயிருக்க வேண்டும். களை எடுக்கிற கண்ணம்மா மீது நோட்டம் போடுகிற சாது சந்நியாசியை போல் இருக்ககூடாது.

23) ஆரோக்கியமான உபதேசத்தை கொண்டு புத்தி சொல்கிறவனாக இருக்கவேண்டும். திருமணத்தில் ஆண் பெண் ஒருவை ஒருவர் முத்தமிட வேண்டும், தாடி மீசை வைக்க கூடாது என்பது போன்ற நவீன உபதேசங்களை கொண்டு வருகிறவனாக இருக்க கூடாது. இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்யக் கூடாது. பெண்கள் பொது ஸ்தலங்களில் பணி செய்ய கூடாது, பெண்கள் கர்ப்பத்தடை செய்ய கூடாது என்பது போன்ற ஆரோக்கியமான உபதேசங்களினால் விசுவாசிகளை கடிந்து புத்தி சொல்லுகிறவனாக இருக்க வேண்டும்.

24) எதிர்பேசுகிறவர்களை கண்டனம் பண்ணுகிறவனாகவும் இருக்க வேண்டும். மேய்ப்பன் ஆரோக்கியமான உபதேசங்களை கொடுக்கும் போது ஒருவன் அதை எதிர்த்து பேசுவானாகில் அவனை கண்டனம் பண்ணுகிறவனாக இருக்க வேண்டும். பாஸ்டர் கர்த்தருடைய வருகை இன்னும் வரவில்லை என்கிறார். சபையில் ஒருவர் அது வந்து விட்டது என்பாராகில் அவரை கண்டனம் பன்னுகிறவனாக இருக்க வேண்டும். அவரை கண்டனம் பண்ணுகிறதற்கு தைரியம் உள்ளவனாக இருக்க வேண்டும். தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையும் இக்காலத்திற்குரிய செய்தியையும் நன்கு அறிந்தவனாக இருக்க வேண்டும். இத்துடன் 1 பேதுரு 5 :2,4 வசனங்களை தியானியுங்கள்.

25) மந்தைக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும். ஓரிரு காரியங்களில் மட்டுமல்ல, அனைத்து காரியங்களிலும் சபைக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். ஆனால் உங்கள் மத்தியில் உள்ள மேய்ப்பர்கள் மந்தையை மேய்க்காமல் மந்தையை கொண்டு தங்களை மேய்த்துக்கொண்டு இருக்கிறார்கள், போஷித்துக்கொள்கிறார்கள். ஆடுகள் இவர்களுக்கு ஆகாரமாயிருக்கிறது. கிருபாசன பெட்டி வியாபாரியும், தங்க சாவி தொழிலதிபரும் மேற்கூறியவர்களுடன் சேர்ந்து ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறுவழியாய் ஏறிய கள்ளனும், கொள்ளைக்காரனுமே.

26) மேய்ப்பர்கள், விசுவாசிகள் ஆவிக்குரிய முழு வளர்ச்சி அதாவது ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சி அடையும் வரை அவர்களை கண்காணிக்கிறவர்களாக இருக்கவேண்டும்.

27) பகுத்தறிவில்லாத மேய்ப்பர்கள் உண்டு : இவர்கள் ஒவ்வொருவரும் தன்தன் வழியையும் தன்தன் மூலையிலிருந்து தன்தன் பொலிவையும் நோக்குகிறார்கள். இவர்கள் திருப்தியடையாத பெருவயிற்று ஓநாய்கள் ஏசா 56:11. மேய்ப்பன் அக்கறையுடன் மந்தையை மேய்க்கவேண்டும். ஆனால் இவர்களோ மந்தையை கொண்டு தங்களை மேய்க்கிறவர்கள். இவர்கள் மந்தையின் நெய்யை சாப்பிட்டு கொழுத்ததை அடிக்கிறார்கள். மந்தையை மேய்க்காது போகிறார்கள். இவர்கள் அதை போஷித்து பராமரிக்காமலும் கொழுத்ததின் மாமிசத்தை தின்று மந்தையை கைவிடுகிற ஆபத்தான மேய்ப்பர்கள். இப்படிப்பட்டவர்கள் தான் உங்கள் மேய்ப்பர்கள். அவர்களுக்கு ஐயோ! இவர்கள் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கொள்ளைக்காரர்களே.

28) கள்ளமேய்ப்பர்களும் உண்டு. மேய்ப்பர்கள் மிருக குணம் உள்ளவர்களானார்கள். கர்த்தரை தேடாமல் போனார்கள். ஆதலால் அவர்கள் காரியங்கள் வாய்க்காமற்போகிறது. அவர்களால் மந்தைகள் எல்லாம் சிதறிடிக்கப்பட்டது (எரே 10:21) தமிழ்நாட்டில் அநேகருடைய மந்தைகள் சிதறடிக்கப்பட்டு மேய்பனும், அவனுடைய ஆடுகளும் அவமாய் போனார்கள். அதற்கு இது தான் காரணம். நான் அறிய அநேக மேய்ப்பர்களுடைய ஊழியங்கள் காலையில் பூத்து, மாலையில் வாடிபோனதை கண்டு இருக்கிறேன். இவர்கள் அவமாய் போனதோடு மட்டுமல்ல, தேவனுடைய திராட்சை தோட்டத்தையும் அழித்து போட்டார்கள் (எரே 12:10) அவர்கள் இந்த பொல்லாப்பினிமித்தம் வெட்கப்பட்டு இலட்சை அடைந்தார்கள் (எரே 22 : 22) இவர்கள் பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலை நிராகரித்து, தங்கள் சுயபுத்தியை சார்ந்து கெட்டுப்போனார்கள். இவர்களும் ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறுவழியாய் ஏறிய கள்ளர்களே.

29) விசுவாசிகள் பாஸ்டர்களுக்கு கீழ்படிந்து நடக்கவேண்டும். பாஸ்டர் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து நடக்க வேண்டும். அப்பொழுது தேவன் அந்த பாஸ்டர் மூலமாக கிரியை செய்கிறார். Obey the pastor and the pastor obey the God : then God works through the pastor (A total deliverance para 78) ஆதலால் ஒரு பாஸ்டர் தேவனுடைய வார்த்தைக்கும் இக்காலத்திற்குரிய செய்திக்கும் கீழ்படியாத பட்டத்தில் நீங்கள் அவருக்கு கீழ்படிய வேண்டும் என்ற தேவையில்லை. பாஸ்டர் மந்தைக்கு தலை. பாஸ்டர் சகைக்கு தலை என்று கூறக்கூடாது. ஏனென்றால் சபைக்கு தலை கிறிஸ்து எபே 5:23. சிலர் பாஸ்டர் தான் சபைக்கு தலை என்று பாடுவார்கள். நீங்கள் அவர்கள் பாட்டில் மதிமயங்கி விடக்கூடாது. அவர்கள் வஞ்சகர்கள். ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறுவழியாய் ஏறிய கள்ளர்கள்.

30) மேய்ப்பன் அந்நியரை உபசரிக்கிறவனாக இருக்க வேண்டும். தனக்கு வேண்டியவர்களை வீட்டிற்கு அழைப்பதும் தன் மீது தேவனுடைய வார்த்தையை கொண்டு குற்றம் சுமந்துபவர்களை வீட்டிற்கு வராதே என்று

கூறுகிறவர்களாக இருக்க கூடாது. விருப்பு வெறுப்பு இல்லாமல் அது யாராக இருந்தாலும் அவர்களை ஏற்றுக்கொண்டு உபசரிக்கிரவராக இருக்க வேண்டும். அதாவது விரோதிகளையும் சிநேகிக்கிறவராக இருக்க வேண்டும். பெரவலூர் பாஸ்டரை போன்று ஒரே மேஜையில் உபசரித்து சாப்பிட்டுக் கொண்டே அதே மேஜைக்கு மேலே கத்தியை தொங்கவிடுபவராக இருக்ககூடாது. இந்த சம்பவத்தை என்னால் மறக்க முடியவில்லையே. இவர்களும் ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறுவழியாய் ஏறிய கள்ளர்களே.

31) பொதுவாக நம்முடையவர்கள் மத்தியில் பாஸ்டர் ஊழியத்திற்கு கடும் போட்டி. ஏனென்றால் இந்த தொழிலில் தான் நல்ல பிழைப்பு உண்டு. ஜனங்கள் மத்தயில் பாஸ்டர் ஐயா, பாஸ்டர் ஐயா என்ற மதிப்பும் கௌரவமும் உண்டு. ஆக ஒருவன் தன் திறமையை கொண்டு ஒரு கூட்டம் ஜனங்களை சேர்த்து நல்ல ஆதாயத்தை சம்பாதிக்கும் தொழிலாக பாஸ்டர் ஊழியம் இருப்பதால் இதற்கு மிக்க கிராக்கி. It is the pastor's to preach. See not to lead songs. COD Vol. II page 131 Q & QA 235 para 187. சபையில் பாஸ்டர் மந்தைக்கு ஆவிக்குரிய ஆகாரம் கொடுப்பதை விட்டு விட்டு வேறு எந்த காரியங்களிலும் தலையிட்டுக் கொள்ளக்கூடாது. உதாரணமாக சபைக்கு வரும் தசமபாகம் காணிக்கை இவைகளில் தலையிடவேகூடாது. இவைகளை பொக்கிஷதார் பெற்று, பாஸ்டருக்கு கொடுக்க வேண்டிய விகிதப்படி பிரித்துக்கொடுக்க வேண்டும். ஆனால் இன்று பாஸ்டர்கள் பணத்திற்காக, கூலிக்காக மாறடிக்கிறதினால் பணத்தில் எப்பொழுதும் கண்ணோட்டமாகவே இருக்கிறார்கள். பொதுவாக நம்முடைய சபைகளில் பிரிவினை வருகிறதற்கு பணமே முக்கிய காரணமாக இருக்கிறது. அதை பங்கு போடுவதில் பிரச்சகைள் வருகின்றன. இதனால் சபைளில் பிளவு ஏற்படுகிறது. இந்நாட்களில் இதை சமாளிக்க சில பாஸ்டர்கள் என் செய்கிறார்கள் என்றால் சபையில் பிரபலமான ஒர சிலரை தங்கள் கைகளுக்குள் போட்டுக்கொள்கிறாகள் அவர்களுக்கு அடிக்கடி பணஉதவி, இதரஉதவிகள் செய்து கொடுத்து அவர்களை தங்கள் கரங்களுக்குள் போட்டுக்கொள்கிறார்கள். எதிர்ப்பவர்களுடைய வாயை அடைப்பதற்கு இவர்களை அடியாட்களாக பயன்படுத்துகிறார்கள். இப்படியாக ஒரு அரசியல் நாடகம் இந்நாட்களில் நமது சபைகளில் காணப்படுகிறது. இது மிகவும் வெட்க கேடாகும். இதற்கு பெரவலூர் விதிவிலக்கு அல்ல. இவர்களும் ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறுவழியாய் ஏறிய கள்ளர்களும் கொள்ளைக்காரர்களுமே.

32) கர்த்தருக்குரிய தசமபாக வரவுகளை பாஸ்டர்கள் தங்கள் கைகளுக்குள் வைத்துக்கொண்டு பல பதவிகளை விசுவாசிகளுக்கு கொடுத்து அவர்களையும் தங்கள் கரங்களுக்குள் போட்டுக்கொள்கிறார்கள். பாருங்கள் ஒரு பாஸ்டர் என் சபையில் மூவகை விசுவாசிகள் உண்டு. நீ எனக்கு விரோமதாக தேவனுடைய வார்த்தையை கொண்டு பேசும்போது அவிசுவாசிகள் மற்றும் பாவனை விசுவாசிகள் உன்னை தாக்கினால் அதற்கு நான் பொறுப்பல்ல என்கிறாரே. சபையில் பாடல் நடத்துவது கூட விசுவாசிகளில் ஒருவருடைய பணிதான். அது ஒரு பாஸ்டருடைய பணி அல்ல. பாஸ்டருடைய பணி ஆவிக்குரிய செய்தி. ஆகாரம் மந்தைக்கு கொடுப்பது. இதைத்தவிர இதர பணிகளை ஒரு பாஸ்டர் தன் ஆதிக்கத்திற்குள் கொண்டு வரக்கூடாது. கொண்டு வருபவர் ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறுவழியாய் ஏறிய கள்ளர்களும் கொள்ளைக்காரர்களுமே.

33) Pastor has a single ministry COD Vol. II page 879 Q& A 221 para 36. ஐந்து வகை ஊழியத்தில் பாஸ்டர் சுவிசேஷ ஊழியம் செய்ய கூடவே கூடாது. அது அவருடைய பணி அல்ல. மேலும் அது அவருடைய அழைப்பை விட ஒரு உயர்ந்த அழைப்புக்குரிய ஒருவருடைய பணி. ஆனால் நீங்கள் பொதுவாக நமது சபைகளில் பார்த்தீர்களானால் பாஸ்டர்கள் ஊர்பல சுற்றிதிரிந்து கொண்டு ஊழியம் செய்து வருகிறார்கள். இதிலிருந்து இவர்கள் அழைக்கப்பட்டவர்கள் அல்ல என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். ஊர் சுற்றும் பாஸ்டரிடமிருந்து உங்களை வேறு பிரித்துக்கொள்ளுங்கள். ஒரு பாஸ்டருடைய ஊழியம் ஒரு மந்தைக்கு உட்பட்டது மட்டுமே. தன் ஸ்தானத்தை அறியாதவன் ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறுவழியாய் ஏறிய கள்ளனே.

34) The Pator should at all prayer meetings and so forth, where congregation or gathering are (Church Order - supplementary preached in oct 1958 para 48) ஆம் பிரியமானவர்களே, பாஸ்டர் தனது சபையில் அனைத்து கூட்டங்களிலும் பங்கு கொள்ள வேண்டும். சபை மூப்பர்களிடமோ, டீக்கன்களிடமோ ஒப்படைத்துவிட்டு அவர் ஊர் சுற்றக்கூடாது. ஒரு மேய்ப்பனுக்கு ஒரு மந்தை மட்டுமே. அவர் அதிலே கண்ணும் கருத்துமாய் இருக்கவேண்டும். ஒரு மேய்ப்பனுக்கு பல மந்தைகள் கிடையாது. எப்படியெனில் ஒருவனுக்கு ஒரு குடும்பம் மட்டுமே. பல குடும்பங்கள்ள கொண்டவன் யார்? அதே நிலைதான் பல மந்தைகளை கொண்ட ஒரு பாஸ்டருடைய நிலைமையும். உங்களுக்கு தேவனால் ஏற்படுத்தப்பட்ட பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்ட ஒர் போதகர் இருப்பாராகில் அவரை நீங்கள் உங்கள் விரல் நுனியினால் கட்டுப்படுத்தி வைக்க நினைத்தால் அப்போதகர் வேதவிரோதமான காரியத்தோடு என்றும் ஒத்துப்போகமாட்டார். அவர் உங்கள் சபையை விட்டு வெளியேறிவிடுவார். ஆதலால் போதகர் சத்தியத்தை உண்மையாய் உரைப்பவராக இருக்க வேண்டும். (எபேசு சபைக்காலம் பத்தி 143) நம் மத்தியில் பாஸ்டர் தவறு செய்ய அதை விசுவாசிகள் சுட்டிக்காட்டினால் நான் சொல்லுவதை கேட்டு சபையில் இருக்க சம்மதமானால் இரு, இல்லாவிட்டால் சபைக்கு வராதே, நீ என்ன சொல்லுகிறது நான் என்ன கேட்கிறது என்று கேட்கிறார்கள். ஏன் என்றால், சபை கட்டிடத்தை தன் பெயரில் தக்க வைத்துக் கொண்டதினால் அல்லவா? அவரை நீங்கள் நீக்க முடியாது. அவர்தான் உங்களை வெளியே தள்ளும் நிலையிலே இன்றைய சபைகள் உள்ளது. சபை கட்டிடங்களை பாஸ்டர்கள் தங்கள் பெயரில் தக்கவைத்துக்கொண்டார்களே. ஆதலால் தான் அவர்கள் ஆதிக்கம். சபை கட்டிடத்திதை

தன் குடும்ப சொத்தாக மாற்றுபவன் ஒரு கள்ளகபடமுள்ள வேலையாள், கொள்ளைக்காரன்.

35) தேவனுடைய கிருபையுள்ள வசனத்துக்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் விரோதமான மாறுபாடானவைகளை போதிப்பவர்கள், மந்தையின் எண்ணிக்கை பெறுக, தசமபாகம் காணிக்கை வரவு அதிகரிக்க, தேவனுடைய ஆலோசனைகளை மறைத்து, புறக்கணித்து ஆடுகளை அதனதன் போக்கில் விட்டு விடுபவர்கள் ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளர்களே. கள்ளன் யார்? அவன் திருடன், திருடன் யார்? அவன் யூதாஸ் ஸ்காரியோத். இவர்கள் யூதாஸ் ஸ்காரியோத்தைப் போன்று பணத்திற்காக எதையும் செய்ய துணிந்தவர்கள்.

36) பாஸ்டருக்கு சபையில் மதிப்பு இல்லையென்றால் அந்த சபை, அவ்வளவுதான் முடிந்தது. If a church ever losses respect for it's Pastor that church is gone. ஒரு விசுவாசி பிரசங்க பீடத்தில் நின்றுகொண்டு பாஸ்டரை பேர் சொல்லி அழைத்து அதுவும் ஒரு முறை அல்ல பலமுறை அவ்வண்ணமாக செய்து, பிரசங்க பீடத்தில் நின்று சாட்சி கொடுத்து செல்வராகில், அது ஒரு சபையாகாது. சபையின் முழு பொறுப்பு பாஸ்டர்தான். அவருக்கு அனைவரும் கீழ்படிய வேண்டும். ஆனால் அவர் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிகிறவராக இருக்கவேண்டும். நீங்கள் உங்கள் பாஸ்டர் சத்தியத்தை நன்கு அறிந்திருக்கிறார், போதிக்கிறார் என கூறலாம். சாத்தானும் சத்தியத்தை நன்கு அறிந்தவனே யாக் 2 : 19 லூக் 6 : 9-12. ஆதி 3வது அதி. ஆதலால் ஒரு பாஸ்டர் சத்தித்தை நன்கு அறிந்திருப்பது மட்டும் அவரை அவருடைய ஸ்தானத்துக்கு தகுதிப்படுத்தாது. அவரிடம் கிரியைகள் காணப்பட வேண்டும். கிரியைகள் இல்லாத விசுவாசம், அது எவ்வளவு பெரியதாக இருப்பினும் அது செத்ததே. பாஸ்டர் தன் ஆடுகளின் நிலைமையை நன்றாக அறிந்துக்கொள்ளவேண்டும். அதன் மீது கவனமாக இருக்கவேண்டும் நீதி 27 : 23. தன் ஸ்தானத்தை விட்டு அனைத்து ஊழியத்திலும் தலையிடும் ஒரு பாஸ்டர் தன் கூட்டைவிட்டு அலைகிற குருவி எப்படியிருக்கிறதோ அப்படியே இருக்கிறான். நீதி 27:8. சபையின் முழு ஆவிக்குரிய காரியங்களின் கண்காணிப்பு பாஸ்டருக்குரியதாகும். The pastor is over the supervising of the spiritual part Q & A 221, para 16. பாஸ்டர் ஒரு மேய்ப்பன், ஆடுகளை கண்காணிக்கிறார், பராமரிக்கிறார், வழிநடத்துகிறார், மேற்பார்வையிடுகிறார், போஷிக்கிறார். அவருடைய பிறப்பே ஒரு மேய்ப்பனாகவே தெரிந்து கொள்ளப்பட்டவர். அதுவும் அவர் தாயின் கர்ப்பத்திலிருந்து, உலகத்தோற்றத்திற்கு முன் அவர் கிறிஸ்துவின் சிந்தையில் ஒரு மேய்ப்பனாகவே இருந்தார். அவருடைய இரத்தமே மேய்க்கும் ஊழியம்தான். அவர் அதற்கென்று முன் அறிந்து முன் குறிக்கப்பட்டு பிரதான மேய்ப்பனால் மேய்ப்பனாக அழைக்கப்பட்டவர். ஒரு மேய்ப்பன் தேவனால் அழைக்கப்பட்டவனாக, ஏற்படுத்தப்பட்டவனாக இருப்பாராகில் அவரை அந்த பதவியிலிருந்த யாரும் நீக்கமுடியாது. ஏனென்றால் அவர் தேவனால் ஏற்படுத்தபட்டவர். அவர் மனுஷர்களால் ஏற்படுத்தபடவில்லை. அவர் தேவனால் நியமிக்கப்பட்டபடியினால் சிலருக்கு, பெரும்பான்மையினருக்கு அவரோடு ஒருமித்துக்போக மனமில்லையென்றாலும் அவரை சபையிலிருந்து நீக்கமுடியாது. ஏனென்றால் அவர் ஒரு சபையரால் நியமிக்கப்படவில்லை. மாறாக தேவனால் நியமிக்கப்பட்டவர். ஆதலால் அவரோடு ஒருமித்துப்போகாதவர்கள் அவரை விட்டு விலகிப்போக வேண்டுமேயன்றி அவர் விலக வேண்டிய தேவையே இல்லை.

37) கர்த்தருக்குரிய தசமபாகம் முற்றிலுமாக கர்த்தரால் ஏற்படுத்தபட்ட ஐந்து வகை ஊழயங்களுக்கு மாத்திமே. இதை கொண்டு ஆசாரியர்களும், லேவியர்களும் போஷிக்க படவேண்டும். இதர காரியங்களுக்கு தசமபாகத்தை செலவிட கூடாது. ஆனாலும் இன்று அநேக கள்ள கடடமுள்ள வேலையாட்கள் துணிகரமாக தங்களை மேன்மை படுத்த கன்வென்ஷன் கூட்டங்களுக்கும், தன்னை பிரஸ்தாபப்படுத்த போடப்படும் வருடாந்திர காலண்டர்களுக்கும், தந்திரமாக தங்களுக்கு என்று சபை பெயரில் கட்டப்படும் கட்டிடங்களுக்கும், தங்கள் சபை சார்பில் வெளியிடப்படும் செய்திபுத்தகளுக்கும் செலவு செய்கிறார்கள். மறைமுகமாக தேவனை கொள்ளையிடுகிறார்கள். சபைக்கடுத்த காணிக்கைளில் செய்ய வேண்டிய காரியங்களை கர்த்தருக்குரிய தசமபாகத்தைக் கொண்டு கர்த்தரையை கொள்ளையிடுகிறார்கள். ஐந்து வகை ஊழியத்திற்கான பணத்தை பகல் கொள்ளை அடிக்கிறார்கள். ஆனாலும் இவர்கள் தாங்கள் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட மேய்ப்பர்கள் எனக்கூறிக்கொண்டு கர்த்தருக்குரியதை, ஐந்து வகை ஊழிங்களுக்குரியதை கொள்ளை அடிக்கும் கொள்ளைக்காரர்களாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நபர்களோடு நீங்கள் கலந்து இருக்க கூடாது. இவர்கள் பொல்லாதவர்கள். தியானியுங்கள் 1 கொரி 5 : 9-13.

38) அரசியல்வாதிகள் குடும்ப அரசியல் நடத்துவது போன்று சபைகளிலேயும் மேய்ப்பர்கள் தங்கள் குடும்பத்தில் உள்ள அண்ணன், தம்பி, மச்சான், மருமகன், மாமனார் போன்றவர்களை உயர்ந்த ஸ்தானத்திலேயும், தனக்கடுத்த ஸ்தானங்களிலும், அதாவது உதவி பாஸ்டர், டீக்கன், மூப்பர் போன்ற பதவிகளினல் ஏற்படுத்தி சபைகளில் அரசியல் நடத்துகிறார்கள். இவர்களும் ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளர்களே.

39) ஒரு நல்ல மேய்ப்பன் எக்காரணம் கொண்டும் தன் மந்தையை விட்டு வெளியே செல்லக்கூடாது. ஆனால் ஆட்டு தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏற்றிய கள்ளளர்கள் ஊர் ஊராக, நாடு நாடாக சுற்றி வலம் வந்து கொண்டு இருக்கிறார்கள். சுருக்கமாக சொல்ல போனால் உலகம் சுற்றும் வாலிபர்களாக இருக்கிறார்கள். எதற்காக? பணம் வசூல் வேட்டையாக (The shepherd lives in a cave or hut adjoining, and in very intimate touch with his sheep, each of which he knows unfailingly at a glance) பாருங்கள் மேய்ப்பன் தன் மந்தையின் அருகில் வசிப்பவனாகவும், தனித்தனியே ஒவ்வொரு ஆட்டின் பேரை

அறிந்தவனாகவும் இருக்க வேண்டும். ஒரு மேய்ப்பன், கர்த்தர் தன் வசம் ஒப்படைத்த ஒவ்வொரு ஆட்டிற்கும் உத்திரவாதம் உடையவனாக இருக்கவேண்டும் (யாத் 22 : 17 ஆமோஸ் 3 : 12)

40) கர்த்தருக்குரிய தசமபாகம் லேவிக்குரியது. சபைகாலங்களில் லேவி யார்? ஐந்து வகை ஊழியங்களில் உள்ளவர்கள். பண்டக சாலையாகிய சபைக்கு வரும் கர்த்தருக்குரிய தசமபாகத்தை அங்கிருந்து ஐந்து வகை ஊழியங்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும். ஆனால் சபை மேய்ப்பர்கள் தங்களுக்காக அதை அபகரித்து கொள்கிறார்கள். இது என்ன? இவர்கள் இதர ஊழியர்களை ஏமாற்றுவதோடு மட்டும் அல்ல, கர்த்தரையும் கொள்ளை இடுகிறார்கள். ஆதாலால் தான் இவர்கள் கூடாரங்களில் செல்வம் உண்டு (யோபு 12 : 4) இன்று அநேகர் திருடனோடு ஒருமித்து போகிறார்கள் (சங் 50:18) இவர்கள் யாவரும் ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளர்களே. சத்தியத்திற்காக இன்று நிலை நிற்போர் யார்?

41) தன்னை மேன்மைப்படுத்தி, தன்னை தலைமைப் போதகன், இன்டர் நேசனல் பிரசங்கி, ஸ்தாபகர் போன்ற பட்டங்களினால் தங்களை அலங்கரிக்க கூடாது. (மத் 23 : 8-12) இவர்கள் கர்த்தருடைய மந்தைக்கு உக்கிராணப் பொறுப்பு உடையவர்கள். ஆதலால் இதர ஊழியங்களில் தலையிட மாட்டார்கள் (ரோ 1 : 1, தீத் 1 : 1) பொதுவாக தீர்க்கதரிசியின் செய்திகளை மொழிப்பெயர்த்தல், அவைகளை பிரிண்ட் செய்தல், விநியோகித்தல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பற்பல இடங்களுக்கு எடுத்து செல்லுதல் போன்ற பணிகள் இவர்களுடையது அல்ல. கர்த்தர் அதற்கு என்று வேறு நபர்களை வைத்து இருக்கிறார். இவர்கள் மேய்ப்பன் பணியை விட்டு இதர பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளக்கூடாது. இங்கு நான் வேதவாக்கியங்களை கொண்டு எழுதியவைகளுக்கு மாறாக நடப்பவர்கள் ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளர்களே.

42) இந்நாட்களில் நமது மத்தியில் ரியல் எஸ்டேட், மல்டி லெவல் மார்கெட்டிங் தொழில் செய்யும், வட்டிக்கு பணம் கொடுக்கும் மேய்ப்பர்கள் உண்டு. இவர்களுடைய தொழில் நம்பினோர்களை மோசம் போக்கும் ஒரு ஏமாற்று தொழிலேயன்றி நேர்மையான தொழில் இல்லை. மாறாக குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கும், உழைக்காமல் பெருந்தொகையை ஆதாய்மாகத்தேடும் தொழில் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். ஏமாளியாகிய ஒருவன் தலையில் தொப்பி வைப்பதுதானே இவர்களது தொழில். காலை எழுந்தது, முதல் இரவு படுக்கைக்கு செல்லும் வரை ஒரே பொய்யும், புரட்டும் தானே இவர்களது தொழில். தங்கள் நாவை பொய் கூறுவதற்கென்றே பழக்குவித்தவர்கள். ஆனாலும் இவர்கள் பேசும் அந்நிய பாஷைக்கு குறைவு ஏதும் இல்லை. நன்கு சரலமாக பேசுகிறார்கள். ஜெபத்தில் பலமுறை அந்நிய பாஷை என்று ஒன்றை கூறி, உளறி தேவனுடைய நாமத்தையே தூஷிக்கிறார்கள். இப்படிப்பட்ட தொழிலில் தங்களை ஈடுபடுத்தி கொள்ளும் இந்த மேய்ப்பர்கள் யார்? நிச்சயமாக இவர்கள் நூறு சதவீதம் ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளனும், கொள்ளைக்காரனுமாய் இருக்கிற மேய்யப்பர்களே.

54. உங்கள் மேய்ப்பர்கள் இப்படிப்பட்டர்களாக இல்லையென்றால் அவர்கள் ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளர்களும் கொள்ளைக்காரர்களுமே.

அ) தாவீது சவுலை பார்த்து உம்முடைய அடியான் என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும் போது, ஒரு விசை ஒரு சிங்கமும், மற்றொரு விசை ஒரு கரடியும் வந்து மந்தையிலிருக்கிற ஆட்டை பிடித்துக்கொண்டது. நான் அதை தொடர்ந்துபோய் அதை அடித்து அதன் வாய்களுக்கு தப்புவித்தேன். அது என் மேல் பாய்ந்தபோது நான் அதன் தாடியைப்படித்து அதை அடித்து கொன்றுவிட்டேன். 1 சாமு 17 : 34-35. உங்கள் மேய்ப்பனுக்கு மந்தையின் மேல் உள்ள ஒவ்வொரு ஆட்டின் மேலும் இந்த பொறுப்புணர்ச்சி உண்டா? மந்தையில் உள்ள ஒவ்வொரு ஆட்டையும் பாதுகாக்க துணிவு உண்டா? நல்ல கரவை ஆடுகள் (தசமபாகம் மற்றும் காணிக்கை அதிகம் கொடுப்பவர்கள்) பின் தானே மேய்ப்பன் நோட்டம் அதிகம். ஏழை எளியவர்களை கண்டுகொள்வதில்லையே. இவர்களும் ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கொள்ளைக்காரர்களே.

ஆ) ஒரு மனுஷன் 100 ஆடுகளை கொண்டவனாக இருந்தான். ஒன்று காணாமற் போனது. அவன் காணாமற்போன ஆட்டை கண்டுபிடிக்குமளவும் சுற்றி திரிந்து காணமற்போன தன் ஆட்டை கண்டுபிடித்தான். அவன் 99 ஆடுகளையும் விட்டு விட்டு காணாமற்போன ஒன்றை மட்டும் தேடி கண்டு பிடிக்கும்வரை தூங்கமாட்டான். மத் 18:12. தியானியுங்கள் லூக் 15 : 4-6. உங்கள் பாஸ்டர் காணாமற்போன ஆடு கொழுத்த ஆடாக இருந்தால் அதைத்தேடி கண்டுபிடிக்க ஓடுகிறார். அது மெலிந்த, நலிந்த ஆடாக இருக்குமானால், போனால் போகட்டும் போடா என்கிறாரே, இவர்களும் ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கொள்ளைக்காரர்களே.

இ) உங்கள் மேய்ப்பன் உங்களுக்காக இவ்வாறு கவலைப்படுகிறாரா? உங்கள் மேய்ப்பன் தன் மந்தையில் பலவீனமானவைகளை பலப்படுத்துகிறாரா? ஆட்டுக்குட்டிகளை தனது புயத்தினால் சேர்த்து தன் மடியிலே சுமந்து கறவை ஆடுகளை மெதுவாய் நடத்துகிறாரா? ஏசா 40 : 11 இது மேய்ப்பனுடைய அன்பு. பொறுமையை மந்தை மீது காட்டுகிறது. உங்கள் மேய்ப்பன் தன் மந்தையில் உள்ள ஒவ்வொரு ஆடுகளின் நிலைமைகளை நன்கு அறிந்தவராக இருக்கிறாரா? மந்தை மேல் எப்பொழுதும் கவனம் கொண்டு இருக்கிறாரா? மந்தையிலுள்ள கொழுத்த ஆடுகள் மீது மட்டுமே அவருக்கு கவலை. நலிந்த ஆடுகள் மீது கவலை இல்லை என என்னால் நிச்சயமாக கூறமுடியும். இவர் ஊழியம் செய்ய வரவில்லை மாறாக ஊதியம்

கொள்ளவே வந்துள்ளார்.

ஈ) உங்கள் மேய்ப்பனிடம் சுயநலமா? அல்லது பொதுநலமா? அவலட்சனமான ஆதாயத்திற்காக தசமபாகம் மற்றும் காணிக்கைக்காக மேய்ப்பன் பணி செய்கிறாரா? சுதந்தரத்தை இருமாப்பாய் ஆளுகை செய்கிறாரா? 1 பேது 5 : 3 இன்று வளசரவாக்கம் பாஸ்டர், பெரவலூர் பாஸ்டர் போன்றவர்கள் சுதந்தரத்தை இருமாப்பாய் ஆளுகை செய்கிறார்கள் என்று என்னால் 100% உறுதியாக கூறமுடியும். இவர்கள் தங்கள் சுய கருத்துகளை உபதேசங்களாக மக்கள் மீது திணிக்கிறார்கள். மந்தையை அடிமைப்படுத்துகிறார்கள். இவர்கள் ஊழியம் செய்யவரவில்லை. ஏனென்றால் சபையில் தங்களை உயர்த்திக்கொள்கிறார்கள். விசுவாசிகள் சகோதரர்களாக நடத்த முடியவில்லை, அடிமைகளாகவே நடத்துகிறார்கள், விசுவாசிகள் இவர்கள் முன் கைக்கட்டிக்கொண்டு நிற்கிறார்கள், சமமாக உட்கார்ந்து அவர்களோடு பேசமுடியவில்லை. இது என்ன கொடுமை? மேய்ப்பனானவன் விசுவாசிகளுக்கு முதலாளியாக இல்லமல் தகப்பனாக இருக்க வேண்டும். 1 கொரி 4 : 15 ஆடுகளுக்காக தன் ஜீவனையும் கொடுக்க ஆயத்தமாக இருக்க வெண்டும். யோ 10 : 11 உங்கள் பாஸ்டர்களில் யார்யார் தன் சபையில் உள்ள விசுவாசிகளுக்காக தங்கள் ஜீவனைக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார்கள்? ஒருவர் கூட இல்லையே, அப்படியிருக்க அவர்கள் தேவனுடைய மந்தை மீது எப்படி மேய்ப்பனாக இருக்க முடியும்? இவர்கள் கள்ளகபடமுள்ள வேலையாட்களே.

55. இவர்கள் மந்தைக்கு மாதிரியாக அல்ல, பாருங்கள் பாஸ்டர் ஊர் சுற்றிக்கொண்டு வருகிறார். இது ஒரு மேய்ப்பனின் பணி அல்ல. பாஸ்டர் மனைவி பொது இடங்களில் வேலை செய்கிறாள். இது் தேவனுடைய வார்த்தைக்கும் இக்காலத்திற்குரிய செய்திக்கும் மாறான செயல். தன் மகள் பள்ளிக்கு செல்லும் போது சுடிதார் ஆடைகள் அணியலாம். மற்றொருவனுடைய மகள் சபைக்கு வரும்போது சுடிதார் ஆடைகள் அணிந்துவரக்கூடாது. அது எல்லாம் என்ன? எங்கும் எதிலும் சுயநலம். பாருங்கள் இவர்கள் மந்தைக்கு மாதிரியாக இல்லை.

56. ஒரு மேய்ப்பன் இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்து ஊதியம் பெறுகிறவனாக இருக்கக்கூடாது. இது ஐந்துவகை ஊழியங்களுக்கும் பொருந்தும். ஆனால் அவன் பவுலை போன்று சிறுதொழில் செய்யலாம். அது அவனை முற்றிலுமாக எதிலும் கட்டுப்படுத்தாது. அவன் செய்யும் தொழில் எந்தவகையிலும் ஊழியத்தை பாதிக்காது இருக்க வேண்டும். அவன் நான் பொது ஸ்தலங்களில் பணிசெய்வது இல்லை, தொழில் செய்கிறேன் எனக்கூறி அந்த தொழிலில் தன்னை நாள் முழுவதும் ஈடுபடுத்தகிகொண்டால் அதுவும் தவறு. ஒருவனுடைய தொழில் எந்த வகையிலும் அவன் கர்த்தரிடத்திலிருந்து பெற்ற ஊழியத்தை பாதிக்க கூடாது. தொழில் செய்கிறவனும் தொழிலில் உண்மையும் உத்தமுமாக இருக்க வேண்டும். ஒரு பொருளுக்காக ஒருவனிடம் ரூ. 10/- ம் ஏமாந்தவனிடம் ரூ. 15/- ம் வாங்கி ஒருவனை கொள்ளையிடக்கூடாது. கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது. சுமுத்திரையான நிறை கல்லோ அவருக்கு பிரியம் நீதி 11 : 11 ஒருவனுக்கு தேவனே செல்வத்தையும், சம்பத்தையும், கனத்தையும் கொடுக்க வேண்டும். பிர 6 : 2 இருஎஜமான்களுக்கு ஊழியம் செய்கிறவன் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளனும், கொள்ளைக்காரனுமாயிருக்கிறான். ஏனென்றால் இவன் ஒரே நேரத்தில் ஒரு எஜமான்களுக்கு ஊழியம் செய்கிறான். திங்கள் முதல் வெள்ளி வரை இப்பிரபஞ்சத்துக்குரிய அதிபதியாகிய பிசாசுக்கு ஊழியம் செய்கிறான். தேவனால் அழைக்கப்பட்டவர்கள் யாவரும் இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் (ரோ 1 : 1 பிலி 1:1 தீத் 1 : 1 யாக் 1 : 1, 2 பேது 1 : 1, யூதா 1 : 1 பாருங்கள் அப். பவுல், யாக்கோபு, பேதுரு, யூதா போன்றவர்கள் தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரர்களாக இருந்தார்களேயன்றி இப்பிரபஞ்சத்தின் அதிபதி மற்றும் அவனுடைய பிரஜைகளுக்கு ஊழியக்காரர்களாக இல்லை. நீங்கள் பிசாசுக்கு ஊழியம் செய்தால் அவனுக்கு ஆதாயம் செய்யும் பணியில் இருக்கிறாய். நீ தேவனுக்கு ஊழியம் செய்தால் இரட்சிப்பின் செய்தியை மக்களுக்கு அறிவிக்கிறவனாக இருப்பாய், அவருக்கும் ஆத்தும ஆதாயம் செய்யும் பணியில் இருப்பாய். நீ இருவர்களுடைய பணியையும் ஒரே நேரத்தில் செய்யமுடியாது. நீ கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தால் கிறிஸ்துவை பின்பற்றுகிறவனாக இருப்பாய். பிசாசுக்கு ஊழியம் செய்தால் அவன் இருக்குமிடத்தில் தான் நீயும் இருப்பாய்.

57. நீ ஒரு தனிப்பட்ட நபருக்கு பணியாளனாக இருந்தால், நீ ஒரு ஸ்தாபனத்தில் பணியாளனாக இருந்தால். நீ ஒரு அரசாங்கத்தில் பணியாளனாக இருந்தால் நீ கிறிஸ்துவுக்கு, தேவனுடைய இராஜ்யத்தில் ஒரு பணியாளனாக இருக்க முடியாது. நீ தேவனுடைய ஊழியக்காரனாகவும், அரசு ஊழியக்காரனாகவும் ஒரே வேளையில் இரு எஜமான்களுக்கு பணி செய்யமுடியாது. ஆம் நீ ஒரு நேரத்தில் மனுஷர்களுக்கும், கிறிஸ்துவுக்கும் ஊழியம் செய்ய முடியாது. நீ ஒரே நேரத்தில் பார்வோனுக்கும், தேவனுக்கும் ஊழியக்காரனாக இருக்க முடியாது. நீ யாருக்கு அடிமை? (Servant) (1 கொரி 7:22-24) நான் இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்கிறவர்களைக்குறித்து எழுதுகிறதாவது : நீ தேவனுடைய ஊழியக்காரனாகவும், அரசு ஊழியக்காரனாகவும் இரு ஊழியங்களை ஒரே நேரத்தில் செய்ய முடியாது. நீ அடிக்கடி கடிந்துக் கொள்ளப்பட்டும் பிடரியை கடினப்படுத்தும் ஒருவனாக இராதே. மனந்திருப்பு.

58. ஒரு பாஸ்டர் மட்டும் தன் குடும்பத்துடன் சபை நடத்துவது குறித்து சத்தியமார்க்கம் தூஷிக்கப்படுகிறதே. ஒரு பாஸ்டர் தன் குடும்பம், தன் உறவினர் மற்றும் ஒரிரு குடும்பங்களை வைத்துக்கொண்டு கர்த்தர் தன்னை ஊழியத்திற்கு அதுவும் ஐந்து வகை ஊழியத்தில் பாஸ்டராக அழைத்துள்ளார் என்று கூறினால் அங்கு சத்தியமார்க்கம் தூஷிக்கப்படுகிறதே. ஆறு நாட்கள் இப்பிரபஞ்சத்துக்கு ஒத்த வேஷம் தரித்து கம்பெனிகளில் வேலை செய்து விட்டு வந்து 7-வது நாள் ஞாயிறு சத்தியமார்க்கம் தூஷிக்கப்பட கர்த்தரால் ஐந்து வகை ஊழியத்தில் பாஸ்டராக நியமிக்கப்பட்டுள்ளேன் என்று கூறுபவர்களால் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படுகிறதே. இவர்கள் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளர்கள். இக்காலத்திற்குரிய செய்தியில் சகோதர சிநேகத்தில் நிலைத்து நிற்கிறோம் என்று கூற ஒரு நாதியும் இல்லாததினால் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படுகிறதே. பத்து / இருபது ஆண்டுகள் நட்பு எங்கே போனது? ஒருவன் கூறும் அனைத்துக்கும் ஆம், ஆம் என்றால் நட்பு. மற்றபடி விரோதம். இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ளவர்கள் மத்தியில் எதிலும் போட்டியும், பொறாமையும், வஞ்சகமும், சூதும் தானே நான் கடந்த 33 ஆண்டுகளாக காண்கிறேன்.

59. இந்நாட்களில் சபைகளில் ஆங்காங்கு பெண் மேய்ப்பர்கள் காணப்படுகிறார்கள். இது ஒரு பெரிய வெட்கக்கேடு. அந்த அளவுக்குச் சாத்தான் இந்த மக்கள் கண்களை குருடாக்கி சபையை பழாக்கி வருகிறான். ஸ்தாபன சபைகளில் ஆண், பெண் மேய்ப்பர்கள் வெள்ளையங்கி தரித்து காணப்படுகிறார்கள். இதர தனியார் சபைகளில் பெண்கள் வெந்நிற ஆடைகளில் காணப்படுகிறார்கள். இவர்களை கர்த்தர் இந்த பணிக்கு எடுத்து உபயோகிப்பது இல்லை என நன்கு அறிந்தும் துணிகரமாக இருமாப்பாக ஆணவத்துடன், தேவனுடைய தங்களுக்கு கேடு வரத்தக்கதாக. கர்த்தர் சபையில் பெண் பிரசங்கிகளை அனுமதிப்பதே இல்லை. காரியம் இப்படியிருக்க இவர்களை மேய்ப்பனாக தம்முடைய சபைக்கு எவ்வாறு ஏற்படுத்துவார்? ஆக பிசாசு தன் ஆதிகத்தில் உள்ள சபைகளுக்குபெண் மேய்ப்பர்களை ஏற்படுத்தி உள்ளான். இந்த பெண் மேய்ப்பர்களை நம்பி ஒரு கூட்டம் ஜனங்கள் இருப்பார்களாயில் அவர்களும் தங்களுடைய பந்தயப் பொருளை இழந்தவர்களே. ஒரு அரசாங்க, தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்கள், குழந்தை பாக்கிய இல்லாதவர்கள், திருமணமாகாதவர்கள் துணிகரமாக தங்களை கர்த்தர் மேய்ப்பனாக ஏற்படுத்தியுள்ளார் என்று கூறி தங்களுக்கு கேடு வருவித்துக்கொள்வது போன்று இந்த பெண் மேய்ப்பர்களும் தங்களுக்குத் தாங்களே ஆக்கினைத் தீர்ப்பை வருவித்துக்கொள்கிறார்கள்.

60. இந்த பூமியில் மிகவும் பழமையான முதலாம் ஸ்பாதன சபை (கி.பி 606) ஏழு மலைகளின் மேலுள்ள வாடிகன் பட்டிணத்தில் (வெளி 17 : 9) உட்கார்ந்துக் கொண்டு உலகம் முழுவதும் தன் ஆதிக்கத்தை செலுத்தி, கிறிஸ்துவுக்கு பதிலாக போப் (Vicarius Filli Dei) எனக் கூறிக்கொண்டு வரும் கத்தோலிக்க திருச்சபையாகும். இரகசியம், மகாபாபிலோன், வேசிகளுக்கும் பூமியில்உள்ள அறுவறுப்புகளுக்கும் தாய் என்ற நாமம் இவளுக்கு உண்டு என்பதை நாம் வெளி 17 : 5 ல் வாசிக்கலாம். கத்தோலிக்க திருச்சபை வேசிக்களுக்கெல்லாம் தாய் என்று கூறப்பட்டிருப்பதால், இவளுடைய பிள்ளைகள் / குமாரத்திகள் யார்? இவளுடைய மூல உபதேசமாகிய திருத்துவத்தில் உள்ள, இவளுக்கு பின் ஒன்றன்பின் ஒன்றாக எழும்பின ஸ்தாபன சபைகளாகும். தாயையும் குமாரத்திகளையும் வேசியாக்கியது எது? இவளுடைய போதகமே. பாருங்கள் திருத்துவம் யாத் 20 : 2, 3, குழந்தை திடப்படுத்தல் ஞானஸ்நானம் (மாற் 16 : 16), லெந்து நாட்கள், கிறிஸ்துமஸ், ஈஸ்டர், அதநாசியஸ் விசுவாச பிரமாணம், லித்தானியா என்னும் பொதுவான பிரார்த்தனை, அப்போதலர் பிரமாணம், இராபோஜனத்தை பகல் வேளைகளில் ஆசரித்தல் (1கொரி 11 : 25) போன்ற உபதேசங்களுக்கு வேதவாக்கியங்களில் ஆதாரங்கள் எங்காவது உண்டா? பாருங்கள் ஆதி 1 : 1 முதல் வெளி 22 : 21 வரை எங்காவது ஒரிடத்தில் பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டுள்ளதா? இவர்கள் கிறிஸ்துவின் சபைப்போன்று பாசாங்கு செய்து, அதே சமயத்தில் மனுஷர்களுடைய கற்பனைகளையும், பாரம்பரியங்களையும், பிரமாணங்களையும், கோட்பாடுகளையும், கிறிஸ்துவின் பெயரில் ஜனங்களுக்கு கொடுத்து வருகிறார்கள். மனுஷர்களுடைய கற்பனைகளை உபதேசங்களாய் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய் சொல்லியிருக்கிறான் (மத்தேயு 15 : 9) இவர்களுடைய வாசல் விஸ்தாரமாக இருப்பதால், திரளாண ஜனக்கூட்டத்தை அவர்களிடத்தில் காணமுடிகிறது. இவர்களுடைய ஆவிக்குரிய வேசித்தனத்தினால் பூமியின் இராஜாக்கள், மிக பெரிய அந்தஸ்துகளை உடைய மனுஷர்கள், ஞானிகள், கல்விமான்கள், தொழிலதிபர்கள், விக்கிரகாராதனைக்காரர்கள், அரசியல் தலைவர்கள் பங்கு கொண்டனர். ஆனால் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறந்து மறுப்பிறப்படைந்த ஆவிக்குரியவர்களுக்கு இங்கு இடமில்லை. பங்குமில்லை. அவர்கள் இவர்களுடைய உபதேசங்களுக்கு உடன்படுவது இல்லை. தாயும் குமாரத்திகளும் தங்களுடைய வேசிதனத்தினாலும் அக்கிரமங்களினாலும், தேவனுடைய சபையை தீட்டுப்படுத்தினார்கள். சீயென்றிகழப்படத்தக்கதும், அறுவறுக்கப்படத்தக்கதுமான இவர்களுடைய கிரியைகளினால் தேவனுடைய நாமத்தை தீட்டுப்படுத்தி வேசிமார்க்கத்தில் சோர்ந்து போனார்கள். தாயை போல மகள் என்று அவர்களை குறித்து பழமொழி சொல்லப்பட்டது. எசே. 16 : 44. இவர்கள் கள்ளத்தனமாய் தேவனிடத்தில் திரும்பினார்களேயன்றி தங்கள் முழு இருதயத்தோடும் திரும்பவில்லை. நாளுக்கு நாள் இவர்களுடைய மீறுதல்களும், சீர்கேடுகளும் பெருகி பெருகி அதிகரித்துக்கொண்டே வருகிறது. அதற்கு இது ஒரு

எடுத்துக்காட்டு.

61. தென்னிந்திய திருச்சபை (CSI) மற்றும் இந்திய சுவிசேஷ திருச்சபை (ECI) மகாவேசிகளின் குமாரத்திகள் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். வேதவாக்கியங்கள் எல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. இங்கு பெண்கள் / அரவாணிகள் ஆசாரியத்துவத்தில் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் என்பதற்கு ஆதாரங்களே கிடையாது. ஆசாரியத்துவம் ஆண்களுக்கு மட்டுமே. இதை மாற்றி இந்த ஸ்தாபனங்கள் சபைளில் பெண்களை / அரவாணிகளை ஆசாரியர்கள் ஆக்குகிறார்கள். இது குறித்து பத்தி 41 ல் குறிப்பிட்டுள்ளேன். பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அறுவறுப்புமுள்ள சகலவித பறவைகளின் கூடுகளுமாகிய இந்த ஸ்தாபன சபைகளுடைய பாவங்கள் வானபரியந்தம் எட்டியுள்ளது. அவர்களுடைய அநியாயங்களை தேவன் நினைவுக்கூர்ந்தார். ஒரே நாழிகையில் இவர்களுக்கு ஆக்கினை வரும். பாருங்கள் தூத்துக்குடி, பாரதி என்பவர் ஆணாக பிறந்து தன்னை பெண்ணாக மற்றிக்கொண்டார். இவர் இந்திய சுவிசேஷ திருச்சபையில் அதன் செங்கல்பட்டு கிளையில் ஊழியராக பணியாற்றியவர். 05.02.2012 அன்று தென்னிந்திய திருச்சபை டையோசிஸ் ஆயர் இந்த அரவாணியை சென்னை பேராயம் ஆயராக்கும் என அறிவித்துள்ளார்கள். இது **ஜாமக்காரன்** பிப்ரவரி 2012 செய்தி. ஆனால் **The Times of India** 06.02.2012 ல் Front Page News Under heading 'India's first transgender Pastor leads city church. Shunned and traumatized as a youngster, 25-year old Bharathi now preaches to a congregation of 45 respectfull parishioners, including 14 families, as India's first transgender pastor. Bharthi who completed her bachelor's degree in theology last april, has been a pastor at the ECI branch in Chengalpet, on the outskirts of Chennai, for the past 8 months. Bharathi conducts service in Tamil and English every sunday, administers communion to her parishioners.


BREAKING BARRIERS: Bharathi

**என் ஜனங்களுக்கு என் அழைப்பு :** உலகத்தோற்றம் முதல் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுத்தப்பட்டிராத பூமியின் குடிகளே இந்த தாய் மற்றும் சேய் ஸ்தாபன சபைகளில் அவயவங்களாயிருப்பார்கள். வெளி 11 : 8. ஆதலால் என் ஜனங்களே, நீங்கள் தாய் மற்றும் மேற்குரிய இரு குமாரத்திகளின் பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள். வெளி 18 : 4. நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் உங்கள் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளுங்கள். அவ்வண்ணமாக இரட்சிக்கப்படுகிறவர்களையே கர்த்தர் தம்முடைய சரீரமாகிய சபையில் சேர்த்துக்கொள்வார். அப் 2 : 47 மாற்றுவழியில் ஞானஸ்நானம் பெற்றவர்களை இந்த மகாவேசியும் அவளுடைய குமாரத்திகளும் தங்களுடன் ஐக்கியத்தில் சேர்த்துக்கொள்வார்கள். தாய்க்கும் அவள் குமாரத்திகளுக்கும், வேதவாக்கியங்களில் எங்காவது ஒரு இணைப்பு உண்டா?

62. நான் லவோதிக்கேயா சபைக்காலத்திற்குரிய செய்தியில் இருக்கிறேன், கர்த்தர் வானத்திலிருந்து இறங்கிவரும் வேளையில் உண்டான ஆரவாரசெய்தியில் இருக்கிறேன், கர்த்தருடைய வருகையில் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட ஆயத்தமாயிருக்கிறேன், நான் கிறிஸ்துவின் மணவாட்டியென தங்களை பலவாறு புகழ்ந்து, முடிவில் நாய் தான் கக்கினதை தின்னவும், பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்கு சம்பவித்தது. ஸ்தாபன சபைகளுக்கு சென்று அங்கு பெண் / ஆண் தெரிந்துக்கொள்பவர்கள் பாவனை விசுவாசிகளே. இவர்கள் தேவனுடைய வித்து அல்ல. இக்காலத்திற்குரிய செய்தி, செய்தி எனக் கூறியவர்களில் பெருபாலான மேய்ப்பர்கள் மற்றும் விசுவாசிகள் இந்த ரகத்தை சார்ந்தவர்களாகவே காணப்படுகிறார்கள்.

63. நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்று யோசுவா கூறியதை மாற்றி (யோசு 24 : 15) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்ற பவுலின் உபதேசத்தை மாற்றி (அப் 16 : 31) நானும் என் வீட்டாரும் கர்த்தராகிய பிரன்காமையே இரட்சிக்கப்படுவீர்கள் என அப் 4 : 12, 10 : 43 க்கு மாறாக உபதேசிப்பவர்கள் அனைவரும் பிசாசின் ஊழியக்காரர்களே, கள்ளகபடமுள்ள வேளையாட்களே. ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்களே இவர்களை குறித்தும் ஜாக்கிரதையாயிருங்கள். இவர்களும் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளர்களே.

64. ஏழாம் சபைக்கால தூதனும், தீர்க்கதரிசியுமாகிய சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் அவர்கள்

பிரசங்கித்த செய்திகளுக்கு : **வில்லியம் மாரியன் பிரன்காமினால் உரைக்கப்பட்ட வார்த்தை, ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே** போன்ற தலைப்புகள் வேதவாக்கியங்களின் அடிப்படையில் சரியானது. ஆனால் வில்லியம் மாரியன் பிரன்காமினால் உரைக்கப்பட்ட வார்த்தை என்ற வாக்கியத்திற்கு அடுத்து உரைக்கபட்ட வார்த்தையே மூலவித்து என்பதும் தீர்க்கதரிசி பிரன்காம் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய வார்த்தை (Revealad Word of God by Prophet Branham) என்பதும் பரத்திலிருந்து இறங்கி தேவனுடைய வார்த்தை. சகோ. பிரன்காமினால் உரைக்கப்பட்ட வார்த்தை மூலவித்து ஆகமுடியாது. ஏனென்றால் செய்தியை அவருடைய செய்திகளில் தவறுகள் உண்டு. சில இடங்களில் குழப்பங்கள் உண்டு. சகோ. பிரன்காமின் செய்திகளை மேற்கண்ட தலைப்புகளில் மொழிப்பெயர்த்து வெளியிடுபவர்கள் அனைவரும் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளர்களே.

65. இந்நாட்களில் ஒரு விளம்பரத்தை கண்டேன். அதில் ஆவியின் வரங்களை பெற்றுக்கொள்ள எங்களது பரிசுத்த உபவாச ஜெபமண்டபத்திற்கு மிகுந்த அன்புடன் அழைக்கிறோம் என எழுதியிருந்தார்கள். ஏதோ பரிசுத்த ஆவியின் வரங்களை கொடுப்படும் எடுப்பதும் இவர்கள் கரங்களில் உள்ளது போல் எழுதியிருந்தார்கள். ஆனால் வேதவாக்கியங்கள் இது குறித்து கீழ்கண்டவாறு கூறுகிறது. ஆவியினுடைய அனுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது... இவைகளெல்லாம் அந்த ஒரே ஆவியினால் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்கு பகிர்ந்துக்கொடுக்கிறார். (1கொரி 12 : 7-11) பாருங்கள் வரங்களை யாரும் நாடி உபவாசிக்கவேண்டியதில்லை. அது தேவனுடைய சித்தம். அதில் ஒருவர் குறுக்கிடமுடியாது. ஆதலால் இப்படிப்பட்ட விளம்பரங்கள் எல்லாம் பேய்த்தனத்திற்கடுத்தது. இவர்களும் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறுவழியாய் ஏறிய கள்ளர்களே.

66. மக்கள் மத்தியில் ஒரு பேர் பிரபலமடைந்த மறைந்த ஊழியக்காரர் ஒருவரையும், அவரது குடும்பத்தினரையும் ஊர் அறியும். யூதாஸ் அற்புத அடையாளங்களை செய்தான். அவனும் கிறிஸ்துவினிடத்தில் ஒரு ஊழியத்தைப் பெற்றிருந்தான். அவ்வண்ணமாகவே இவரும் ஒரு ஊழியத்தை பெற்றவர். ஆங்காங்கு சில அற்புத அடையாளங்கள் நடந்தாக கேள்வி. யூதாசும் எப்பொழுதும் பணப்பையை தனது கைகளில் வைத்திருந்தான். அதே போன்று இவரும் எப்பொழுதும் பணத்தை மையமாக கொண்டு பலதிட்டங்களை கர்த்தர் பேரில் சொல்லி மக்களை ஏமாற்றினார். முடிவில் அவர் காலம் நிறைவேறியது. அவரது பேரன் ஒரு பாடல் பாடுவதை கேட்டேன். தங்கத்தை கேட்கவில்லை, வைரத்தை கேட்கவில்லை, உள்ளத்தைக் கேட்டாரைய்யா. ஆஸ்தியை கேட்கவில்லை, அந்தஸ்த்தை கேட்கவில்லை, உள்ளத்தை கேட்டாரைய்யா. உண்மைதான் மனுமக்களை சிருஷிடித்து அவர்களுக்காகவே தன் ஜீவனையும் கொடுத்தவர், தான் சிருஷ்டித்த தன் மனுமக்களிடம் பாடலில் உள்ளபடி மேற்குரியவைகளை அவர் கேட்கவில்லை. அவர்களது உள்ளத்தை தான் கேட்டார். ஆனால் இந்த குடும்பமோ அவருடைய பெயரை சொல்லி மக்களுடைய தங்கத்தையும் வைரத்தையும், ஆஸ்திகளையும் அல்லவா கேட்கிறார்கள். பணம் சம்பாதிப்பதை மையமாக கொண்டுதானே இந்த குடும்பத்தினரது ஊழியம். இந்த குடும்பமே ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கொள்ளைக்கார குடும்பம். இந்த ஊழியத்தையும் நம்பி அன்றும் மக்கள் மோசம் போனார்கள். இன்றும் மோசம் போய்க்கொண்டிருக்கிறார்கள். இந்த மக்களது நிலை அந்தோ பரிதாபம்!

67. நான் வேதவாக்கியங்களின் அடிப்படையில் எழுதிய மேற்கூறிய பண்புகள் உங்கள் மேய்ப்பனிடம் இல்லையென்றால் அவர் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளனே. நான் கேட்கிறேன். இந்த பண்புகள் உள்ள ஒரு மேய்ப்பனை நீங்கள் எனக்கு கட்ட முடியுமா? உபாத்தியாயர்களுக்கு குறைவு இல்லை. ஆனால் தகப்பன்மார்களை கண்டுபிடிப்பதுதான் அரிதாயிருக்கிறது. ஆதலால் பிரியமானவர்களே நீங்கள் எந்த சபைக்கு சென்றாலும், உங்கள் சபையின் போதகர் தேவனுடைய மனுஷன் என்று நீங்கள் நம்புகிறீர்களா, விசுவாசிக்கிறார்களா? இல்லையெனில் நீங்கள் அதை விட்டு விலகி வேறு ஒரு தேவமனிதனிடம் செல்லுங்கள். அவரை நீங்கள் விசுவாசிப்பீர்களானால் அவர் உங்களுக்கு சத்தியத்தை எடுத்துரைப்பார் என்று விசுவாசித்து, அவரை ஏற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் கிறிஸ்துவின் மீது கொண்டிருக்கும் உங்கள் சொந்த தனிப்பட்ட விசுவாசமே உங்களை இரட்சிக்கிறது. (**நான் மோசேயோடு இருந்தது போல உன்னோடும் இருப்பேன்.** பத்தி 228, நாள் 11-9-1960)

68. இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள அநேக மேய்ப்பர்கள் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளர்களே என உங்களுக்கு திரும்பத்திரும்ப எழுதுவதில் நான் சோர்ந்து போவது இல்லை. உங்கள் மத்தியில் உள்ள பிரபலமான மேய்ப்பர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஸ்தாபன பெந்தெகொஸ்தே சபையில் பெண் கொள்ளுகிறார்கள், பெண் கொடுக்கிறார்கள். அந்த பெண், ஆண் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவும் இல்லை. இக்காலத்திற்குரிய செய்தியை விசுவாசிக்கும் விசுவாசியாகவும் இல்லை. இப்படி இருக்க ஒரு சாட்சியற்ற ஜீவியம் செய்கிறவர்களை, அந்நிய ஜனங்களோடே கலந்து, திருப்பிப்போடப்படாத அப்பமாகிய இவர்களை நீங்கள் மேய்ப்பனாக கொண்டிருக்கிறது என்ன? இந்நாட்களில் **ஆரவாரம்** வீட்டிலும், **ஏல்பெத்தேல்** பாஸ்டர் குடும்பத்திலும், **பொன்னேரி** பாஸ்டர் விட்டிலும்

(பொன்னேரி பாஸ்டர் மரணம் அடைந்து விட்டதாக கேள்விப்பட்டேன். ஆதலால் அவரைக்குறித்து இங்கு எழுதுவதற்காக வருந்துகிறேன்) இப்படிப்பட்ட சாட்சியற்ற திருமணங்கள் நடைபெற்றது உங்களுக்கு தெரியுமா? நான் தங்களை பாஸ்டர்கள் என அழைத்துக்கொள்ளும் சிலரை தெய்வச்செயலாக சந்திக்க நேர்ந்தது. அவர்கள் இந்த இரு சம்பவங்களையும் கூற நான் கேட்டேன். இதைக்கேட்டவுடன் என் மனதில் உதித்தது என்னவென்றால் இந்த ஜனங்களுக்கு சுய நினைவே இல்லையா? இப்படிப்பட்ட ஊழியர்களை பாஸ்டர்கள் என அழைத்துக்கொண்டு, ஐந்து வகை ஊழியத்தை நிந்திக்கிறார்களே, ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளனும், கொள்ளைக்காரனுமாகிய மேய்ப்பர்களை இவர்களால் பகுத்தறிய முடியவில்லையே. கண்கள் குருடாக்கப்பட்டுள்ளதே ! ஆம் , லவோதிகேயா கொடிதான வஞ்சிப்பின் சபைக்காலம்.

69. சரிபோகட்டும். இவர்கள் இருவருடைய காரியங்கள் தான் இப்படியிருக்கிறதென்றால், பெரவலூர் பெரியவர் காரியம் என்ன? நீ விசுவாசியா அல்லது அவிசுவாசியா என்பது பற்றி எனக்கு ஒன்றும் கவலை இல்லை, நீ ஞானஸ்நானம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பெற்றிருக்கிறாயா அல்லது இல்லையா, அதுபற்றி அறிந்து கொள்ள வேண்டியது என் தொழில் அல்ல. அந்த திருமணத்தை சபையில் நடத்தி வைக்க வேண்டுமா அல்லது திருமண மண்டபத்தில் நடத்தி வைக்க வேண்டுமா அல்லது திருப்பதிக்கு வந்து நடத்தி வைக்க வேண்டுமா? எங்கும் வர நான் தயார் என்கிறார். இவரையும் கொண்டு திருமணம் நடத்தி வைக்கிறார்களே அவர்களை என்ன என்று சொல்வது? அவர் நடத்தி வைக்கும் விவாகங்கள் தேவனுடைய பார்வையில் கனவீனமானது. அது கிறிஸ்துவ விவாகமே அல்ல.

70. நம் மத்தியிலுள்ள பெரும்பாலான மேய்ப்பர்களை பாஸ்டராக கொண்டுள்ள ஜனங்கள் நிச்சயமாக வணங்கா கழுத்துள்ள ஜனங்களே. இவர்களுடைய மேய்ப்பர்களுக்கெல்லாம் பாஸ்டர் பதவி ஒரு வெட்கக் கேடே. ஆவிக்குரியவர்கள் இவர்களோடு ஐக்கியம் கொள்ள முடியாது. ஏனென்றால் இவர்களது கிரியைகள் இவர்கள் யார் என்று நிரூபிக்கிறதே. இந்த மூவர்களையும் பாஸ்டராக கொண்ட சபைகளை விட்டு வெளியே வாருங்கள், உங்கள் ஆத்துமாவுக்கு கேடு உண்டாக்காதீர்கள் என உங்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் எச்சரிக்கிறேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற ஒருவன், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பாவமன்னிப்பை பெறுவான் (அப் 10:43) என்று எழுதியிருக்கிற வண்ணமாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, அவிசுவாசியுடன் விசுவாசிக்கு பங்கேது (2 கொரி 6 : 14) என்ற அப்போஸ்தலர் உபதேசத்தை புறம்பேதள்ளி, ஒரு அவிசுவாசியுடன் திருமணம் செய்யும்போது அவன் தன் சரீரத்தின் ஒரு பாகமாகிய தன் துணையை அடைவதில்லை. அதாவது ஒரு விசுவாசி ஒரு அவிசுவாசியை திருமணம் செய்யும் போது தன் சரீரத்தில் பாகத்தை கண்டடைவதில்லை. அவன் வேறொரு சரீரத்தின் பாகத்தை கொண்டு வந்து தன் சரீரத்தின் ஒட்டவைத்து அவள்மீது உரிகை கொண்டாடுகிறான். அதாவது உலகத்தோற்றத்திற்கு முன்பே வேறொருவனுக்கு நியமிக்கப்பட்ட பெண்ணை தன் சரீரத்துடன் ஒட்டவைத்து அவள்மீது உரிமைக்கொண்டாடுகிறான். அப்படியானால் அந்த வாழ்க்கை தேவசித்தத்துக்கு புறம்பான ஒரு இல்லற வாழ்க்கை. ஏனெனில் அவர்கள் ஒரே சரீரமாக தொடக்கத்தில் இல்லை. இப்படிப்பட்ட விவாகத்தை ஆதரிக்கும், நடத்திவைக்கும் ஒருவன் கள்ளகபடமுள்ள வேலையாளே, அவனுக்கும், அவன் செய்யும் ஊழியத்திற்கும் தேவனுக்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. அது உறுதி. இவனும் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளனே, பாருங்கள் அவன் அவளுடைய படிப்பு, அந்தஸ்து, பணம், சொத்து, சுகங்கள் மீது நாட்டம் கொண்டு அவளை திருமண செய்ய விரும்பியதால் தேவன் அவன் மனக்கடினத்துக்கு ஒப்புக்கொடுகிறார். ஆதனால் அந்த திருமணம் தேவனுடைய மூலசித்தத்தில் அல்ல. ஒரு விசுவாசி ஒரு அவிசுவாசியை திருமணம் செய்து, அவிசுவாசியை நாங்கள் விசுவாசியாக மாற்றுவோம் என்பது கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை அந்த திருமணம் பிரதிபலிக்காது. ஏனெனில் அந்த திருமணம் ஒரு விசுவாசிக்கும் ஒரு அவிசுவாசிக்கும் ஆகும். அந்தத் திருமணம் தேவன் நியமத்துக்கு மாறானது.

71. சத்தியம் இந்த மூன்று மேய்ப்பர்களுக்கும் தெரியாதா? ஆம், அவர்களுக்குத்தெரியும். ஆனால் அவர்கள் கள்ளகபடமுள்ள வேலையாட்கள். அவர்கள் பாவங்கள் வானபரிந்தம் எட்டியது. ஆதலால் இவர்களை விட்டு உங்களை வேறுபிரித்து அவர்களை விட்டு வெளியே வாருங்கள் என கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உங்களை அழைக்கிறேன். ஒரு சபையை தெரிந்து கொள்ளும் விஷயத்தில் நீங்கள் ஐக்கியம் கொள்ள விரும்பும் சபையைக் குறித்து நன்றாக ஜெபம் செய்ய வேண்டும். சபைக்குள் பலவித ஆவிகள் உண்டு என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். நான் குற்றம் கண்டு பிடிக்க வரவில்லை. நீங்கள் ஒரு சபைக்குள் சென்று அதன் மேய்ப்பனை சற்று கவனியுங்கள், வழங்கமாக மேய்ப்பர் எப்படி நடந்து கொள்கிறாரோ அப்படியே சபையும் நடந்து கொள்ளும். அப்படியானால் நாம் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்வதற்கு பதிலாக ஒருவர் ஆவியை மற்றொருவர் பெற்றுக்கொள்கிறோம். எனவே சபையைத்தெரிந்து கொள்ளும் விஷயத்தில் நான் உண்மையான அடிப்படை தத்துவம் கொண்ட முழு சுவிசேஷ வேதாகம சபையை தெரிந்து கொள்வேன். ஆம் கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே இன்று உங்கள் மத்தியில் உள்ள ஏல்பெத்தேல், கல்வாரி ஜெபவீடு, சென்னை சபை இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு போன்ற சபை விசுவாசிகளைக்குறித்து நான் ஆவியில் நிதானிப்பது

என்னவென்றால் அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்வதற்கு பதிலாக தங்கள் பாஸ்டரின் ஆவியை பெற்றுக்கொண்டதாகவே காண்கிறேன். அந்த சபைகளில் பரிசுத்த ஆவிக்கு இடமில்லை. மறாக மனுஷனுடைய ஆவிக்கு மாத்திரமே அந்த சபைகளில் இடமுள்ளதாகவே காண்கிறேன்.

72. இக்காலத்திற்குரிய செய்தியில் இருக்கிறோம், அதன் தூதன் சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் என விசுவாசிக்கிறோம் என பிரகடனப்படுத்திக்கொண்டு, அங்காங்கு சபைக்கூடுதல் நடந்து வருகிறது. இந்நாட்களில் திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து ஒரு துர்செய்தி என் காதுக்கு எட்டியது. இங்கு ஒரு சபை உண்டு. பொதுவாக சபைகளில் எங்குமே பெண்கள் தான் அதிகம். இந்த சபை அதற்கு விதிவிலக்கு அல்ல. ஏனெனில் இவர்கள் தான் எப்போதும் கற்றாலும் ஒரு போதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்கள் (2தீமோ 3:7) ஆக இந்த சபையில் படித்து, பட்டங்கள் பெற்ற பெண்கள் உண்டு. சபையில் ஆராதனையை நடத்திவரும் சகோதருக்கும், அவர் மனைவிக்கும் இடையில் உள்ள மனஸ்தாபத்தினால் அவர்கள் இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்தார்கள். இவர் சபை ஆராதனை நடத்த தகுதியற்றவர். இந்நிலையில் வேதவாக்கியங்களின்படி அவர்கள் இருவரும் மறுமணம் செய்யமுடியாது. அவர்கள் மறுமணம் செய்வார்களானால் அவர்களது இல்லற வாழ்க்கை ஒரு விபச்சார வாழக்கை எனப்படும். ஏனென்றால் அவனுக்கு / அவளுக்கு ஏற்கனவே ஒரு மனைவி / கணவன் உயிரோடு இருக்கிறார். ஒரு மனைவி / கணவன் உயிரோடு இருக்கும்போது அந்த நபர் மறுமணம் செய்வதால் அவர்களது வாழக்கை விபச்சார வாழ்க்கை எனப்படும். ஆதலால் அவர்கள் சீர்பொருந்தி மீண்டும் தங்கள் இல்லற வாழ்க்கையைத் தொடங்க வேண்டும். அது ஒன்றே அவர்கள் முன் உள்ளவழி. மற்றபடி அவர்கள் இருவரும் மீதமுள்ள தங்கள் வாழ்க்கை முழுவதிலும் தனிமையாகவே இருக்கவேண்டும். இருவரில் ஒருவர் மரித்தால் தான், உயிரோடு இருக்கும் நபர் மறுமணம் செய்து கொள்ளமுடியும். இந்நிலையில் இந்த சபையில் ஆராதனையை வழிநடத்தி வருபவர் ஒரு கள்ளக்கபடமுள்ள வேலையாளாக இருப்பதால் தன் மனைவியை விட்டு பிரித்து, பின் தன் சபையில் உள்ள வேறொரு பெண்ணோடு ஒருபக்க காதல் கொண்டு தன்னைத்திருமணம் செய்து கொள்ள அழைத்தார். அந்த பெண் அந்த மானங்கெட்டவனுக்கு புத்திமதி சொல்லி, இனி தன்னை இந்த காரியத்திற்காக அழைக்கக்கூடாது என கேட்டுக்கொண்டு தன் மேய்ப்பனிடம் விபரத்தை கூறினாள். சில காலம் அந்த கேடுகெட்ட நபர் தன் உத்தியோகத்தை இழந்தார். ஆனால் சில காலத்துக்குப் பிறகு மீண்டும் அவருக்கு அவர் முந்தைய பணி கொடுக்கப்பட்டது. ஆதலால் இப்பொழுது சபையில் இந்த பெண் தன்னைத் திருமணம் செய்வதற்கு ஏற்றாற்போல் தன் இருதயத்தில் இருக்கிறதை எடுத்து கர்த்தர் உரைப்பதாக தீர்க்கதரிசம் சொல்ல ஆரம்பித்தார். மேய்ப்பனும் அவருக்கு கூட்டாளியோ என்னவோ அந்த தீர்க்கதரிசனங்களை கண்டு கொள்ளவில்லை. ஆதலால் அந்த பெண் தொல்லை தாங்க முடியாமல் சபைக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டாள். பாருங்கள் அநேக சபைகளில் இப்படிப்பட்ட சீர்கேடுகள், அக்கிரமங்கள், அநியாயங்கள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. இந்த மேய்ப்பனுக்கு அநேக பெண்கள் பலிக்கடா ஆகிறார்கள். பாருங்கள் இந்த சபை மேய்ப்பனும் ஒரு கள்ளக்கபடமுள்ள வேலையாளே. இந்த மேய்ப்பனுக்கு மேய்க்கும் பணி ஒரு கேடா? இவன் தன்னைத்தானே மேய்ப்பனாக ஆக்கிக்கொண்டு தேவசித்தத்துக்கு புறம்பாக ஒரு பணியை அவருக்கென்று செய்து வருகிறான். எனக்கு பிரியமானவர்களே. திருநெல்வேலியில் இந்த சபை எங்கு உள்ளது என கேட்டறிந்து அதை இழுத்து மூடுங்கள். இத்தகைய மேய்ப்பன் உங்களை நித்திய ஜீவனுக்குள் வழி நடத்த ஒருக்காலும் முடியாது. நான் அறிய திருநெல்வேலியில் 4/5 சபைகள் உண்டு. அதில் ஒன்று கூட உருப்படியாக இல்லை என மிக்க ஆணித்தரமாக எழுதுகிறேன். ஏனென்றால் இந்த சபைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உபதேசத்தில் உள்ளன. அவைகள் யாவும் இக்காலத்திற்குரிய செய்திக்கு புறம்பானது / மாறுபாடானது. நான் எழுதிய இந்த சபை மேய்ப்பன் தென்திசையிலிருந்து ஒரு மனுஷன் எழும்பி இனி ஒரு மகத்தான எழுப்புதல் உண்டாகும் என பிரசங்கித்து வருகிறார். ஆனால் இதற்கு வேதவாக்கியங்களில் எங்கும் ஆதாரங்கள் கிடையாது. ஏழாம் சபை காலத்தூதனோடு அனைத்தும் முடிவு பெறுகிறது. இது கடைசி சபை. இவர் கடைசி தூதன். இனி வேறோரு தூதன் கிடையாது. இனி எடுத்துக்கொள்ளப்படுதல் மட்டுமே நிகழ உள்ளது. ஆதலால் திருநெல்வேலியில் உள்ள சபை போதகர்களும் ஆட்டுத் தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளர்களே.

73. பாருங்கள் சென்னை சபை மேய்ப்பன் வில்லியம் பிரன்காம் குட் நியுஸ் சொசைட்டி கட்டிடம் மீது கண்ணோட்டம் வைத்து அந்த சொசைட்டியை இந்நாட்களில் பிச்சையடுக்க வைத்து விட்டார். பிச்சை எடுத்து எடுத்து தான் புத்தகங்கள் வெளியிட வேண்டிதாயிருக்கிறது. பண உதவி செய்வோருக்கும், இக்காலத்திற்குரிய செய்திக்கும் சம்மந்தம் ஏதுமில்லை. வேதத்தை போதிக்கும் இவர்கள் தேவனுடைய வார்த்தையை அறியாமல், இக்காலத்திற்குரிய செய்தியை அறியாமல் தேவனுக்கும் இக்காலத்திற்குரிய செய்திக்கும் துரோகம் பண்ணி வருகிறார்கள். ஒவ்வொருவனும் தன்தன் வழியையும் அவனவன் தன்தன் மூளையிலிருந்து தன்தன் பொலிவையும் நோக்கிக்கொண்டு வெளிப்பாடு வெளிப்பாடு என பொய்யை நம்பும் ஜனங்களுக்கு பொய்களைக்கூறி மக்களை வஞ்சிக்கிறார்கள். தங்களுக்கு கிடைத்த வெளிப்பாடுகள் எனக்கூறி அவைகளை விவரித்து ஜனங்களைத் தங்கள் வீம்புகளினால் மோசம் போக்குகிறார்கள். கர்த்தர் அவர்களை அனுப்பியதும் இல்லை, சென்னை சபை தங்கள் வெளியீடுகளை எனக்கு அனுப்புவது இல்லை. இயேசு கிறிஸ்து ஜெபவீடு தங்கள் காலண்டர்களை எனக்கும் கொடுப்பதும் இல்லை. ஆனாலும் கர்த்தர் அவைகளை என் கரங்களுக்கு


யாராகிலும் ஒருவர் மூலம் கொண்டுவந்து கொடுக்கிறார். இவர்கள் தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரமே தாங்கள் வெளியிடும் புத்தகங்களை அனுப்பி வைப்பார்கள். மற்றவர்களுக்கு அனுப்பமாட்டார்கள். நான் அதில் பிந்தைய வகுப்பை சார்ந்தவன். செய்தி புத்தகங்களை விநியோகிப்பதிலும் பாரபட்சம்




74. பாருங்கள் இயேசு கிறிஸ்து ஜெபவீடு அதிகமாக பணம்கொடுப்பதால் அதன் விளம்பரம் பெரிய அளவில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மணவாட்டி சபை, இயேசு கிறிஸ்துவின் சரீரமாகிய ஜெபவீடு சிறய அளவில் பணம் கொடுப்பதால் அவர்களின் விளம்பர அளவும் சிறிது. இப்படியாக அவர்கள் கொடுக்கும் பணத்திற்கு தக்கதாக சென்னை சபை தான் வில்லியம் பிரன்காம் குட்நியூஸ் சொசைட்டி பெரியல் வெளியிடும் புத்தகங்களில் விளம்பரங்களை வெளியிடுகிறது. ஆனால் இவர்கள் செய்தியை மொழிப்பெயர்க்கும் நபர் பெயரை மட்டும் வெளியிடுவதில்லை. அதில் தில்லுமுல்லு இப்பதால் தான் என எனக்குள் ஆவியில் உணருகிறேன். எது எப்படியிருந்தாலும், முடிவில் இவர்கள் ஆவியின் வழிநடத்துதலுக்கும், வழிகாட்டுதலுக்கும் உட்பட்டவர்கள் அல்ல என இவர்களை குறித்து நான் கருத்துக்கொண்டுள்ளேன். உங்களையும் இது குறித்து எச்சரிக்க விரும்புகிறேன். இவர்களுடைய சூதும், வஞ்சிக்கிறதற்கேதுவான கண்ணியியல் விழாதீர்கள்.




75. கடந்த ஆண்டு (2011) தொடக்கத்தில் எனக்கு **இயேசுகிறிஸ்துவின் ஜெபவீடு** மிக அட்டகாசமாக வெளியிட்ட படக்காலண்டர் ஒன்று கிடைத்தது. அதன் ஜனவரி - பிப்ரவரி மாத முதல் பக்கத்தை கண்டவுடனே எனக்கு மிக்கதொரு அதிர்ச்சி உண்டாயிற்று. அந்த அளவுக்கு வேதவாக்கியங்களையும், இக்காலத்திற்குரிய செய்தியையும் தங்களுக் கேடு வரத்தக்கதாக புரட்டப்படிருப்பதைக் கண்டேன். ஆம் கர்வம் உள்ள பகுத்தறிவில்லாத மேய்ப்பனிடம் காணப்படுகின்ற அக்கரையற்ற தன்மையைக்கண்டேன். இச்சபையில் தேவனுடைய வார்த்தை, இக்காலத்திற்குரிய செய்தியின் மீது மீறுதல்கள், சீர்கேடுகள் நாளுக்கு நாள் அதிகரிப்பதையும், மாறுபாடான போதனைகளும் உபதேசங்களும் நாளுக்கு நாள் முளைத்தெழும்பி சற்று வளர்ந்து பின் அது கருகிப்போவதையும் கவனித்து வருகிறேன். இந்த பகட்டான அலங்காரம் கொண்ட, பார்ப்பதற்கு மிகவும் அட்டகாசமான காலண்டரின் முதல் பக்கதத்தில் பிரதானமாக காணப்படுவது குத்து விளக்கு (Lamp Stand / Candle Stick) இங்கு ஏழு அகல்களுக்கும் போகின்ற ஏழு குழாய்களும் ஏழு சபைக்காலங்களாக சித்தரிக்கப்பட்டுள்ளதைக் கண்டேன். இந்த குத்து விளக்குகளுக்கு அடுத்த காரியங்களை நீங்கள் பழைய ஏற்பாட்டில் யாத் 25:31லும், சகரி 4:2 லும் தியானிக்கலாம். யாத் 25:31ல் கர்த்தரால் ஒரு குத்துவிளக்கை உண்டாக்க மோசே கட்டளை பெற்றான். அடுத்து சகரி 4:2 ல் சகரியா ஒரு குத்து விளக்கைக் கண்டான். அங்கு இந்த குத்து விளக்குக்கு அடுத்த காரியங்களை நீங்கள் காணலாம். மேலும் புதிய ஏற்பாட்டில் இதைக்குறித்து வெளி 1:13ல் மற்றும் 1:20 ல் காணலாம்.



பாஸ்டர் ஜான் ஐசக் அவர்களின் பொன் குத்து விளக்குகின் 7 கிளைகள் 7 சபைக்காலங்களை சித்தரிக்கிறது இது ஒரு தவறான சித்தரிப்பு.



THE GOLDEN LAMPSTAND (Ex. 25:31-40)

யாத் 25 : 31 ல் சித்தரிக்கப்பட்டுள்ள ஒரு பொன் குத்துவிளக்கின் வரைபடம். மத்தியில் தண்டு இருபுறமும் 3 வீதம் 6 கிளைகள். முடிவில் ஏழு அகல்கள். அகல்களிலிருந்து வெளியே அக்கினி தீபம்.


உரைக்கப்பட்ட வார்த்தையின் ஊழியம் என்பதை உரைக்கப்படாத வார்த்தையின் ஊழியம் என்று அழைத்தால் அது நலமாயிருக்கும்.

76. சென்னை சூளைமேடு, இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு மேய்ப்பன் ஜான் ஐசக் அவர்கள் ஒரு குத்து விளக்கை வரைந்து அதன் ஏழு குழாய்களும் ஏழு சபைக்காலங்களாக குறித்துள்ளார். ஆனால் யோவான் கண்டது ஏழு குத்து விளக்குகள். ஒன்று அல்ல மாறாக ஏழு. மேலும் அந்த ஏழு குத்துவிளக்குகள் மத்தியில் மனுஷகுமாரனுக்கு ஒப்பானவரை கண்டான். ஒரு குத்துவிளக்கின் ஏழு குழாய்களும் ஏழு சபைக்காலங்கள் என்றால் அதில் மனுஷ குமாரனுக்கு ஒப்பானவரை எங்கு காண்பது? ஆக இவருடைய ஒரு குத்துவிளக்கு மற்றும் அதன் ஏழு குழாய்களில் ஏழு சபைகள் சித்தரிப்பு வேதவாக்கியங்களுக்கு முறனானது. புறம்பானது. அது வேதவாக்கியங்களுக்கு ஒருவன் தன் மனம் போன போக்கில் வியாக்கியானாம் பண்ணுவதாகும். அது மிகவும் ஆபத்துக்குரியது.




ஏழு பொன் குத்துவிளக்குகள் மத்தியில் நீள அங்கி தரித்த (Clothed with a Garment down the floor) மனுஷகுமாரனுக்கு ஒப்பானவர். ஏழு குத்துவிளக்குகள் -- ஏழு சபைக்காலங்கள். மனுஷகுமாரனுக்கொப்பானவர் வலது கரத்திலுள்ள ஏழு நட்சத்திரங்கள் -- ஏழு சபைகால தூதர்கள் (வேதவாக்கியங்களின் அடிப்படையில் ஒரு சரியான சித்தரிப்பு படம்)

பாருங்கள் ஒவ்வொரு குத்துவிளக்கும் ஒவ்வொரு சபைக்காலங்களுக்கும் எடுத்துக்காட்டாக இருக்கிறது. யோவான் ஏழு குத்து விளக்குகளையும் ஏழு நட்சத்திரங்களையும் கண்டான். குத்து விளக்கு எண்ணிக்கையில் ஏழு. நட்சத்திரங்களும் எண்ணிக்கையில் ஏழு. ஏழு நட்சத்திரங்கள் ஏழு சபைக்கால தூதர்கள். ஏழு குத்துவிளக்குகள் ஏழு சபைக்காலங்கள் (வெளி 1:13-20).




77. இரண்டாவதாக நான் கண்ட மற்றொரு மாறுபடான போதனை என்னவென்றால் நாம் இப்பொழுது சபைக்காலங்களில் இல்லை. 1963க்கு பிறகு மணவாட்டி யுகத்தில் ஜீவிக்கிறோம் என்கிறார். ஆனால் ஏழாம் சபைக்காலத்து தூதனும், தீர்க்கத்தரிசிமாகிய சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் கீழ்கண்டவாறு தனது **ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்** 4.12.1965 ல் அன்று பிரசங்கிக்கப்பட்ட செய்தியில் 105 மற்றும் 106 பத்தியில் ஏனோக்கு ஆதாமின் ஏழாம்தலை முறையானவன், அவன் சபைக்காலங்களுக்கு உதாரணமாயிருக்கிறான். அவனுக்கு முன் இருந்த ஆறு பேரும் மரித்தனர். ஆனால் ஏனோக்கு மர்ணமடையாமல் எடுத்துக்கொள்ளப்பட்டான். விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தை காணாதப்படிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே அவன் காணப்படமாற் போனான். அவன் தேவனுக்கு பிரியமானவன் என்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னே சாட்சிப்பெற்றான். எபி 11:5 ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான் அவன் ஆதாமிலிருந்து ஏழாம் தலைமுறையானவன். ஏழாம் சபைக்காலத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழும் என்பதை இதை காண்பிக்கிறது. நாம் ஏழாம் சபைக்காலத்தில் இருக்கிறோம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. நாமெல்லாருக்கும் அது தெரியும். (பத்தி105) ஏனோக்கின் எடுத்துக்கொள்ளப்படுதல் ஒரு முன் அடையாளமாக உள்ளது. நமக்கு முன் இருந்தவர்கள் மரித்தனர். ஆனால் கடைசி காலத்தில் உள்ள மணவாட்டியோ ஏழாம் சபைக்காலத்தில் வெளியே அழைக்கப்பட்டு மரணமின்றி எடுத்துக்கொள்ளப்படுவாள். அது நிகழவிருக்கும் காலம் தான் என நாம் சாட்சிப்பகறுகின்றோம். (பத்தி 106) இப்பொழுது கவனியுங்கள். இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு மேய்ப்பன் ஜான்ஐசக் அவர்கள் தீர்க்கதரியின் செய்தியைக்கொண்டு போதிக்கிறேன் என்கிறார். தீர்க்கதரிசி 1965 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4 ஆம் தேதி நாம் ஏழாம் சபைக்காலத்தில் இருக்கிறோம் என்பதில் எந்த விதமான ஐயமும் இல்லை. ஏழாம் சபைக்காலத்தில் மணவாட்டி வெளியே அழைக்கப்பட்டு மரணமின்றி எடுத்துக்கொள்ளப்படுவாள். அது நிகழவிருக்கும் காலம் தான் இது என்று பிரசங்கிக்கிறார். ஆனால் இந்த மேதவி நாம் இப்பொழுது சபைக்காலங்களில் இல்லை. 1963 த்திற்கு பிறகு மணவாட்டி யுகத்தில் ஜீவிக்கிறோம் என்கிறார். லவோதிக்கேயா சபைக்காலத்தில் மணவாட்டி ஏனோக்கை உதாரணமாக கொண்டு எடுத்துக்கொள்ளப்படவேண்டும். ஆனால் நமது மேய்ப்பன் லவோதிக்கேயா சபைக்காலம் முடிந்து விட்டது. 1963 க்கு பிறகு நாம் மணவாட்டி யூகத்தில் இருக்கிறோம் என்கிறார். இவருடைய இந்த போதனை தீர்க்கதரிசியின் போதனைகளுக்கு மீஞ்சினதாக / கூடுதலாக இருப்பதாக உங்களுக்குத் தோன்றவில்லையா?

78. இப்பொழுது கவனியுங்கள் நாம் இப்பொழுது லூத்தான் காலத்தில் இல்லை, பெந்தெகொஸ்தே காலத்தில் இல்லை மாறாக மணவாட்டி காலத்தில் ( Bride age) இருக்கிறோம் என சகோ பிரான்காம் தம்முடைய செய்தி Leadership நாள் 7.12.1965 செய்தியில் கூறுகிறார். சகோதரர், நாம் மணவாட்டி காலத்தில் இருக்கிறோம் என்று குறிப்படுவது லவோதிக்கேயா சபைக்காத்தின் முடிவு காலம் ஆகும். இது எப்படியெனில் ஒவ்வொரு சபைக்காலத்திலும் மணவாட்டி உண்டு. மணவாட்டி லவோதிக்கேயா சபைக்காலத்தின் மாத்திரம் அல்ல. முந்தின ஆறு காலங்களிலும் உண்டு. ஆக ஏழு சபைக்காலங்களிலும் கிறிஸ்து தம்முடைய மணவாட்டியைக்கொண்டுள்ளார். பொதுவாக ஒவ்வொரு சபைக்காலத்திலும் அதன் முடிவு நேரத்திலே தூதன் அனுப்பப்படுகிறான். அவன் வந்து மணவாட்டியை வெளியே அழைக்கிறான். அவனுடைய இந்த அழைப்பின் நேரம் அந்தந்த சபைக்காலத்தில் மணவாட்டி யுகமாகும். ஆக ஒவ்வொரு சபைக்காலத்திலும் அதன் முடிவு நேரத்திலும் மணவாட்டி வெளியே அழைக்கப்பட்டு, அந்த காலம் மணவாட்டி யுகம் என அழைக்கப்படுகிறது. ஆக நாம் லவோதிக்கேயா சபையின் காலத்தில் அதன் மணவாட்டி யுகத்தில் இருக்கிறோம் என்பது உண்மையே. அதற்காக லவோதிக்கேயா சபைக்காலம் முடிந்துவிட்டது எனக்கூறுவது கள்ளகபடமுள்ள வேலையாட்கள் வேத வாக்கியங்களை புரட்டுவதாகும்.


79. மூன்றாவதாக 1963 ல் ஏழாம் சபைக்காலத்தூதன் சகோ வில்லியம் மாரியன் பிரான்காம் சரீரத்தில் தேவன் இறங்கி மனுஷகுமாரன் ஊழியத்தைச் செய்தார். தூதனுடைய ஊழியத்தின் மூன்றாம் இழுப்பின் (Third Pull) நேரத்தில் அதாவது 1963 க்குப்பிறகு நடந்த ஐந்து சம்பவங்கள் குறித்து படத்துடன் விளக்குகிறார். ஆனால் சகோ பிரான்காம் தன்னுடைய ஊழியத்தின் மூன்றாம் இழுப்புக்குறித்து கூறுவது என்ன? அதன் காரியங்களை, வருடம், மாதம், நாளை நன்கு கவனியுங்கள்.

அ) நமது பிரயாணத்தில் நாம் எங்கு வந்துள்ளோம் என்பதைப் பாருங்கள். ஆம் ஐயா, மூன்றாம் இழுப்பில் (செய்தி : **முறையிடுகிறது என்ன சொல், பக்கம் 45, பத்தி 2 நாள் 14.07.1963))**

ஆ) மூன்றாம் இழுப்பு அசையத்தொடங்கி விட்டது என்பதாக நான் உணர்கிறேன். பாருங்கள் அது இப்பொழுது எனக்குள் இருக்கிறது. (செய்தி : **நாம் எப்படி ஜெயம் கொள்வது?** பத்தி 31 நாள் 25.08.1963)

இ) மூன்றாம் இழுப்பு இங்கு உள்ளது (செய்தி : **பார்வையைத்திருப்பி இயேசுவை நோக்கிப்பாருங்கள்,** பக்கம் 12, பத்தி 1, நாள் 29.12.1963.)

80. நான் மேலே கொடுத்துள்ள மூன்று செய்திகளிலிருந்து சகோ. பிரான்காம் ஊழியத்தின் மூன்றாம் இழுப்பின் காலக்கட்டங்களை நீங்கள் அறிந்து கொள்ளலாம். இப்பொழுது இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு மேய்ப்பன் ஜான்ஐசக் அவர்கள் குறிப்பிட்டுள்ள சம்பவங்கள் அனைத்தும் அவர் எழுதியபடி 1963 ல் மூன்றாம் இழுப்பின் வேளையில் சம்பவித்ததுதானா என்று பார்ப்போம்.



வார்த்தையை உரைத்த போது பனிபுயல் நின்றது.

அ) **வார்த்தையை உரைத்தபோது பனிபுயல் நின்றது.** இந்த சம்பவம் 24.10.1963 அன்று கொலராடோ (Colorado) என்ற இடத்தில் நடந்தது (Foot prints on the sands of time. page 107) சகோ. பிரான்காம் "புயலே, உன் இடத்திற்கு போ, நில் சூரியனே, நீ வழக்கம் போல நான்கு நாட்கள் பிரகாசி" என்று கட்டளையிட்டார். அவர் கட்டளையிட்ட மாத்திரத்தில் உறைபனி, கல்மழை நின்றது. இந்த சம்பவம் குறித்து சகோ பிரான்காம் **"தேவனுடைய வார்த்தை அவிசுவாசதினின்று முழுவதுமாக பிரிந்து வரும்படி அழைக்கிறது".** நாள் 21.1.1964 அன்று பிரசங்கித்த செய்தியில் 26 ஆம் பக்கத்தில் இருந்து பேசுகிறார். இந்த சம்பவம் குறிப்பாக 32 வது பக்கத்தில் காணப்படுகிறது. ஆக இந்த சம்பவம் குறித்து இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு, மேய்ப்பன் ஜான்ஐசக் குறிப்பிட்டுள்ளது முற்றிலும் சரியே.



வார்த்தையை உரைத்த போது சகோதரி மேடா மரணவியாதி சரியானது TUBERCULOSIS

ஆ) **வார்த்தையை உரைத்தபோது சகோதரி மேடா மரணவியாதி சரியானது (Tuberculosis).** இங்கு மேய்ப்பன் ஜான் ஐசக் அவர்கள் தன்னுடைய அஜாக்கிரதையினால் ஒரு குழப்பத்தை உண்டு பண்ணியுள்ளார். சயரோகம் (Tuberculosis) என்ற வியாதியில் இறந்தது சகோ. பிரான்காம் அவர்களின் சுமார் 22 வயதையுடைய முதல் மனைவி சகோதரி (HOPE) ஆகும். இது குறித்து நீங்கள் Life Story Little Rock. A.R. 50-0200 பத்தி 55 மற்றும் Life Story, William Branham-Cleveland Sunday 50-0820.A பத்தி 99 மற்றும் Life Story-Phonix -A-Z. Sunday 51-0415A பத்தி 93 போன்ற செய்திகளில் வாசிக்கலாம். இதுபோன்று இன்னும் அநேக செய்திகள் உண்டு. அவைகளிலும் நீங்கள் தியானிக்கலாம். இந்த சகோதரி HOPE BRUMBACH ஐ சகோ. பிரான்காம் 22.6.1934 ல் திருமணம் செய்தார். இவர்களுக்கு Billy paul 13.9.1935 அன்று பிறந்தார். சாரோன் ரோஸ் (Sharon Rose) என்ற பெண் குழந்தை 27.10.1936 ல் பிறந்தது. சகோதரி Hope 22.7.1937 அன்றும் சயரோகம் வியாதியில் (Tuberculosis) கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தார்கள். பெண்குழந்தை Sharon Rose 26.7.1937 அன்று கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்தது. பெண்குழந்தை தாய் மரித்த நான்காவது நாள் மரித்தது. சகோ. பிரான்காமின் நிலையை நீங்கள் நன்கு புரிந்திருக்கலாம். சோதனைகள் மத்தியில் விசுவாசப் போராட்டம். ஆனாலும் கிறிஸ்துவை விடாது பற்றிக்கொண்டார். அது தான் தேவனுடைய கிருபை அவர் மிது. தன்னுடைய இளம் வயது மனைவி மரித்தபோது : ஓ என்னுடைய இதயம் எப்படியாய் இரத்தம் கசிந்தது. அப்போது என்ன செய்வதென்று எனக்கு தெரியவில்லை. ஆனால் இன்றைக்கோ அவையாவும் என்னுடைய நன்மைக்கேதுவாய் நடைபெற்றுள்ளது என்பதை நான் அறிந்திருக்கிறேன். செய்தி : **"நான் அறிந்திருக்கிறேன்** பத்தி 92,93 நாள் 17.4.1960. சகோதரன் மறுபடியும் சகோதரி Meda Broy யை 23.10.1941 ல் திருமணம் செய்தார். இந்த அருமையான சகோதரி சகோ. பிரான்காம் க்கு விரோதமாக பேசியதால் அவளுக்கு புதியதாக சதை வளர்ச்சியினால் ஏற்படும் கட்டி ஒன்றை (Tumer) தேவன் அனுமதித்தார். பின்பு சகோதரி திருந்த சகோ. தன் மனைவிக்காக ஜெபிக்க, ஆப்ரேஷனுக்காக ஆயத்தமாக இருந்த நிலையில் கர்த்தர் அந்த கட்டியை முற்றிலுமாக மறையச்செய்தார். 27.11.1963 அன்று சகோதரி இந்த கட்டியிலிருந்து பூரண சுகம் பெற்றார். கட்டி ஆப்ரேஷன் இல்லாமல் முற்றிலுமாக மறைந்தது. இது குறித்து சகோ. பிரான்காம் பிரசங்கித்த செய்தி : **Testimoney** நாள் 28.11.1963 ல் வாசிக்கலாம்.

முடிவு : இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு மேய்ப்பன் ஜான் ஐசக் அவர்களது 2011 வது அண்டு காலண்டர் (இதை ஒரு காலண்டர் என சொல்வதற்கு பதிலாக) ஒரு பிக்சர் ஆல்பம் என்றே கூறலாம். ஏனென்றால்

ஒவ்வொரு பக்கத்திலும் முக்கால் பகுதி படங்கள். மீதமுள்ள கால் பகுதியில் 50 % தனது மற்றும் சபைக்கடுத்த விளம்பரம். மீதி 50% இரு மாத காலண்டர்கள். இப்பொழுது இவர் முதற்பக்கத்தில் கூறியபடி சகோதரி மேடா சயரோக வியாதியிலிருந்து (Tuberculosis) விடுதலைப்பெறவில்லை. சகோதரி மேடாவுக்கு உண்டான கட்டி சம்பவம் எதை நமக்கு உணர்த்துகிறது என்றால் மோசேயின் உடன் பிறப்பு சகோதரி மீரியாம் (ஒரு தீர்க்கதரிசினி யாத் 15 : 20) கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்க எடுத்து உபயோகப்படுத்தப்பட்ட பாத்திரமாகிய மோசேயுக்கு விரோதமாக பேசினபொழுது கர்த்தர் அவள் சரீரத்தில் உறைந்த மழையின் வெண்மை போன்ற குஸ்டரோகத்தை அனுமதித்தார். அவளுக்காக ஆரோன் மோசேயிடம் மன்றாட, மோசே கர்த்தர் இடத்தில் விண்ணப்பம் பண்ண, அவள் சுத்தமானாள் (எண்.12 ஆதி) பாருங்கள் கனமான ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட ஒருவனை அவன் மனைவியோ உடன்பிறப்போ யாராக இருந்தாலும் அவனுக்கு விரோதமாக பேசினால் அந்த நபரைத் தண்டிக்கிறார்.

இது போன்று சகோதரன் ஏழாம் சபைக்காலத்தூதன் மக்களை ஸ்தாபன சபைகளிலிருந்து வெளியே அழைக்கும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை அவர் வருகைக்கு ஆயத்தப்படுத்த ஒரு கடினமான, உலகத்தையே அசைக்கககூடிய ஊழியத்தைப் பெற்றதோடு மாத்திரம் அல்ல, யாரும் எதிர்ந்து நிற்க முடியாதபடி ஆவியின் பெலத்தைப்பெற்று ஊழியம் செய்த ஒரு நபரை, தவறாக பேசியதால் கர்த்தர் அந்த சகோதரிக்கு இந்த கட்டியை அனுமதித்தார். பின் மோசே தன் சகோதரிக்காக ஜெபித்தது போன்று சகோதரர் தன் மனைவிக்காக ஜெபிக்க அந்த கட்டி முற்றிலுமாக மறைந்தது. இது ஊழியக்காரர்கள் குடும்பத்திற்கு நல்ல பாடம். இப்பொழுது நாம் கவனிக்க வேண்டியது இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு மேய்ப்பன் ஜான்ஐசக் அவர்கள் கூறுவது போன்று இந்த சம்பவம் ஏழாம் சபைக்காலத்தூதனின் மூன்றாம் இழுப்பு நேரத்தில் நடந்தாலும், சம்பவங்கள் மாறுபட்டதாக உள்ளது.



வார்த்தையை உரைத்த போது மரித்த மீன் உயிர்பெற்றது.

இ) **வார்த்தையை உரைத்தபோது மரித்த மீன்கள் உயிர் பெற்றது.** இந்த சம்பவம் Date Hollow Lake Knentucky ல் 22.06.1957 ல் நடந்தது (Foot prints on the sands of time page 692) இந்த சம்பவம் குறித்து Hebrews chapeter 2 part 3 பத்தி 258 ல் காணலாம். இது 28.08.1957ல் பிரசங்கிக்கப்பட்டது. இதன்பின் இந்த சம்பவம் குறித்து சகோ பிரான்காம் **"தேவன் எளிமையில் மறைந்திருந்து, அதன்பின் அவ்விதமாகவே தம்மை வெளிப்படுத்துதல்"** என்ற செய்தியில் 331 வது பத்தியில் கூறுகிறார். இது 17-3-1963 ல் பிரசங்கிக்கப்பட்டது. பாருங்கள் இந்த சம்பவம் மூன்றாம் இழுப்பு சமயத்தில் நடந்தது அல்ல. ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவன் என்று எண்ணிக்கொள்வானானால் ஒன்றையும் அறிய வேண்டிய பிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை.




வார்த்தையை உரைத்த போது அணில் சிருஷ்டிக்கப் பட்டது.

ஈ) **வார்த்தையை உரைத்தபோது அணில் சிருஷ்டிக்கப்பட்டது.** பாருங்கள் இந்த சம்பவம் இருமுறை நடந்தது. ஒன்று இந்தியானாவில். இது 8.10.1959 அன்று நிகழ்ந்தது. இரண்டாம் சம்பவம் 22.10.1959 அன்று கெண்டுகியில் (Kentucky) நிகழ்ந்தது. Foot prints on the sands time page 695 இந்த சம்பவம் குறித்த காரியங்களை சகோ. பிரான்காம் Speak to the mountain, 23-11-1959 அன்று பிரசங்கித்த செய்தியில் கூறுகிறார். இந்த செய்தி Sanjose California என்ற இடத்தில் பிரசங்கிக்கப்பட்டது. ஆக இந்த சம்பவம் சகோ. பிரான்காம் ஊழியத்தின் மூன்றாம் இழுப்பு நேரத்தில் நடைபெறவில்லை.



வார்த்தையை உரைத்த போது சகோதரி ஹட்டிரைட் பிள்ளைகள் இரட்சிக்கப்பட்டார்


உ) **வார்த்தையை உரைத்தபோது சகோதரி ஹைட்றிரைட்யின் பிள்ளைகள் இரட்சிக்கப்பட்டார்.** இந்த சம்பவம் 1959 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் Depauw, Indiana வில் நடந்ததாகும். (Foot prints on the sands time page 695) இது குறித்து சகோ. பிரன்காம் Look away to Jesus 29.12.1963 ல் பிரசங்கிக்கப்பட்ட செய்தியில் 12,13 பக்கங்களில் கூறுகிறார். மேலும் I have Heard but now I see 27.11.1965 ல் பிரசங்கிக்கப்பட்ட செய்தியில் பக்கம் 151 முதல் 167 வரை இது குறித்து பேசுகிறார் பத்தி 162, 163, 164 ல் இந்த சம்பவம் குறித்த விவரங்கள் உள்ளது. இந்த சம்பவம் சகோ பிரான்காம் ஊழியத்தின் மூன்றாம் இழுப்பு சமயத்தில் நடைபெறவில்லை. ஆக இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு மேய்ப்பன் ஜான்ஐசக் வெளியிட்ட 2011 வது காலண்டரில் ஜனவரி பிப்ரவரி முதல் பக்கத்தில் காணும் 1963 ல் ஏழாம் தூதன் பிரான்காம் சரீரத்தில் தேவன் இறங்கிமூன்றாம் இழுப்பு சமயத்தில் நடந்த சம்பவங்கள் என கூறிய முதல் இரண்டு சம்பவங்கள் தவிர இதர அனைத்து சம்பவங்களும் 1963 க்கு முன் நடந்தாகும். ஆக இந்த நவின மேய்ப்பன் கர்த்தரால் ஏற்படுத்தப்படாது, தன்னைத்தானே மேய்ப்பனாக்கிக் கொண்டு தவறான பாதையில் தன் ஜனங்களை வழி நடத்திச் செல்கிறார். வேதவாக்கியங்களுக்கும், இக்காலத்திற்குரிய செய்திக்கும் புறம்பானவைகளைக்கூறி மக்களிடம் பந்தா காட்டுகிறார்




81. அடுத்து, இவரது காலண்டரின் மார்ச் - ஏப்ரல் மாத இரண்டாவது பக்கத்துக்கு திரும்பவும். அங்கு 1963 பிப்ரவரி 28 ஆம் தேதி தோன்றிய அதிசய மேகம் அப் 1:9-11 வசனத்திற்கு ஏற்ப இருக்கிறது எனக் கூறுகிறார். இந்த 1963 பிப்ரவரி 28 மேக வளையம் குறித்து ஏற்கனவே ஒரு செய்தி (ஏழாம் முத்திரை - Seventh Seal என்ற தலைப்பில் அதன் கீழ் 1963 பிப்ரவரி 28ல் தோன்றிய அதிசய மேக வளையம் அரைமணிநேரம் அமைதல் (வெளி 8 : 1) என்பதற்கும் மரணஅடி என்ற சிறுதலைப்பில் மே-ஆகஸ்ட் 2005ல் எழுதியுள்ளேன். அந்த இதழில் இந்த மேகவளையம் குறித்ததான முழு விவரங்கள் அடங்கியுள்ளன. இந்த இதழ் தங்களிடம் இல்லை என்றால் என்னிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள். இங்கு மிகச்சுருக்கமாக அது குறித்து எழுதுகிறேன். எழு தேவ தூதர்கள் கூட்டம் வானத்திலிருந்து இறங்கிவந்து சகோ பிரான்காமை சந்தித்தனர். அவர்கள் சந்திப்பு முடிந்தவுடன் அவர்கள் வானத்தை நோக்கிச்செல்லும்போது இந்த மேகவளையம் அவர்களால் உண்டாயிற்று. அதாவது அவர்கள் மேல் நோக்கிச் சென்றபோது அவர்கள் ஏழு பேரையும் கொண்டு இந்த மேகவளையம் (வட்டம்) உண்டானது. அது எப்பொழுது உண்டானது என்று யாராலும் கூறமுடியவில்லை. ஆனாலும் மாலை மயங்கும் நேரத்தில் அந்த வளையம் வானத்தில் மிளிர ஆரம்பித்தது. அப்பொழுதுதான் அந்த வளையம் குறித்து மக்கள் அறிய வந்தனர். இந்த மேகம் ஏழு முத்திரைகளின் இரசியங்களின் வெளிப்படுத்தலை உறுதிப்படுத்த வானத்தில் தோன்றிய ஒரு அடையாளம் என்று சகோ பிரான்காம் அவரது செய்தி **"ஷாலோம்"** பக்கம் 22,23 பத்தி 64, 66ல் தியானிக்கலாம். மேலும் உயரவானத்தில் அடையாளங்கள் காணப்படும். மேலும் இந்த காரியங்கள் நிகழும் போது பல்வேறு இடங்களில் பூகம்பங்கள் ஏற்படும். அப்பொழுது மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். இந்த நாள் லூக்கா 17, மனுஷகுமாரன் தம்மை மறுபடியும் வெளிப்படுத்துவார். செய்தி : **தேவ சித்தத்துக்கு புறம்பாக அவருக்கு சேவை செய்தால்,** பத்தி 167, நாள் 18-0-1965. சகோ. பிரான்காம் இது அப் 1 :9-11 நிறைவேற்றுதல் என்றும் எங்கும் தனது செய்தியில் போதிக்கவில்லை. ஆனால் உங்களுடைய மேய்ப்பன் தான் மிஞ்சி, மிஞ்சி போகிறார். அது என்ன? பிசாசு அவர்களோடு இடைப்படுகிறான்.

82. சகோ. பிரான்காம் போதித்தற்கு மாறாக உங்கள் பாஸ்டரைப்போன்ற போலிகள் மற்றும் கள்ளக்கபடமுள்ள வேலையாட்கள் பலர் போதித்து வருவதால் இவர்கள் தான் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் நுழைந்த கள்ளர்கள் என்பதை ஆணி அடித்து உறுதிப்படுத்துகிறேன். அடுத்து ஏழாம் சபைகாலத்தூதன் **ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்** (புதியபதிப்பு) செய்தியில் 175 வது பத்தியில் அவர்கள் கண்களுக்கு முன்பாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது என்பதற்கான விளக்கத்தில் அவர் பேரில் விசுவாசம் கொண்டவர்களிடம் தேவனுடைய வார்த்தை வந்தது. காத்திருந்த பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களை அவர் அழைத்துக்கொண்டு உன்னதத்திற்கு ஏறினார் (பத்தி 171) பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்கள் மறுபடியும் இவ்வுலகில் வந்து ஜனங்களிடையே நடமாடி இயேசு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அவருடன் கூட எடுத்துக்கொள்ளப்பட்டனர் என்கிறார். இந்த ஏழு தேவதூதர்களால் உண்டான மேகம் போன்ற மேகம் அன்று பரிசுத்தவான்களைக்கொண்டது. அப் 1 : 9 பரிசுத்தவான்களைக்கொண்ட மேகம் அவரைச்சூழ அவர் எடுத்துக்கொள்ளப்பட்டார். இந்த செய்தி 4-12-1965 ல் பிரசங்கிக்கப்பட்டது. மேலும் அப். 1:9 வசனத்தை கவனியுங்கள். அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர் எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவர்களை எடுத்துக் கொண்டது. வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்திற்கு எழுந்தருளிப்போனோரோ அப்படியே மறுபடியும் வருவார். இது இனி நடக்கவேண்டிய ஒரு சம்பவம். எப்பொழுது இது நடக்கும்? பாருங்கள் பரிசுத்தவான்களுடன் அவர் எடுத்துக்கொள்ளப்பட்டார். இனி எப்பொழுது அவர் பரிசுத்தவான்களுடன் திரும்பி வருவார்? இந்த வினாவிற்கு விடை சகரியா 14 :5 ல் இருக்கிறது. என் தேவனாகிய கர்த்தர் வருவார் : தேவரீரோடே எல்லா பரிசுத்தவான்களும் வருவார்கள். இது எப்பொழுது சம்பவிக்கும்? நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்களை அனைவரோடு கூட வரும்போது. நீங்கள் நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாய் இருக்கும்படிக்கு உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவராக (1தெச 3:13) இந்த சம்பவம் இயேசு கிறிஸ்து நியாயத்தீர்ப்புக்காக வரும்போது நடக்கும் ஒன்றாகும். இது குறித்து மேலும் **கேள்வி பதில் 16,18** ஐ நீங்கள் கவனியுங்கள். ஆக 1963 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 ஆம் நாள் தோன்றிய அந்த மேக வளையம் அப் 1:11 க்கு அடுத்த சம்பவம்

இல்லை. இதில் ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு தமிழ் மொழிப்பெயர்ப்பில் டாக்டர். S.C. ஜேக்கப் கூட தவறு செய்துள்ளார். அதே தவறைத்தான் சகோ. ஜான் ஐசக் அவர்களும் செய்துள்ளார்.




83. இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு மேய்ப்பன் ஜான்ஐசக் அவர்களின் உபதேசம் முற்றிலுமாக நூற்றுக்கு நூறு சதவீதம் பரத்திலிருந்து இறங்கி வந்த ஞானமாயிராமல் லௌகிக சம்பந்தமும் பேய்த்தனத்துக்கடுத்தது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், அவருடைய பெயரைத்தரித்திருக்கும் ஜெபவீட்டாருக்கும், அதன் மேய்ப்பனுக்கும் எந்த விதமான சம்மதமும் இல்லை. அதலால் கிறிஸ்துவின் மணவாட்டிக்கு இந்த சபையில் இடமில்லை. மேலும் இந்த நூதன மேய்ப்பன் கூறுகிறார்., வானத்திலிருந்து பலமுள்ள தூதன் கிறிஸ்து கீழே இறங்கிவந்தபோது ஏற்கனவே பூமியில் ஏழாம் சபைக்காலத்து தூதன் இருந்தார். அவர் கிறிஸ்துவுக்குள் நித்திரைஅடைந்த பிறகு அந்த பலமுள்ள தூதன் இப்பொழுது மணவாட்டியோடு இருக்கிறார் என்று இந்த மேய்ப்பன் கூறும் பின் பகுதி தான் பிரச்சினைக்குரியதாக இருக்கிறது. 1963 பிப்ரவரி 28 ஆம் தேதி மேகத்தை அவர்கள் வெளி 10:1 க்கு ஒப்பிடுகிறார்கள். ஆனால் இந்த மேகம் வெளி 1:14 தோற்றத்திற்கு ஒப்பாகவே இருக்கிறது. வெளி 10:1 தோற்றத்தையும் வெளி 1:14 தோற்றத்தையும் நீங்கள் தியானிக்கும் பொழுது இதைப்புரிந்து கொள்ளலாம். வெளி 10 : 1 பலமுள்ள தூதன், ஏழாம் சபைக்காலத்தூதன் பூமியில் இருந்தபோது இறங்கி வந்தார். இறங்கி வந்த அவர் 28.02.1963 முதல் 24.12.1965 அதாவது சகோ பிரன்காம் கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்த நாள் வரை எங்குச்சென்றார்? என்ன செய்து கொண்டு இருந்தார்? பலமுள்ள தூதன் சகோ. பிரான்காம் நித்திரை அடைந்த பிறகு கிறிஸ்துவின் மணவாட்டியோடு இருக்கிறார் என்றால் சகோ. பிரான்காம் நித்திரை அடையும் வரை கிறிஸ்துவின் மணவாட்டியோடு இருந்தது யார்? இப்படிப்பட்ட பல கேள்விகளுக்கு இவர்கள் பதில் கொடுக்கமுடியுமா? நிச்சயமாக கொடுக்க முடியாது. பாருங்கள் இவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு உபயோகம் இல்லாதவர்கள். ஆதலால் தான் இவர்கள் தாறுமாறாய் நடக்கிறவர்கள். தேவன் இவர்கள் மத்தியல் தாறுமாறுவின் ஆவியை அனுப்பியுள்ளார். 1965 க்கு பிறகு ஏழாம் தூதன் மரித்தபிறகு என எழுதுகிறார். ஏழாம் தூதன் எப்பொழுது மரித்தார்? அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றபோது அல்லவா? இப்பொழுது ஏழாம் தூதன் மரித்த நிலையிலா இருக்கிறார்? நோ, நோ. மரணம் - பிரிவு அல்லவா? அவர் செய்த பாவங்களுக்காக மரணம் அவருடைய ஞானஸ்நானத்தில் முடிந்துவிட்டது? பின் இப்பொழுது என்ன மரணம்? அவர் நித்திரையில் தான் இருக்கிறார். பிரதான தூதனுடைய சத்தத்தின் நாளில் தன் நித்திரையை விட்டு எழுந்திருப்பார். நித்திரையில் இருப்பவரை, மரித்த நிலையில் இருக்கிறார் என எழுதுகிறாரே? என்ன தேவதூஷனம்? இது எல்லாம் என்ன? தன்னை குறித்து மேன்மை பாராட்டல்.

84. இவர்கள் தங்கள் சுய விளம்பரத்திற்காக கர்த்தடைய தசமபாகத்தை ஐந்து வகை ஊழியங்களுக்கு பகிர்ந்து கொடுக்காது, அதைத் தங்கள் மனம் போனப்போக்கில் தங்களுக்கு ஒரு கட்டிடத்தை கட்டி தங்கள் பெயரில் தக்க வைத்துக் கொள்கிறார்கள். சுய விளம்பரத்திற்காக காலண்டர்கள் வெளியிட்டு பந்தா ஊழியம் செய்கிறார்கள். இவர்கள் உழைத்து பணம் சம்பாதித்து அல்லது தங்கள் சொத்து சுகங்களை விற்று அதன் வரவைக் கொண்டு இப்படி பந்தா ஊழியம் செய்தால் அதை கேட்க எனக்கு உரிமையில்லை. ஆனால் இங்கு கர்த்தருக்குரிய தசமபாகம் அல்லவா சாத்தானுடைய உபதேசங்களுக்காக, ஒரு மனுஷனுடைய பந்தா ஊழியத்திற்காக செலவிடப்படுகிறது. இவர்கள் உங்களை நித்தியஜீவனுக்கு வழி நடத்த முடியாது. உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் மோசம் போக்கி, நீங்கள் நடக்க வேண்டிய வழிகளை அழித்துப் போடுகிறார்கள். ஆதலால் பிரியமானவர்களே, நீங்கள் அக்கிரமகாரர்களுடைய வஞ்சகத்திலே இழுப்புண்டு, நீங்கள் வேத வாக்கியங்களை, இக்காலத்திற்குரிய செய்தியை அறிந்திருக்கிற அறிவில் உறுதியாக இருந்து, சாத்தானின் கண்களில் வீழ்ந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். இவர்கள் தங்களுக்கு கிடைத்த வெளிப்பாடுகள் என கூறி மக்கள் விசுவாசத்தை திசை திருப்புகிறார்கள். இது தான் சாத்தான் வேலை.

ஆதலால் இவர்கள் தங்கள் பணிகளில் மும்முறமாக இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்க முடியாது. முடிவாக, இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு 2011 ஆண்டு காலண்டர் குறித்து : நமது நாட்டில் ஒரு பழமொழி உண்டு. "அதாவது ஒய்யாரக்கொண்டையிலே தாழம்பூவாம் ஆனால் உள்ளே இருக்கிறதாம் ஈறும் பேனும்" இந்த பழமொழிக்கு ஏற்றார்போல் வெளிப்புத்தோற்றத்தில் பல வரைபடங்களை கொண்ட, அட்டகாசமான, பந்தாக்காலண்டர். பல ஆயிரங்கள் கர்த்தருக்குரிய தசமபாகத்திலிருந்து செலவு செய்து இருக்கிறார்கள். ஆனால் அந்த காலண்டரின் அடக்கத்தை ஆராயும் போது அங்கு ஈரும் பேணும் தான் காணப்படுகிறது. ஆம் அசுத்தமானதிலிருந்து சுத்தமானதை பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ? ஒருவனும் இல்லை. ஆம் இவர்களிடமிருந்து நாம் எந்த நன்மையும் எதிர்பார்க்க முடியாது. இவர்கள் தாங்கள் கிரியைகளுக்கு என்றே நியமிக்கப்பட்டவர்களே. இவரது ஊழியத்தொடக்கமே வேதவாக்கியங்களுக்கு மாறாக இருந்தது. இப்பொழுது அதன் கனியை அவர் கொடுத்துவருகிறார். பொதுவாக இந்நாட்களில் மேய்ப்பர்களில் ஒவ்வொருவனும் தன் தன் வழியையும் அவனவன் தன் தன் மூளையிலிருந்து தன் தன் பொலிவையும் நோக்கிக் கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்திற்குரிய செய்திக்கும் மாறாக உபதேசம் பண்ணி, போதித்து, கிறிஸ்துவின் மணவாட்டியை விசனப்படுத்துவதோடு மாத்திரமல்ல, அவளுடைய மணவாளனையும் விசனப்படுத்துகிறார்கள். அவர் கோபம் கொள்ளாமலும், இவர்கள் தங்கள் வழியிலே அழியாதபடிக்கு, அவருடைய கோபம் பற்றி எரியும் முன் அவரை அண்டிக்கொண்டால் நலம் என இவர்களுக்கு ஆலோசனை கூறுகிறேன்.

85. வேதவாக்கியங்களில், இக்காலத்திற்குரிய செய்தியில் காணப்படாத மாறுபாடான, போதனைகளை, உபதேசங்களை கொண்டு தேவனுடைய மந்தையை பழாக்கி கொண்டு இருக்கும் அபத்தமான மேய்ப்பர்களுக்கு ஐயோ! இவர்களுடைய பற்களுக்கு இரையாக சிக்கி, தவித்துக்கொண்டிருக்கும் ஆத்தமாக்களுக்காக பரிதாபப்படுகிறேன். நலமில்லாத வழிகளிலிலே, தன் வழிகளின்படி நடந்து மாயைப்பின்பற்றும் ஒரு மேய்ப்பனாக ஜான்ஐசக் அவர்களை நான் வேதவாக்கியங்களில் அடிப்படையில் காண்கிறேன். தம்பி, உங்கள் இருதயம் உங்களை கர்வம் கொள்ளப்பண்ணிற்று. நீங்கள் உங்கள் பார்வைக்கு ஞானியாகவும், உங்கள் என்னத்திற்கு புத்திமானாகவும் இருக்கிறீர்கள். நங்கள் தீமையை நன்மை என்றும், நன்மையை தீமை என்றும், இருளை வெளிச்சம் என்றும், வெளிச்சத்தை இருளுமாக பாவித்து, கசப்பை தித்திப்பும், தித்திப்பை கசப்புமென்று சாதிக்கிறதென்ன? நீங்களும் உங்களை சார்ந்த சபையாரும் உங்கள் பந்தயப்பொருளை இழந்துபோகாதபடிக்கு பொல்லாப்பை தேடிக்கொள்ளாதீர்கள். இந்த செய்தியின் முடிவில் எனக்கு பிரியமானவர்களே இந்த இதழ் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளனும், கொள்ளைக்காரனுமாகிய மேய்ப்பன் பற்றி எழுதிஅவர்களை அடையாளம் காட்டியுள்ளேன். அவர்களைக்குறித்து உங்களுக்கு விவரித்து சொன்னாலும் நீங்கள் விசுவாசிக்க மாட்டார்கள் என்று எழுதியிருக்கிறபடி உங்களுக்கு நேரிடாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். இவர்கள் கண்ணியிலிருந்து உங்களை விடுவித்துக்கொள்ளுங்கள். பாருங்கள் இந்த மேய்ப்பர்கள் ஆட்டுத்தொழுவத்திற்குள் வேறுவழியாய் ஏறிய கள்ளனும், கொள்ளைக்காரனுமாயிருந்துக்கொண்டு, ஒரு காகமாக இருந்துக்கொண்டு மயில் இறகை போர்த்திக்கொண்டு, தங்களை ஒரு மயிலாக காட்ட முயற்சிக்கிறார்கள். தாங்கள் ஒரு ஓநாயாக இருந்துக்கொண்டு, ஆட்டுத்தோலை போர்த்திக்கொண்டு தங்களை ஒரு ஆடாக காட்ட முயற்சிக்கிறார்கள். பிரியமானவர்களே, நீங்கள் உங்கள் ஊழியத்தின் பாதையில் ஒன்றுக்காக முயற்சிக்கவேண்டிய தேவையில்லை. அது உங்களை எடுத்து பயன்படுத்தும் தேவனுடைய காரியம். ஏனென்றால் நீங்கள் அவரை தெரிந்துக்கொள்ளவில்லை. அவர் உங்களை தெரிந்துக்கொண்டார். யோ 15 : 16. ஆதலால் பிரியமானவர்களே மயிலின் இறகை போர்த்திய காகத்தைக்குறித்தும், ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாயை குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்.

86. ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல் வழியாய் பிரவேசிக்கிறவன் ஆடுகளின் மேய்ப்பனாய் இருக்கிறான். வாசலை காக்கிறவன் அவனுக்கு திறக்கிறான். ஆடுகளும் அவன் சத்தத்திற்கு செவிக்கொடுக்கிறது. அவன் தன் ஆடுகளை பேர்சொல்லி கூப்பிட்டு அவைகளை வெளியே நடத்திக்கொண்டு போகிறான். ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறப்படியால் அவனுக்குப்பின் செல்கிறது. அந்நியனுடைய சத்தத்தை அறியாதபடியினால் அந்நியனுக்கு பின் செல்லாமல் அவனை விட்டு ஓடி போகிறது . பாருங்கள் இந்த ஆடுகள் தேவனுடைய வார்த்தைக்கும் இக்காலத்திற்குறிய செய்திக்கும் மாத்திரமே செவி கொடுக்கும். அந்நிய உபதேசங்களுக்கு செவி கொடுக்காது. 1 தீமோ 3 அதி, தீத் 1 அதி, 1 பேது 5 அதி ல் கூறப்பட்டுள்ள தகுதிகளை உடையவனாக கர்த்தால் ஏற்படுத்தப்பட்ட மேய்ப்பனே ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல் வழியாய் பிரவேசிக்கிற மேய்ப்பன். இந்த தகுதிகள் உங்கள் மேய்ப்பன் இடத்தில் காணப்படவில்லையென்றால் அவன் ஆட்டுத்தொழுவத்துக்குள் வேறு வழியாய் ஏறிய கள்ளனேயன்றி வேறு யாரும் இல்லை. அப்படிப்பட்ட மேய்ப்பர்களைக் கொண்ட சபையை விட்டு விலகி இரட்சித்துக்கொள்ளுங்கள். ஒரு மேய்ப்பன் தன் தாயின் வயிற்றில் உருவாகும் முன்னே ஒரு மேய்ப்பனுக்குரிய பண்புகளையம், குணதிசயங்களையும் உடையவனாக

தேவனால் அறியபட்டு ஏற்படுத்தப்படுகிறான். இது ஒரு மேய்ப்பனிடமிருந்து பிரிந்து அங்கிருந்து சில ஆத்துமாக்களை திருடி வந்து தன்னை மேய்ப்பனாக்கிக் கொள்ளும் ஊழியம் அல்ல. தன் இளம் பிராயம் முதல் முதிர் வயது வரை. இப்பிரபஞ்சத்தில் மனுஷருடைய இராஜ்யத்தில் பணிபுரிந்து, தொழில் செய்து, ஓய்வு பெற்று, பின் கர்த்தர் என்னை ஊழியத்திற்கு அழைத்துள்ளார் எனக்கூறி ஊர் ஊராக சுற்றுவது கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஊழியம் அல்ல. கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராகிய சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிப்பட்ட அலைகிறவர்களாய் இல்லாமல் அன்புடன் சத்தியத்தை கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளர்கிறவர்களாய் இருக்கும் படிக்கு உங்களை சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி நிலை நிறுத்துவாராக.

87. ஒரு உண்மையும் உத்தமுமான மேய்ப்பனுக்குரிய வெகுமதிகளை பாருங்கள். உங்களிடத்தில் உள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும்: அவலட்சனமான ஆதாயத்துக்காக அல்ல, உற்சாக மனதோடும் : சுதந்தரத்தை இருமாப்பாய் ஆளுகை செய்கிறவனாக அல்ல, மந்தைக்கு மாதிரியாகவும் கண்காணிப்பு செய்யுங்கள். அப்படிசெய்தால் பிரதான மேய்ப்பன் வெளிப்படும் போது மகிமையுள்ள வாடாத கிரிடத்தை பெறுவீர்கள். 1 பேதுரு 5 : 2-4. ஆம், கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட மேய்ப்பன் இந்த வாடாத கிரீடத்தை பெற சுதந்தரவாளியாயிருக்கிறான். இவர்கள் தான் வாசல் வழியாய் பிரவேசிக்கிற மேய்ப்பர்கள்.

88. மேலும் கவனியுங்கள். இதுக்குறித்து சகோ. பிரான்காம் **மயக்கி இழுக்கும் ஆவிகள்** என்ற தலைப்பின் செய்தியில் பத்தி 73 ல் 24.07.1955 அன்று பேசுவதையும் தியானியுங்கள். இது 1958 க்கு முன்பே நடந்தது. அங்கு, இன்று மயக்கி இழுக்கும் ஆவிகள், நய வஞ்சக ஆவிகள் தேவனுடைய தசமபாகத்தை ஆசாரியர்களுக்கு (5 வகை ஊழியங்களில் உள்ளவர்களுக்கு) செல்வதற்கு பதிலாக, அதற்கு ஒரு மாற்று வழியை உண்டாக்கி அதை சபைக்கட்டிட நிதிக்காக பயன்படுத்துகிது. தேவனுடைய நித்திய தசமபாகத்தின் இடத்தை சபைக்கட்டிடமோ அல்லது வேறு எந்த விதமான செலவுகளுக்கோ பயன் படுத்தக்கூடாது என்ற கருத்தில் பேசுகிறார். ஆம் இன்று கூட அதே மயக்கி மயக்கி இழுக்கும் ஆவிகள் நயவஞ்சக ஆவிகள் தான் தேவனுடைய நித்திய தசமபாகத்தை ஆசாரியர்களுக்கு போகவிடாதபடி தடுத்து, அதற்கு மாற்று வழியை உண்டாக்கி சபைக்கட்டிட செலவுகளுக்கும், செய்தி புத்தகங்கள் வெளியிடுவதற்கும், வருடாந்திர காலண்டர்கள் போடுவதற்கும், கன்வென்ஷன்கள் நடத்துவதற்கும் இன்னும் அநேக ஊழியங்களுக்கும் செலவிடப்படுகின்றன. நான் வேதவாக்கியங்களின் இக்காலத்திற்குரிய செய்தியின் அடிப்படையில் கர்த்தருக்குரிய தசமபாகத்தை 5 வகை ஊழியத்தில் உள்ள ஆசாரியர்களுக்கு மட்டுமேயன்றி இதர சபைக்கடுத்த எந்த காரியங்களுக்கும் பயன்படுத்தக்கூடாது. சபைக்கு கட்டிடம் கட்டவும், உபயோகிக்கூடாது என்று எழுதி வருகிறேன். மேலும் அரசாங்கப் பணிகளில், தனியார் நிறுவனங்களில் பணிசெய்து வருபவர்கள் தங்களை அப்பணிக்கு என்று அர்ப்பணித்து உள்ளவர்கள், கர்த்தர் தமது சரீரமாகிய சபை பக்தி விருத்தி அடைய ஏற்படுத்திய 5 வகை ஊழியங்களில் பங்கு கொள்ள முடியாது எனவும் உபதேசம் செய்து வருகிறேன்.

89. நான் இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள நம்முடைய சகோதரர்களுக்கு, ஊழியக்காரர்களுக்கு எப்பொழுதும் விரோதமாக நிற்கிறேன் என்று பலர் எண்ணுகின்றனர். அது தவறு. என் இருதயத்தை தேவன் அறிவார். நிச்சயமாக நான் நம்முடைய சகோதரர்களுக்கும், ஊழியக்காரர்களுக்கும் விரோமதானவன் அல்ல. தேவனுடைய வார்த்தை, இக்காலத்திற்குரிய செய்தி, நாம் சகோதரர்களாக இராத படிக்கு நம்மை பிரிப்பதில்லை. மாறாக தேவனுடைய வர்த்தையின் பெயரில் இக்காலத்திற்குரிய செய்தியின் பெயரில் அவர்கள் கொடுள்ள மாறான, தவறான போதனைகள், உபதேசங்கள், கிரியைகள் தாம் நாம் சகோதரர்களாக இராதபடிக்கு நம்மை பிரிக்கின்றன. இந்நிலையில் நான் முன்பு வசித்து வந்த சென்னீர்குப்பம் என்ற இடத்தில் இருந்து ஒருவர் எனக்கு சகோ. பிரான்காம் செய்தியில் இருந்து ஒரு சிறு தொகுப்பை அனுப்பி, நான் போதித்து வரும் மேற்கண்ட ஒரு உபதேசங்களும் தவறு என சுட்டிக்காட்டுகிறார். அவர் கூற விரும்புவதாவது சகோ. பிரான்காம் இந்த இரு காரியங்களை தன் ஊழியத்தின் பாதையில் செய்து வந்தார் என்பதாகும். அதாவது அவர் அரசாங்க பணிகளில் இருந்து கொண்டு ஊழியம் செய்தார். கர்த்தருக்குரிய தசமபாத்தை கொண்டு சபைக்கு கட்டிடம் கட்டினார் என்று கூறுகிறார். நல்லது. நான் இந்த நபரைக்குறித்து ஒன்றும் அறியேன். அவர் எனக்கு எழுதிய தபாலில் அவரது விலாசம் புரிந்துக்கொள்ளும் அளவுக்கு இல்லை. ஆதலால் அவரிடம் தொடர்புகொள்ளவும் முடியவில்லை. மேலும் அந்த பகுதியில் நான் 5 வருடங்களாக குடியிருந்து வந்தேன். அவரும் அதே பகுதியில் இருப்பதால் என்னை ஏன் ஒருபோதும் வந்து சந்திக்கவில்லை? என்னை அவர் அறிந்திருந்தினால் தான் எனது விலாசத்தை சரியாக எழுதி தபால் அனுப்பியுள்ளார் அல்லது வேறு ஒருவருடைய தூண்டுதலின் பெயரில் தபால் அனுப்பியுள்ளாரா எனவும் தெரியவில்லை. தேவன் அறிவார். இவர் தனக்கு சாதகமாக சகோ. பிரான்காம் பிரசங்கித்த Queen of the South, Green Ville SC. Friday என்ற செய்தியில் 5 வது பத்தியை எடுத்து உபயோகித்துள்ளார். இந்த செய்தி 20.06.1958 அன்று பிரசங்கிக்கப்பட்டது. அதில் கீழ்க்கண்டவாறு பிரசங்கித்துள்ளார். I worked seventeen years as game warden and for a

electrician, as a public service company, and pastored the Baptist Tabernacle at Jeffersonville, taking what tithe that was giving in, never even seen it, passed right through the church, and build the church and soforth.

இதில் இருந்து இவர்கள் போதிப்பது :

அ) சகோ. பிரன்காம் அரசாங்க பணியில் சுமார் 17 ஆண்டுகள் இருந்தார்.

ஆ) அவர் தம்முடைய சபையில் பாஸ்டராகவும் இருந்தார்.

இ) கர்த்தருடைய தசமபாகத்தை கொண்டு தன் சபைக்கட்டிடத்தைக் கட்டினார்.

ஈ) சகோ. பிரான்காமுக்கு 1958 ல் வயது 49. சகோதரின் பிறப்பு 1909. ஆக 1958 - 1909 = 49 ஆண்டுகள். அவர் 22 வது வயதில் ஊழியத்தை ஆரம்பித்தார். 1958 ல் 27 ஆண்டுகள் ஊழியத்தை கொண்டவராக இருந்தார். பரியமானவர்களே, என்னுடைய ஆங்கில அறிவு மிக மிக குறைவு. இங்கு சகோதரர் தனது 27 ஆண்டு ஊழியத்தில் 17 ஆண்டுகள் பணியில் இருந்ததாக அதே நேரத்தில் சபை பாஸ்டராக இருந்ததாகவும் 1958 ல் கூறுகிறார். அடுத்து சபை பாஸ்டர் என்ற முறையில் தனக்கு வந்த தசமபாகத்தை அது எவ்வளவு என்பதை தன் கண்களால் பார்த்தும் இல்லை என்கிறார். தனக்கு கிடைக்கும் தசமபாகம் மற்றும் காணிக்கைகளை அப்படியே சபைக்கு கொடுத்துவிட்டதாகவும் கூறுகிறார். அதில் இருந்து சபைக் கட்டிடத்தை கட்டியதாகவும் கூறுகிறார். சரிதானே, ஆனால் இவைகள் யாவும் எப்பொழுது நடந்தது? அவர் ஒரு பாப்டிஸ்ட் ஆக இருந்தபோது தான். பாப்டிஸ்ட் சபையை விட்டு வெளியே நடந்த பின் அவருடைய ஊழியத்தின் பாதையில் பல மாற்றங்கள் ஏற்பட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்பொழுது அவர் உங்களையும் என்னையும் மாதிரி ஏழாம் சபைக்கால செய்தில் இருந்த கொண்டு ஒரு தீர்க்கதரிசியினால் வழிநடத்தப்பட்டு அவர் இத்தனைக்காரியங்களையும் செய்யவில்லை. நாம் காலத்தையும் நேரத்தையும் கவனிக்க வேண்டும்.

90. மேலும் கவனியுங்கள் இதுக்குறித்து சகோ. பிரன்காம் **மயக்கி இழுக்கும் ஆவிகள்** என்ற தலைப்பின் செய்தியில் பத்தி 73 ல் 24.7.1955 அன்று பேசுவதையும் தியானியுங்கள். இது 1958 க்கு முன்பே நடந்தது. அங்கு, இன்று மயக்கி இழுக்கும் ஆவிகள், நயவஞ்சக ஆவிகள் தேவனுடைய தசமபாகத்தை ஆசாரியர்களுக்கு (5 வகை ஊழியங்களில் உள்ளவர்களுக்கு) செல்வதற்கு பதிலா, அதற்கு ஒரு மாற்று வழியை உண்டாக்கி அதை சபைக்கட்டிட நிதிக்காக பயன்படுத்துகிறது. தேவனுடைய நித்திய தசமபாகத்தின் இடத்தை சபைகட்டிடமோ அல்லது வேறு எந்த விதமான செலவுகளுக்கோ பயன்படுத்தக்கூடாது என்ற கருத்தில் பேசுகிறார். ஆம், இன்று கூட அதே மயக்கி இழுக்கும் ஆவிகள், நயவஞ்சக ஆவிகள் தான் தேவனுடைய நித்திய தசமபாகத்தை ஆசாரியர்களுக்கு போக விடாதபடி தடுத்து, அதற்கு மாற்று வழியை உண்டாக்கி சபைக்கட்டிட செலவுகளுக்கும், செய்தி புத்தகங்கள் வெளியிடுவதற்கும், இன்னும் அநேக ஊழியசெலவுகளுக்கும் பயன்படுத்துவது வேதபூர்வமாகாது. ஆக சகோ. பிரன்காம் 1955 ல் தேவனுடைய தசமபாகத்தை சபைக்கட்டிடங்களுக்கும் இதரசெலவுகளுக்கும் பயன்படுத்தக்கூடாது என்று கூறிவிட்டு 1958 ல் தேவனுடைய தசமபாகத்தை சபைக்கட்டிட நிதிக்கு பயன்படுத்தினேன் என்று கூறுவாரா? இது முரண்பாடாக இருக்காதா? அப்படியானால் நடந்தது என்ன? இது ஆவியில் என் யூகம். தேவனுடைய தசமபாகத்தில் தனக்குரிய பங்கு கிடைத்த பிறகு, அதை தனக்காக எடுத்துக்கொள்ளாது, சபைக்கட்டிடத்திற்கு, சபைக்கு முற்றிலுமாக அர்ப்பணித்தார் என்றே அது பொருள்படும். அவ்வாறாக செய்ய அவருக்கு உரிமை உண்டு. இது வேதவாக்கியங்களுக்கு முறனாகாது. பாருங்கள், எனது இரு குமாரர்களும் தங்களுக்குரிய ஆவிக்குரிய மன்னாவை என்னிடம் இருந்து பெற்று வருகிறார்கள். இருவரும் ஒரு வழியில் தங்களுடைய தசமபாகத்தை கர்த்தருக்கு கொடுக்க அது மறுவழியில் எனக்கு வந்து சேருகிறது. நான் அதை எனக்கென்று எடுத்துக்கொள்ளாமல் கர்த்தருடைய ஊழியத்துக்காக அதை செலவு செய்கிறேன். கர்த்தருக்குரியது, எனக்குரியதாக மாற்றப்பட்ட பின் நான் அதை என் இஷ்டப்படி செலவு செய்யலாம் அல்லவா? அது எனக்குரிய சுயதீனம் அல்லவா? ஒரு பாஸ்டர் நேரிடையாக சபைக்கு வரும் கர்த்தருக்குரிய தசமபாகத்தை எடுத்து அதை சபைக்கட்டிட நிதிக்காகவோ அல்லது புத்தக பிரிண்ட் பணிக்காகவோ செலவு செய்ய முடியாது. கர்த்தருக்குரிய தசமபாகத்தில் இருந்து அவருக்குரிய பங்காக அவர் பங்கு அவரிடம் சென்ற பின், அவர் அதை மேற்கண்ட பணிகளுக்கு செலவு செய்யலாம். அது அவர் உரிமை. சகோ. பிரன்காம் அதைத்தான் செய்தார் என்பது என் கணிப்பு.

91. ஆக சகோ. பிரன்காமின் செய்தியிலிருந்து இந்த பகுதிகளை எடுத்துக்காட்டி கர்த்தருக்குரிய தசமபாகத்தை சபைக்கட்டிட நிதிக்காக உபயோகப்படுத்தலாம் என்று நீங்கள் போதிக்க முடியாது. இது தான் மயக்கி மயக்கி இழுக்கும் சாத்தானுடைய வஞ்சிப்பு. அவன் உங்களை வசீகரித்து ஏவாளை வஞ்சித்தது போல உங்களையும் வஞ்சிக்கிறான். ஏவாள் தேவனுடைய வார்த்தையை மீறினதாக நினைக்கவில்லை. ஆனால் சாத்தானுடைய வஞ்சக வலையில் விழுந்து மீறுதலுக்குட்பட்டாள். நீங்களும் அதே நிலையில்தான் இருக்கிறீர்கள். மேலும் சாத்தான் இயேசுவை அன்று **என்பதாய் எழுதியிருக்கிறதே** என்று கூறி அவரை வஞ்சிக்க நினைத்தான். ஆனால் அவரோ அவனுக்கு மறுமொழியாக **என்றும் எழுதிருக்கிறதே** என்று கூறி சாத்தானை மடங்கடித்தார். அதை தான் நானும் இந்த பகுதியின் வாயிலாக எனக்கு எழுதிய சகோதரனுக்கு

பதில் கூறுகிறேன். முடிவாக 15.10.1961 ல் சகோ. பிரன்காம் தனது **கே.ப** 161 ல் சபைக்கட்டிட நிதிக்காக கர்த்தருக்குரிய தசமபாகத்தை உபயோகப்படுத்துவது தவறு, அது சபை போதகரின் ஜீவனத்துக்குரியது. அது அவருக்கே செல்ல வேண்டும். இது தேவப்பூர்வமானது என பத்தி 180 ல் கூறி முடிக்கிறார். ஆதலால் எனக்கு பிரியமானவர்களே, நீங்கள் உங்கள் அக்கிரம செய்கைகளில் இருந்து மனம் திரும்ப மாட்டீர்களா? உங்களை மயக்கி மயக்கி இழுக்கும் ஆவி, நயவஞ்சக ஆவி வழி நடத்துவதை இன்னும் அறியாதிருக்கிறீர்களா? ஒரு முறை தான் வஞ்சிக்கப்பட்டீர்கள். மறுமுறையும் அதே வஞ்சக வலையில் விழுந்துக் கிடக்கிறீர்கள். அந்த வஞ்சக ஆவி உங்கள் விடாப்பிடியாக பிடித்துக் கொண்டது. இந்நாட்களின் உங்கள் பெலன் தேவனால் உண்டாயிற்று என்று சொல்லி சொல்லி, மிஞ்சி மிஞ்சி போய் குற்றவாளிகளானீர்கள்.

92. நீங்கள் சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பிறகும் உங்கள் ஆசையை, இச்சைகளை நிறைவேற்ற பற்பல காரியங்களுக்கு கர்த்தருக்குரிய தசமபாகத்தை உபயோகப்படுத்துவதால் கர்த்தருடைய கரத்தினால் அநேக அடிகளுக்கு பாத்திரவான்களாக இருக்கிறீர்கள் என்பதை மறவாதீர்கள். அடுத்து மத் 6:24,2 தீமோ 2 :4,5 போன்ற வாக்கியங்கள் தேவஆவியினால் அருளப்பட்டுள்ளது. இதற்கு யாருடைய வியாக்கியானமும் தேவை இல்லை. இதன்படி இரு எஜமான்களுக்கு ஒருவன் ஊழியம் செய்யக்கூடாது. முடியாது. இந்த உலகத்தில் இரு எஜமான்கள் உண்டு. ஒன்று இந்த உலகத்தின் அதிபதியாகிய பிசாசு. சாத்தானின் ஏதேனில் தான் நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம். அடுத்தது இந்த உலகத்தை தம்முடைய வார்த்தையினால் சிருஷ்டித்த தேவனாகிய கர்த்தர். அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. இருவரையும் ஒரே நேரத்தில் நீ உன் முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், மனதோடும், பலத்தோடும் சேவிக்க முடியாது . அன்பு செலுத்த முடியாது. ஏதாவது ஒருவரை சார்ந்திருக்கதான் முடியும். நீ இந்த உலகத்தின் அதிபதிக்கு ஊழியம் செய்துக் கொண்டு அதே வேளையில் தேவனுக்கும் ஊழியம் செய்யமுடியவே முடியாது. நீ இருவரையும் முழு மனதோடு சேவிக்கிறேன் என்பதால் மயக்கி மயக்கி இழுக்கும் ஆவி, நயவஞ்சக ஆவி உன்னை ஆட்கொண்டுள்ளது என்பதே அதன் பொருள். நீ தேவசித்தத்துக்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறாய். ஆதலால் நீ மனந்திரும்பு. உனக்கு கிருபையாக கொடுக்கப்பட்ட இந்த நேரத்தை வீணாக்காதே. சகோ. பிரன்காம் 22 வயதிலே பாஸ்டர் ஊழியம் செய்தார். ஆதலால் நானும் செய்கிறேன் என்கிறீர்கள். ஆனால் தன் சொந்த குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் அவன் தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான் என தேவனுடைய வார்த்தை கூறுகிறது. (1 தீமோ 3 : 57) சகோ. பிரன்காம் பிறப்பு 06.04.1909. திருமணம் 22.06.1934. ஊழியத்தின் பாதையில் அனைத்து காரியங்களுக்கும் சகோ. பிரன்காமை எடுத்துக்காட்டாக வைத்து, அதே வேளையில் ஊழியங்கள் யாவும் வேதவாக்கியங்களின் அடிப்படையில் இருக்கிறதா என்பதை மாத்திரம் கவனியுங்கள். நாம் அனைவரும் தவறுகளுக்கு உரியவர்கள். ஒருவர் அறிந்தோ அறியாமலோ செய்த தவறை மற்றொருவர் பின்பற்றக்கூடாது. ஒன்று தவறு என்பதை தேவனுடைய வார்த்தையைக்கொண்டு நிதானித்து அறிந்த பின் அதிலிருந்து நம்மை திருத்திக்கொள்ளவேண்டும். அவர் செய்தார், ஆதலால் நானும் செய்கிறேன் என்ற சாக்கு போக்கு கூடாது. இதோ சகோ. பிரன்காம் ஆரம்பத்தில் மர பலகையினால் ஆன வீட்டில் குடியிருந்தார். பின் பங்களா வசதிக்கு சென்றார். அது போல நானும் தொடக்கத்தில் மர பலகையினால் ஆன வீட்டில் வசித்தேன் இப்போது மாடி வீட்டில் வாசம் பண்ணுகிறேன். அவருக்கு மீசையும், தாடியும் இல்லை. அவரை போலிருக்க நானும் மீசையும், தாடியும் வைப்பதில்லை. அவர் சூட் கோட் அணிந்து வந்தார். நானும் அவரை போல் ஆடைகள் அணிந்து பிரசங்கம் செய்ய மேடைக்கு செல்கிறேன். அவருடைய மகன், மகள் பெயர்களையே என் பிள்ளைகளுக்கும் சூட்டியுள்ளேன். நானும் சபைக்கு வரும் போது அவரை போன்று பிரசங்க நேரத்தில் மட்டும் வந்து செய்தியை பிரசங்கிப்பேன். அவர் திருமண நேரத்தில் மணமகன், மணமகள் இருவரையும் முத்தமிட வைப்பார். அவரைப்போன்று நான் நடத்தும் திருமண வைபவங்களில் மணமகன், மணமகள் இருவரையும் முத்தமிட வைப்பேன். அவர் தன் ஊழியத்தின் பாதையில் பற்பல முதன்மையான பணிகளுக்கு தன் பிள்ளைகளை நியமித்தார். அவரைப்போன்று நானும் சபைக்கடுத்த அனைத்து பதவிகளிலும் என் குடும்பத்தினரையே நியமித்துள்ளேன் என்கிறீர்கள். இப்படியாக **அனைத்து காரியங்களிலும் சகோ. பிரன்காமைப்போன்று நானும் செய்கிறேன் என் கூறி அவரை போன்று ஒன்றை பாவனை செய்து நடிப்பது போலிகளின் நடவடிக்கையாகும். அது மயக்கி இழுக்கும் நயவஞ்சக ஆவியின் காரியமே.** நித்தமும் தேவனுடைய வார்த்தையையும், இக்காலத்திற்குரிய செய்தியையும் புரட்டி தேவனுக்கும் தீர்க்கதரிசிக்கும் தீங்கு செய்வதே இவர்கள் முழு எண்ணமாயிருக்கிறது. ஆதலால் பிரியமானவர்களே நீங்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்து, அதன்படி நடவுங்கள். உங்களுக்கு அதில் நித்திய ஜீவன் உண்டு. மற்ற படி உங்களுக்கு மரணம் தான் நேரிடும். இப்பொழுது ஜீவனும் மரணமும் உங்கள் முன் இருக்கிறது. தெரிந்துக்கொள்வது உங்கள் சுயாதீனம். கிறிஸ்து இயேசுக்குள்ளான உங்கள் அனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக.

கிறிஸ்துவின் அன்பில்
**சகோ. காலேப் யோசுவா**

## ஓராண்டிற்கு மேல் நீடித்து வந்த தடைகள் நீங்கியது :

இப்பொழுது உங்கள் கரங்களில் வந்தடைந்துள்ள இந்த இதழ் 2011 மார்ச் - ஏப்ரல் மாதங்களில் நீங்கள் ஆவிக்குரிய மன்னாவாக பெறவேண்டியதாயிருந்தது. வழங்கமாக தட்டச்சு செய்பவர் தன் வேலைபலு நிமித்தமாக எனக்கு தட்டச்சு செய்துக் கொடுக்க முடியாத நிலையில் இருக்க, நான் வேறொரு இடத்தில் தட்டச்சு செய்யலானேன். அவர்கள் மிக்க காலதாமதமாகிக்கொண்டே சென்றார்கள். இந்நிலையில் ஜூன் - செப்டம்பர் 2011 வரை நான் பலவீனப்பட்டேன். வீட்டை விட்டு வெளியே செல்லமுடியாத நிலை. மீண்டும் அக்டோபர் 2011 முதல் ஜனவரி 2012 வரையிலும் அவர்களால் தட்டச்சு செய்து கொடுக்கமுடியவில்லை. எனக்கு அலைச்சல் மற்றும் பணச்செலவு. இந்நிலையில் மீண்டுமாக முன்பு தட்டச்சு செய்தவரை நாட அவர் இந்த பணியை முடித்து தருவதாக கூறினார். அவர் மீண்டுமாக முழுவதையும் தட்டச்சு செய்யும் நிலை உருவானது. என்னால் மே மாதம் 2012 முழுவதும் வெயிலின் கொடுமையினால் வெளியே எங்கும் செல்ல முடியவில்லை. ஆக ஜூலை மாதம் கர்த்தரின் கிருபையினால் இந்த இதழ் வெளிவந்தது குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்.

## இரண்டு புதிய செய்திகள் துளிர்விட்டு வளர்ந்து வருகிறது :

1. மீண்டும் இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு 2012 ஆண்டு காலண்டர் (பிக்சர் ஆல்பம்) ஒன்று எனக்கு வருட தொடக்கத்தில் கிடைத்தது. 2011 வது ஆண்டு அக்கிரமங்கள் தான் மீண்டும் தொடர்ந்து காணப்படுகிறது.

2. இந்நிலையில் பெயர், விலாசம் இல்லாத வெளி 22 : 17 யை சுட்டிக்காட்டி தேவனுடைய வார்த்தை தூஷிக்கப்படும் வண்ணமாக **மணவாட்டி ஊழியம்** என தங்கள் ஊழியத்தை அழைத்துக்கொண்டு, ஒரு சில தீர்க்கதரிசியின் செய்திகளை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிப்பெயர்த்து, வெளியிட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். இவர்களது **திடீரென்று சபையானது இரசியமாக மறைந்து போகுதல்** மொழிப்பெயர்ப்பை படிக்க நேர்ந்தது. தொடக்கம் முதல் முடிவு வரை ஆவியானவருடைய வழிநடத்துதல் எனக்கு கிடைக்கவில்லை. காரணம் ஆங்காங்கு பல தவறுகளை கண்டேன்.

3. இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு, மணவாட்டி ஊழியம் பொழிப்பெயர்ப்பு குறித்து அடுத்த இதழில் எழுதுகிறேன். செய்தி தொகுப்பு எழுதி முடிக்கும் நிலையில் உள்ளது. இரண்டும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான் என்பது எனது பாரபட்சமற்ற கணிப்பு.

4. அடுத்து இனி சம்பவிக்கவேண்டிய **கர்த்தருடைய வருகை** குறித்து பற்பல மாறுபாடான உபதேசங்களை நம் மத்தியிலும், ஸ்தாபன சபைகள் மத்தியிலும் காண்கிறேன். ஆதலால் இது குறித்தும் ஒரு செய்தி எழுத உள்ளத்தின் ஆழத்திலிருந்து மிக்க பாரப்பட்டவனாக இருந்தேன். கர்த்தருடைய வருகை குறித்து எழுதவும் ஆரம்பித்துவிட்டேன். ஆக துளிர்விட்டு வளர்ந்து வருகிற இந்த இரு கன்றுகளும் வளர்ச்சியடைந்து, ஏற்றக்காலத்தில் அதனதன் ஆவியிக்குரிய கனிகளை (ஆகாரத்தை / மன்னாவை) உங்களுக்கு கொடுக்க உள்ளத்தில் பாரம் உள்ளவர்கள் எனக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். உங்களுடைய ஜெபமும் எனது தேவைகளில் ஒன்று.

கிறிஸ்துவின் அன்பில்
**சகோ. காலேப் யோசுவா**